

கல்கி
KALKI 13.5.90 ரூ. 2.50
இலவச
இணைப்பைக்
கேட்டு
வாங்குங்கள்
யற்கை பானங்கள் ஆபத்தானவையா?

பானி மிக்ஸ்

உடனடியாகத் தயாரிக்கக்கூடிய பாரிட்ஜ்.


தானியங்கள், பழங்கள், முந்திரி கலந்த ஆகாரம்.

பானி மிக்ஸ் கோதுமை, சோளம், அரிசி, மாம்பழம், ஆப்பிள், பேரிச்சை, திராட்சை மற்றும் முந்திரி போன்ற வையிலான ஊட்டமிகு, எளிதில் ஜீரணிக்கக்கூடிய பாரிட்ஜ் ஆகாரம். குடும்பத்தினருக்கு காலைச் சிற்றுண்டிக்கும் மாலையில் பள்ளி அல்லது அலுவலக வேலைகளுக்குப் பின் அளிக்கவும் உகந்தது. முதியோருக்கும் நோயிலிருந்து குணம் அடைவோர்க்கும் ஏற்ற உணவு.




நிமிடங்களில் தயார்

பானி மிக்ஸை விரைவாகவும், எளிதாகவும் தயாரிக்கலாம்.




கிண்ணத்தில் தேவையான பானி மிக்ஸை எடுக்கவும்.



அதோடு முன்னமே கொதித்த பாலை போதுமான அளவு மெதுவாகச் சேர்க்கவும்.



மிருதுவான கிரீம் போன்ற பாரிட்ஜ் ஆகாரம் பெற மெதுவாகக் கலக்கவும்.



சுவையான ஒவ்வொரு ஸ்பூன் பாரிட்ஜ் உணவையும் உங்கள் குடும்பத்தினர் சுவைத்து மகிழ்வார்கள்.

பானி மிக்ஸ்

இந்தியாவிலேயே முதன் முறையாக!



உடல் நலத்தின் உறைவிடம் க்ளாக்ஸோ.

GL/2/88-TAM

சொத்துக் கணக்கு எங்கே?







● சாதாரணமாக உணர்ச்சிவசப்படாத அமைச்சர் மதுதண்டவதே, இ. காங்கிரஸ் உறுப்பினர் கே. வி. தாமஸ், 'தொழிலதிபர்கள் அரசையே விலைக்கு வாங்குவார்கள்' என்று ஏதோ சொல்லப் போக, கொஞ்சம் ஆவேசமாக, "கடவுளே இங்கே வந்தாலும் ஜனதா தள அமைச்சரவையை விலைக்கு வாங்க முடியாது!" என்றாராம். உடனே சபாநாயகரைப் பார்த்து, "இங்கே அவையில் இல்லாத கடவுளைப் பற்றிச் சொல்லுகிறேனே என்று நினைக்கக் கூடாது. கடவுள் எங்கும் நிறைந்திருப்பவர் என்று சொல்லப்படுகிறது. அதனால் அவையில் இல்லாத ஒருவரைப் பற்றிச் சொல்லி, பாராளுமன்ற விதியையும் மீறவில்லை!" என்றாராம் சாமர்த்தியமாக. கேள்வி கேட்ட கே. வி. தாமஸ் உட்பட எல்லோருமே சிரித்து விட்டார்களாம்.

● 'மைனாரிடி பிரதமர்' என்று முன்பு வி. பி. சிங்கை விமர்சித்தவர்கள் கூட "இப்போது ஓசைப்படாமல் தம்மை வலுப்படுத்திக் கொண்டு வருகிறார் வி.பி.சிங்" என்கிறார்கள். இதுவரை பிரதமர் வி. பி. சிங்கின் எதிர் அணியில் இருந்து வந்த யஷ்வந்த் சின்ஹா, இப்போது சந்திரசேகரிடமிருந்து சற்று விலகியே இருக்கிறாராம். ஒரு காலத்தில் தீவிர தேவிலால் — ஆதரவாளராக இருந்து வந்த ஜவுளித்துறை அமைச்சர் சரத் யாதவ், இப்போது வி. பி. சிங்கின் நெருங்கிய நண்பர். இவற்றை எடுத்துக் காட்டாகக் கூறுகிறவர்கள், அமைச்சரவையில் சந்திரசேகரின் ஆதரவாளர்களான சுபோத் காந்த், ஹரி கிஷோர் ஆகியோரையும் வி. பி. சிங் சேர்த்துக் கொண்டது மேலும் ஓர் உதாரணம் என்கின்றனர்.

● சூப்பர் - 301 என்பது அமெரிக்காவின் விசேஷ வர்த்தகச் சட்டம். இந்தியாவில் அயல்நாட்டு — குறிப்பாக அமெரிக்க — இன்ஷூரன்ஸ் நிறுவனங்கள் இயங்குவதற்கு அனுமதிக்க வேண்டும்; அந்நிய முதலீடுகளைத் தாராளமாக அனுமதிக்க வேண்டும்; இந்தியப் பொருளாதாரக் கொள்கை விதிகள் தளர்த்தப்பட வேண்டும் என்கிறது இந்தச் சட்டம். நம் நாட்டில் இன்ஷூரன்ஸ் அரசுடைமை ஆக்கப்பட்டிருக்கிறது. அந்நிய முதலீடுகள் 40 சதவிகிதத்துக்கு அனுமதிக்கப்படுகின்றன. அதிநவீன தொழில் நுட்பத் துறையில் மட்டுமே அந்நிய முதலீட்டு வரம்பை உயர்த்த இந்தியா தயாராக இருக்கிறது.

அதனால், 'நேர்மையற்ற வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பவர்கள்' என்று ஒரு பட்டியல் தயாரித்து, பிரேசில், ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளை மட்டும் அதில் வைத்திருந்தது அமெரிக்கா! இப்போது ஜப்பானும், பிரேசிலும் அமெரிக்காவுடன் வர்த்தக ஆலோசனையில் முன்னேற்றம் கண்டிருப்பதால், அந்தப் பட்டியலிலிருந்து அவை எடுக்கப்பட்டு, இப்போது தனியாக மாட்டிக் கொண்டு விழிப்பது இந்தியா மட்டும் தான்!

1990 ஜூன் 15 ஆம் தேதிக்குள் தீர்வு எதுவும் காணப்படாது போய் விட்டால், 1988 ஜூன் 15ல் கொண்டு வரப்பட்ட சூப்பர் — 301 விசேஷச் சட்டத்தின்படி, அமெரிக்காவின் வர்த்தகத் தடை நடவடிக்கைகளை இந்தியா சந்திக்க வேண்டியிருக்கும். அமெரிக்காவுக்கு நமது ஏற்றுமதிக்கு நூறு சதவிகித இறக்குமதி வரி விதிக்கப்படும். விலை அதிகரிக்க அந்நாட்டில் நமது ஏற்றுமதி வியாபாரம் படுத்துப் போகும். இது மாதிரி அச்சுறுத்தலான நடவடிக்கைக்கு இந்தியா பணிந்து போய் விடாது என்று சொல்லப்படுகிறது. நமது இடதுசாரி போக்குக்கு எதிரானவை. அரசியல் நோக்கமுள்ள பிரச்னை இது என்று கருதப்படுகிறது. இதனை அமுல்படுத்துவதில் ஜியார்ஜ் புஷ் அவ்வளவு தீவிரம் காட்ட மாட்டார் என்று கூடச் சொல்கிறார்கள்!

● ஜனதா தள தேர்தல் அறிக்கையின்படி எல்லா எம்.பி.க்களும், அமைச்சர்களும் தங்கள் சொத்து விவரங்களை அறிவிக்க வேண்டும். இதுவரை ஏன் ஒருவர் கூட இதைச் செய்யவில்லை என்று சுயேட்சை எம். பி. இந்திரஜித் ஒரு கேள்வி எழுப்பியிருக்கிறார். "யாருக்காவது இது நினைவு இருக்கிறதா?" என்று கேட்கிறார் இந்த எம்.பி.!

தொகுப்பு சித்தார்த்



நேபாள நிலைமை



நேபாளத்தில், காத்மண்டுவில் பணியாற்றி வரும் ஜெயராஜன், சென்ற வாரம் சென்னை வந்திருந்தார். அங்கே நடந்த ஜனநாயக ஆட்சி முறைக்கான போராட்டம், அதன் பின்னணி, இன்றைய நிலைமை பற்றிச் சொல்கிறார்...

* ஜெயராஜன்

● எப்போது போராட்டம் துவங்கியது?

இந்த வருடம் பிப்ரவரி மாதம் 18 ஆம் தேதி. அன்று தேசிய ஜனநாயக தினமாகக் கொண்டாடப்பட்டது. அந்த மக்கள் கூட்டத்தில் போலீஸ் சுட்டதில் ஹெடோடா என்ற இடத்திலும், பரத்பூரிலும் சிலர் இறந்தனர். பந்த் அறிவிக்கப்பட்டது. பிறகு தொடர்ந்து பரத்பூரிலும், ஜனக்பூரிலும், லலித்பூரிலும், கிர்த்திபூரிலும் மக்கள் போராட, ராணுவமும் போலீசும் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒவ்வோர் இடத்திலும் நிறையப் பேர் இறக்க நேரிட்டது.

● யார் இதைத் துவக்கினார்கள்?

திரிபுவன் பல்கலைக் கழக மாணவர்கள், பள்ளி — கல்லூரி ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், நர்சுகள், அரசுப் பணியாளர்கள் என்று மன்னராட்சியில் அதிருப்தி கொண்ட எல்லோருமேதான். ஆனால் முக்கியமாக, நேபாள காங்கிரஸும், இடதுசாரி முன்னணியும் இணைந்து இந்தப் போராட்டத்தை நடத்திச் சென்றது தான் வெற்றிக்குக் காரணம்.

● இவர்களில் குறிப்பிடத்தக்க தலைவர்கள் யார்?

நேபாள காங்கிரசில் கணேஷ் மான் சிங்கும், இப்போதைய பிரதமர் கிருஷ்ண

பிரசாத் பட்டராயும். இடதுசாரியில் மன் மோகன் அதிகாரியும், திருமதி சகானா பிரதானும்.

● எப்போது நிலைமை சீராகியது?

ஏப்ரல் 8 ஆம் தேதி மன்னர் வீரேந்திரா, நேபாள காங்கிரஸ் — இடதுசாரி தலைவர் களை அழைத்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். ஆனால் இதற்கு முன்னால் வீரேந்திரா, பிரதமர் லோகேந்திர பகதூர் சந்தை அழைத்துப் போராட்டக்காரர்களு டன் பேச்சு வார்த்தை நடத்தவும், நடந்து விட்ட துப்பாக்கிச் சூடு சம்பவங்களை விசாரிக்க ஒரு கமிஷன் அமைக்கவும் சொன் னார். அரசியலமைப்புச் சட்டத் திருத்தங் களுக்கு ஒரு குழு அமைப்பதாகவும் சொன் னார். ஆனால் 'பஞ்சாயத்' ஆட்சி முறை கலைக்கப்பட்டு, பல கட்சி ஜனநாயகம் அமைப்பதாக ஏப்ரல் 8 ஆம் தேதி நள்ளிரவு அறிவித்த பின்னரே நிலைமை கொஞ்சம் சகஜமாயிற்று. கட்சிகள் மீது விதித்திருந்த தடையும் விலக்கிக் கொள்ளப்பட்டது.

● அதற்குப் பிறகும் போலீசுடன் பெரிய மோதல் இருந்ததே?

போலீசின் அராஜக அடக்கு முறையில் மக்கள் அதிருப்தியடைந்திருந்தார்கள். சுட்டுமேனிக்கு அடிப்பதும் சுடுவதும், அவர்கள் மீது மக்களுக்கு அதிக வெறுப்பை ஏற்படுத்தியிருந்தன. இந்தப் போராட்டத் தில் மக்களுடன் சேர்ந்து போராடிய தலை வர்களுக்கு எதிராக, அரசாங்கம் ஏற்பாடு செய்த குண்டர்கள் வேறு தங்கள் கைவரிசை யைக் காட்டினார். போலீஸ் உடை அணிந் திருந்தார்கள் என்றாலும் அவர்கள் எல்லோ ருமே போலீசைச் சேர்ந்தவர்கள்தானா என்றும் ஒரு சந்தேகம் மக்களிடையே உண்டு! அரசுக்கு ராணுவம் ஆதரவாக இருந்தது. ஆனாலும், அதை மக்கள் எழுச் சிக்கு எதிராகப் பயன்படுத்த மன்னர் தயங் கினார். காரணம் உலக நாடுகள் என்ன சொல்லுமோ என்ற பயம்.

● நேபாளத்தில் பொருளாதாரம் எப்படி?

சிரமமானதுதான். வளர்ந்து வரும் நாடு களில் ஒன்று. ஊசியிலிருந்து கார் வரை அனைத்தையும் இறக்குமதி செய்யத்தான் வேண்டும். இந்தியா — நேபாளம் வர்த்தக ஒப்பந்தம் அமலில் இருந்தவரை அனைத்தும் தட்டுப்பாடில்லாமல் கிடைத்து வந்தன. பிறகு மிகுந்த நெருக்கடியான நிலைமை. இதுவே இந்தியா போன்ற நாடாயிருந்தால் பயங்கரமான விளைவுகளும், நிகழ்ச்சிகளும் நடந்திருக்கும்... நிறைய அரிசி உண்டு. 95 சதம் விவசாயிகள். கல்வித்தரம் போதாது தான். ஆனால் இப்போதைய தலைமுறை மாணவர்கள் பரவாயில்லை. டூரிசம்தான் முக்கிய வருவாய்.

○ பத்திரிகைகள் எல்லாம் எப்படி?

'ரைசிங் நேபாள்' என்ற ஆங்கில தினசரி யும் 'கோர்க்கா பத்ரா' என்ற நேபாள தினசரியும் அரசின் ஆதரவுப் பத்திரிகை கள். சிறிய பத்திரிகைகள் நிறைய. அவற்றில் அரசு ஆதரவும் உண்டு; மக்கள் ஆதரவும் உண்டு. முன்பு சில பத்திரிகைகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இப்போது எல்லாப் பத்திரிகைகளும் கிடைக்கின்றன. இந்தியப் பத்திரிகைகளில், மாறுபட்ட கருத்துக்களோ செய்திகளோ வந்தன

* மன்னர் பிரேந்திரா



* பிரதமர் கிருஷ்ண பிரசாத் பட்டாராய்

என்றால் அதைத் தடை செய்து விடுவார் கள்.

● இப்போது நிலைமை எப்படி இருக்கிறது?

இப்போது அமைதியாகத்தான் இருக் கிறது. என்றாலும் இரவு ஊரடங்கு உத்தரவு இன்னும் இருக்கிறது. காரணம், இரவில் நடைபெறும் வன்முறைகள். தேர்தல்கள் நடைபெற இன்னும் ஒரு வருடம் ஆகலாம். அதுவரை கிருஷ்ண பிரசாத் பட்டாராய் தலைமையில் ஒரு தாற்காலிக, பதினோரு பேர் கொண்ட, அமைச்சரவை ஆட்சி நடத்தும். இதில் நேபாள காங்கிரஸ், இடது சாரி முன்னணி தவிர, மன்னரின் இரண்டு பிரதிநிதிகளும், பொது வாழ்வில் பிரபலமா யிருக்கிற, கட்சி சார்பில்லாத இரண்டு பேரும் அங்கம் வகிக்கிறார்கள். பதவிச் சண்டையில் ஈடுபடாமல், எதிர்காலத்திலும் இப்போது போலவே நேபாள காங்கிரசும், இடதுசாரி முன்னணியும் இணைந்து செயல் பட்டால் நல்லது. மன்னர் வீரேந்திராவை மட்டம் தட்டி ஒதுக்காமல் மதிக்கவே செய் கிறார்கள். அவரே அரசின் சம்பிரதாயத் தலைவராக இருப்பார்.

பேட்டி : **எஸ். வி. என்.**

ஜெயராஜன் படம்: **ரமணன்**

செயற்கை பானங்கள் ஆபத்தானவையா?

சில ஆண்டுகளுக்கு முன்பு, சென்னையில் யானைகள், குதிரைகள், ஒட்டகங்கள் என வரிசையாய் ஓர் ஊர்வலம். பார்க்கிறவர்கள் எல்லாம் பிரமித்துப் போனார்கள். அடுத்த சில நாட்களுக்கு நகரெங்கும் பரபரப்பாய்ப் பேசப்பட்ட விஷயம் அந்த மிருக ஊர்வலம்தான். அந்த ஊர்வலத்தை நடத்தியது யார்? எதற்காக? ஒரு பிரபல குளிர்பான தயாரிப்பு நிறுவனம், தனது புதிய பானத்தை அறிமுகப்படுத்துவதற்காகத்தான் அந்த விசித்திரமான ஊர்வலத்தை நடத்தியது!

அதே போல் சில நாட்களுக்கு முன் இன்னொரு நிறுவனத்தினர், புதிதாய் ஒரு சோடாவை அறிமுகப்படுத்தக் கையாண்ட உத்தி என்ன தெரியுமா? நகரின் மிகவும் பிசியான கடைகள் பத்தைத் தேர்ந்தெடுத்தனர். அங்கே வருபவர்களிடம் தம் புதிய சோடாவைச் சலுகை விலையில் விற்றதோடு அல்லாமல், வாங்கிய ஒவ்வொருவருக்கும் ஒரு லக்கி கூப்பனும் கொடுத்தனர். நூறு கூப்பன்கள் வழங்கியதும், அவர்களுள் ஓர் அதிருஷ்டசாலியைத் தேர்ந்தெடுத்து, கைக் கடிகாரம் பரிசளித்தனர். இது அந்தப் புது சோடாவுக்கு நல்ல விளம்பரத்தைத் தேடிக் கொடுத்தது.

இப்படி, இன்று இந்தியாவில் வெகு சுறுசுறுப்பாகப் பல்வேறு நிறுவனங்களும் தாங்கள் தயாரித்த குளிர்பானங்களை மக்களிடையே விற்பனை செய்கின்றன. ஒரு புள்ளி விவரப்படி ஓர் ஆண்டில், பம்பாயில் மட்டும் பத்து மில்லியன் பாட்டில் குளிர்பானங்கள் விற்பனையாகின்றன. தில்லியில் இது பன்னிரெண்டு மில்லியன். கல்கத்தாவிலும் ஏறத்தாழ பத்து மில்லியன். சென்னையில் எவ்வளவு தெரியுமா? வெறும் இரண்டு மில்லியன் பாட்டில்கள் மட்டுமே! இதற்கு என்ன காரணம்?

"பம்பாயிலும், தில்லியிலும், கல்கத்தாவிலும், ஓட்டலில் டிபனை சாப்பிட்டு விட்டு, குளிர்பானம் அருந்துகிற பழக்கமுள்ளவர்கள். ஆனால் நம் ஊரில், டிபன் சாப்பிட்ட கையோடு கேட்பது, காப்பிதானே?" என்கிறார் குளிர்பானத் துறையில் பல்லாண்டு அனுபவம் பெற்ற விங் கமாண்டர் பாலசந்திரன்.

"கூல்டிரிங்க்ஸ் தயாரிப்பாளரிடையே ஏகப் போட்டி இருக்கிறதே?"

"எல்லா விஷயங்களிலுமே போட்டி அவசியம். எந்த ஒரு கம்பெனியையும் ஏகபோக்கியமாக விட்டு விடக் கூடாது. ஆபத்து; போட்டி இருந்தால்தான் பொருள்கள் நல்ல தரமுள்ளவையாய் இருக்கும். விலை குறைவாய்க் கிடைக்கும். தாறுமாறான விலை ஏற்றம் இருக்காது."

குளிர்பானத் தயாரிப்புகளில் 'பிரான்சைஸ்' என்ற பிரத்தியேகத் தயாரிப்பு உரிமை முறையே தற்போது கையாளப்படுகிறது. உதாரணமாய் 'எக்ஸ்' என்ற ஒரு குளிர்பானத்தை எடுத்துக் கொள்வோம். அதை ஏ, பி, சி என்ற மூன்று பொருட்களை ஒரு குறிப்பிட்ட பார்முலாவில் கலந்து, தயாரிக்கிற ரகசியம் பல்வேறு கம்பெனிகளுக்கும் கொடுக்கப்படுகிறது. தயாரிப்புக் கம்பெனிகள், சீசனுக்கு ஏற்பவும் தங்கள் தேவைக்கேற்பவும் அதைத் தயாரித்து விற்பனை செய்து அதற்குரிய ராயல்டியை தாய் நிறுவனத்துக்கு அளித்து விடுகின்றன.

வெயில் காலம்தான், குளிர்பானங்களின் தேவை மற்றும் விற்பனை உச்சத்தில் இருக்கும் காலம். இந்த சீசனில், குளிர்பானக் கம்பெனிகள், தங்கள் வியாபாரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ளப் பல்வேறு வழிகளையும் பின்பற்றுகின்றன. சில சமயங்களில், போட்டி, பொறாமை காரணமாய் வரம்பு மீறிய செயல்களிலும் ஈடுபடுவதுண்டு. உதாரணமாக, பம்பாயிலுள்ள ஒரு குளிர்பானக் கம்பெனி, பணபலம் போதிய அளவு இல்லாத தனது போட்டிக் கம்பெனியின் ஒரு லட்சம் காலி பாட்டில்களை இரவோடு இரவாகக் கடைகளிலிருந்து விலைக்கு வாங்கிச் சேகரித்து 'அண்டர் கிரவுண்டு' ஆக்கி விட்டது. திடீரென தனது ஒரு லட்சம் பாட்டில்கள் குறைந்து போன சவாலைச் சமாளிக்க முடியாத அந்தப் போட்டிக் கம்பெனி திணறிப் போய், நாளடைவில் செயலிழந்து போய் விட்டது!

'டெட்ரா பாக்' கெட்டுகளில் அடைக்கப்பட்ட குளிர்பானங்கள் வந்த பிறகு, பாட்டில் பானங்களின் விற்பனை பாதிக்கப்பட்டுள்ளதா? "இல்லை! என்கிறார் ஒரு கடைக்காரர்." அது ஒரு புதிய, கூடுதலான வாடிக்கையாளர்களை ஏற்படுத்தியுள்ளது. சீசனுக்கு சீசன் பாட்டில் குளிர்பானங்களின் விற்பனை அதிகரித்துக் கொண்டுதான் போகின்றது." இதற்கு மனோதத்துவ ரீதியான ஒரு காரணம் உண்டு. பாட்டில் பானத்தைப் பார்த்துக் கொண்டே உறிஞ்சுவதில் ஒரு சுவாரஸ்யம் இருக்கிறது. டெட்ரா


பாக்கில் பானத்தைப் பார்க்க முடிவதில்லை.

இதே கேள்வியை ரயில்வே ஸ்டேஷன் கடைக்காரர் ஒருவரிடம் கேட்ட போது, வித்தியாசமான பதில் கிடைத்தது. "பாட்டில்கள் விற்பனையை நாங்களாகவே குறைத்துக் கொண்டு, டெட்ரா பாக்குகளையே அதிகமாய் விற்கிறோம். காரணம் பயணத்தின் போது கையாளுவதற்கு, பாக்கெட்டுகள் இலகுவாய் இருக்கின்றன. ஓடும் ரயில்களில் பாட்டில் பானங்களின் விற்பனையை நிறுத்தியே விட்டார்கள்" என்றார்.

விலை என்று பார்க்கும் போது, பாட்டில் ஆனாலும் சரி, பாக்கெட்டானாலும் சரி, ஏறத்தாழ ஒன்றுதான். நுணுக்கமாய்க் கணக்கிட்டுப் பார்த்தால் ஒவ்வொரு பாட்டில் அல்லது பாக்கெட் விலையிலும் ஏறத்தாழ நாற்பது காசு வரை விளம்பரத்துக்காகப் போய் விடுகிறது. ஒட்டு மொத்தமாய்ப் பார்க்கும் போது தயாரிப்புக் கம்பெனியின் லாபம் அதிகமாய் இருக்கும் என்றாலும், ஒரு பாட்டிலின் விலையில் மிக அதிகமாய் லாபம் சம்பாதிப்பது சிறு வியாபாரிகள்தான். சுமார் முக்கால் ரூபாய் வரை ஒரு பாட்டிலுக்குக் கிடைக்கும். அதே போல சுமார் முக்கால் ரூபாய் வரை எக்சைஸ் மற்றும் விற்பனை வரியாய் அரசாங்கத்துக்குப் போய் விடுகிறது.

இன்று, குளிர்பானங்கள் விற்பனையில் பிரதான இலக்கு என கருதப்படுபவர்கள் மூன்று முதல் முப்பது வயதினர்தான். எனவேதான் சமீப காலமாக டெலிவிஷன் விளம்பரங்களில் அதிக கவனம் செலுத்தி, இந்த வயதுக்காரர்களைக் கவர குளிர்பானக் கம்பெனிகள் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றன. அதற்காகத்தான் விளம்பரங்களில் இளம்பெண்கள், பளிச்சென்ற உடையில் விநோதமான சூழ்நிலைகளில் தோன்றுகிறார்கள். கவர்ச்சியான வாசகங்கள் (அது அர்த்தமில்லாத வார்த்தைகளானாலும் கூட) கையாளப்படுகின்றன. விறுவிறுப்பான ஆக்ஷன் உத்திகள் கவனத்தைக் கவரக் கையாளப்படுகின்றன. இது மாதிரியான விளம்பரங்களுக்கு லட்சக்கணக்கில் செலவாகிறது.

விற்பனையை அதிகரிக்க ஒரு குளிர்பான தயாரிப்பு நிறுவனம் என்னென்ன







உத்திகளைக் கையாளுகின்றது? ஒரு சேல்ஸ் எக்ஸிகியூட்டிவ் விளக்குகிறார்:

- பொருளின் தரம் நன்றாய் இருக்கும்படி பார்த்துக் கொள்வதன் மூலம் குறிப்பிட்ட பெயர் கொண்ட தங்கள் பானத்துக்கு ஒரு டிமாண்டை உருவாக்குகிறார்கள்.

- வாங்குபவர்களுக்கு — குறிப்பாகக் குழந்தைகளைக் கவர இலவசம் என்று ஏதாவது கொடுக்கிறார்கள். உதாரணமாய், சில ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு குளிர்பானத் தயாரிப்பு நிறுவனம், தான் தயாரிக்கும் பாட்டில்களின் மூடியின் உட்புறத்தில் மிருகங்களின் படங்களை வைத்து, இத்தனை படங்கள் சேகரித்தால் சிறப்புப் பரிசு என்று ஒரு திட்டம் வைத்திருந்தார்கள். அப்போது, பல குழந்தைகள் படத்துக்காகவே அந்தக் குளிர்பானத்தை வாங்கினார்கள். இன்னொரு குளிர்பான கம்பெனி, இலவசமாய் அட்டையாலான முகமூடி வழங்கினார்கள்.

- சில்லறை விற்பனையாளர்களுக்குச் சிறப்புப் பரிசுத் திட்டம் அல்லது இலவசப் பரிசுகள் அளிப்பது.

- போட்டிக் கம்பெனியை விட சிறிது குறைந்த விலையில், சில்லறை வியாபாரிகளுக்குச் சப்ளை செய்வது. இதற்கு 'அண்டர் கட்டிங்' என்று பெயர்.

- சிறப்பான ஆய்வுக்கூட வசதியைக் கொண்டு, தயாரிப்பில் அவ்வப்போது புதுமைகளை அறிமுகம் செய்து கொண்டே இருப்பது.

இத்தனை குளிர்பானங்களுக்கிடையிலும், விற்பனையில் சாதனை படைத்து வருபவை திடீர்ச் சமையல் மாதிரி, உடனடியாகப் பானம் கலப்பதற்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்படும் பானப் பொடிகள்தாம். மத்திய தர குடும்பங்கள் பல, விருந்தாளிகளை உபசரிக்கவும், வீட்டில் விசேஷங்கள் என்றாலும் நாடுவது இத்தகைய பானங்களையே! காப்பி, டீயை விட இவையே தாகம் தணிக்கும். செலவும் குறைவு. கோடையில், வருகிறவர்களுக்கெல்லாம் பாட்டில் குளிர்பானங்கள் தந்து உபசரிக்க பட்ஜெட் இடம் தராது.

பானப் பொடிகளும் சரி, பெரும்பாலான பாட்டில் பானங்களும் சரி முழுக்க முழுக்க ரசாயனப் பொருள்களைக் கொண்டவை. இயற்கையான அம்சங்கள் சிலவற்றில் இருந்தாலும் அதன் சதவீதம் மிகக் குறைவு. இந்த ரசாயனப் பொருள்களால் உடலுக்குத் தீமை உண்டா என்ற சந்தேகம் எழுகிறது.

இந்தச் சந்தேகத்தை உறுதி செய்வது போல, 'புரோமின் கலந்த தாவர எண்ணெயை உபயோகித்து குளிர்பான வகைகள் தயாரிக்கக் கூடாது; இந்த எண்ணெய்க்குப் புற்றுநோய் உண்டாக்கும் தன்மை உண்டு' என்று தமிழகப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு இயக்குநர், ஓர் அறிக்கை வெளியிட்டார்.

ஆனால் பான வகை உற்பத்தியாளர் விடுத்த வேண்டுகோள் காரணமாக, இந்த எண்ணெய்க்குப் பதில், கெடுதல் செய்யாத வேறு ஒரு மாற்றுப் பொருளைக் கண்டுபிடித்துப் பயன்படுத்த ஏப்ரல் 15 ஆம் தேதி வரை அவகாசம் கொடுக்கப்பட்டது. அது வரையில், மிகக் குறைந்த அளவில் புரோமின் கலந்த தாவர எண்ணெயைப் பயன்படுத்த இயக்குநர் அனுமதித்தார்.

இந்தக் கெடு முடிவடைந்து விட்டது. இனி குளிர்பான உற்பத்தியாளர்கள் இந்த எண்ணெயைப் பயன்படுத்த முடியாது. இதற்கு மாற்றுப் பொருள் கிடைக்காததால் எலுமிச்சை, நார்த்தை, ஆரஞ்சுப்பழச் சுவை இவற்றை அடிப்படையாகக் கொண்ட பான உற்பத்தியை 5 ஆம் தேதியே பலரும் நிறுத்தி விட்டனர். இனி, மேற்படி எண்ணெய் கலக்கப்படாத பானச் செறிவையே வாங்குமாறு மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்த எண்ணெய் கலந்திருக்கிறதா என்று கண்டுபிடிக்க, மாதிரிகளை நகராட்சி அலுவலர்கள் சேகரித்து அனுப்பக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

பெரிய — நடுத்தர — சிறிய பான உற்பத்தியாளர், புரோமின் சேர்த்த தாவர எண்ணெய் கலந்துள்ள செறிவுகளை வைத்து, குளிர்பான வகைகள் தயார் செய்வதை உடனடியாக நிறுத்தும்படி கட்டளையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

புரோமின் கலந்த இந்தத் தாவர


அடுத்த இதழில்...



- டெலிவிஷனில் ஊழல் — தடுப்பதெப்படி?
  — உபேந்திரா சிறப்புப் பேட்டி

- டாக்டர் சொல்கிறார்; கேட்டுக் கொள்ளுங்கள்.
  — 16 பக்க இலவச இணைப்பு

குறைந்த செலவில் குளிர்ச்சியான பானங்கள்



ஜெகன்னாத்

சென்னை அம்பாஸடர் பல்லவா ஹோட்டலில் வேலை பார்க்கும் ஜெகன்னாத் குறைந்த செலவில் சிறந்த பானங்களைத் தயாரிக்க வழி சொல்கிறார்.

1. தேவையான பொருட்கள்:

எலுமிச்சைச் சாறு — 10 மில்லி
சர்க்கரைக் கரைசல் — 20 மில்லி
தர்ப்பூசணிச் சாறு — 150 மில்லி
ஐஸ் கட்டிகள் — தேவையான அளவு.

கண்ணாடி தம்ளரில் ஐஸ் கட்டிகளைப் போட்டு, அதனுடன், தர்ப்பூசணி ஜூஸ்; சர்க்கரை கரைசல், எலுமிச்சைச் சாறு, ஆகியவற்றை சேர்த்து, நன்றாகக் கலக்கவும். அவசியமானால் சிறிது தண்ணீர் சேர்த்துக் கொள்ளவும். குடித்துப் பாருங்கள்; கோடை வெப்பம் ஓடி மறையும்!

2. தேவையான பொருட்கள்:

ஆவி பறக்கும் டிகாஷன் — 120 மில்லி
எலுமிச்சைச் சாறு — ஒன்றரை டீஸ்பூன்
சர்க்கரைக் கரைசல் — 2 டீஸ்பூன்
தேன் — 1 டீஸ்பூன்
ஆரஞ்சுத் துண்டு (வட்டமாக வெட்டி) — ஒன்று
மற்றும் தேவைக்கேற்ற ஐஸ்கட்டிகள்.

கண்ணாடி தம்ளரில், ஐஸ் கட்டிகளைப் போட்டு, டிகாஷனை ஊற்றவும். பின்னர் எலுமிச்சைச் சாறு, தேன், சர்க்கரை கரைசல் ஆகியவற்றை ஊற்றி நன்றாகக் கலக்கவும். பின்னர் ஆரஞ்சுத்துண்டால் அதன் சாறு மற்றவற்றுடன் நன்றாகச் சேரும் வரை, கலக்கவும். புதுவிதமான ருசிகர பானம் தயார்!

3. தேவையான பொருட்கள்:

குளிர்ந்த இளநீர் — 120 மில்லி
தேன் — 1 தேக்கரண்டி
எலுமிச்சைச் சாறு — 1 தேக்கரண்டி
தேங்காய் வழுக்கை — ஒன்றரை தேக்கரண்டி
சர்க்கரைக் கரைசல் — ஒன்றரை தேக்கரண்டி
புதினா இலைகள் — 2

மேற் கூறியவற்றை ஒரு கண்ணாடி தம்ளரில் இட்டு நன்றாக கலக்கவும். கடைசியில் புதினா இலைகளைப் போட்டுக் கொண்டு பருகவும். ''பேஷ்.... பேஷ்'' என்று சொல்லுவீர்கள்.

என்ணெயின் வேலை என்ன?

குளிர்பானத்தின் தயாரிப்புக்குப் பயன்படும் பொருட்களை எல்லாம் ஒன்றாக இணைத்து திரவ வடிவை ஒருமைப்படுத்துவது தான் — அதாவது ஸ்டெபிலைசிங் ஏஜெண்ட்!

உண்மையிலேயே அந்தத் தாவர என்ணெய் கெடுதல் செய்யக்கூடியது தானா? டாக்டர். எஸ். ராமமூர்த்தி மற்றும் புற்று நோய்ச் சிகிச்சை மருத்துவர் டாக்டர் சுப்பிரமணியம் ஆகியோரை விசாரித்தோம்.

''புரோமினேடட் வெஜிடபிள் ஆயில் (bvo) கான்சர் உண்டாக்கும் என்று திட்டவட்டமாக நிரூபிக்கப்படவில்லை. குறைவான சிகரெட் பிடிக்கும் எவரையும் கான்சர் தாக்குவதில்லை. ஒரு நாளைக்கு 20 — 30 சிகரெட் பிடிக்கும் போது தான் அதன் பாதிப்பு உண்டாகிறது. அது போலவே, தொடர்ந்து அதிக அளவில் இந்தக் குளிர் பானங்களைக் குடித்தால் மட்டுமே அது புற்றுநோய் உருவாகக் காரணமாகும். நம் நாட்டில், அப்படித் தொடர்ந்து குளிர் பானங்களைப் பருகும் பழக்கம் கிடையாது. பயணம் செய்யும் போது ஒரு பாட்டில் அல்லது ஒரு பாக்கெட் குளிர்பானம் குடிப்பது காரணமாக எல்லாம் கான்சர் வந்து விடாது!'' என்கிறார்கள் அவர்கள். அப்படிப் பார்க்கப் போனால் சோடா போன்ற வாயு உள்ளடக்கிய பானங்களை அடிக்கடி அருந்தினால் அல்சர் கூட வர வாய்ப்புண்டு. ஆனால் மிதமான அளவில் தாகம் தணிக்கப் பயன்படுத்தப்படும் போது தீங்கு ஏதும் ஏற்படாது.

எதற்கு வம்பு? கோடையைச் சமாளிக்க இளநீர் அருந்தலாமே? எலுமிச்சை, தர்பூசணி ஜூஸ் என்று வீட்டிலேயே தயாரிக்கப் பழக்கப்படுத்திக் கொண்டால் செலவும் மிச்சம். ஆரோக்கியமும் நன்றாக இருக்கும்!

— நமது நிருபர்கள்

அட்டை வண்ணப்படம்: **உத்ரா**

ஓர் ஆண்டு காத்திருந்த கதாநாயகி

●● தாம் டைரக்ட் செய்யும் 'நிலாப் பெண்ணே' என்ற படத்திற்கு வி. தமிழழகன் (ஆர். எம். வீரப்பனின் மகன்) கதாநாயகியைத் தேர்வு செய்த முறை கொஞ்சம் வித்தியாசமானது. ஆர்ட் டிசைனர் பரணியிடம் தம்முடைய கதையின் நாயகியின் தோற்றத்தை விவரிக்க, அதை அவர் அப்படியே ஓவியமாகத் தீட்டி விட்டார். அந்த ஓவியத்தை நாளிதழில் வெளியிட்டு 'இதே தோற்றமுடைய பெண்கள் கதாநாயகியாக நடிக்க விண்ணப்பிக்கவும்' என்று விளம்பரம் கொடுத்தார். நூற்றி இருபது பேர் விண்ணப்பித்திருக்கிறார்கள். ஒன்றும் தேறவில்லை. கடைசியாக பம்பாயில் ஒரு பெண் அவர் ஜாடையில் இருக்கிறார் என்று கேள்விப் படவும் போய்ப் பார்த்திருக்கிறார். அப்படியே அச்சாக அந்த ஓவியப் பெண்ணைப் போலவே இருந்திருக்கிறார். ஆனால் மிகவும் சின்ன வயசாகத் தெரிந்திருக்கிறது. பரவாயில்லை என்று முதலில் ஒப்பந்தம் செய்து பிறகு கொஞ்சம் வளரட்டும் என்று ஒரு வருஷம் காத்திருந்து படப்பிடிப்பைத் தொடங்கியிருக்கிறார்கள். ஒரு வருஷம் காத்திருந்து கதாநாயகியாகிய அந்த 'நிலாப் பெண்' திவ்ய பாரதி!

●● "பிரேம யுத்தம்" என்ற தெலுங்குப் படம் தமிழில் "இதய கீதம்" என்ற பெயரில் டப் செய்யப்பட்டு வருகிறது. பிரேம யுத்தம் தெலுங்கில் செம ஹிட். நான்கு கோடி ரூபாய் போட்டு எடுக்கப்பட்ட பெரிய பட்ஜெட் படம். ஒவ்வொரு பாடலுக்கும் பதினைந்து லட்ச ரூபாய செலவு செய்திருக்கிறார்கள் என்றால் சும்மாவா? அதே மாதிரி தமிழிலும் ஹிட்டாகும் என்று நாகர்ஜுனா—அமலா நடிக்கும் இந்தப் படத்தின் சண்டைக் காட்சிகளை அமைக்க பம்பாயிலிருந்து பப்பு வர்மாவை அழைத்து வந்திருக்கிறார்கள். சரித்திரம் திரும்புமா?

* எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் படம்





* காக்க வைத்த 'நிலாப்பெண்'

●● கதாசிரியர் கலைமணி 'மனித ஜாதி' என்ற படத்தை இரண்டு வருடமாக ஷூட் பண்ணிக் கொண்டிருக்கிறார். ஏனோ மனுஷன் டைரக்ஷன் செய்கிற படங்கள் எல்லாமே முடிவதற்கு இரண்டு, மூன்று வருஷங்களாகின்றன. இவர் டைரக்ட் செய்து வெளிவந்த 'தெற்கத்திக் கள்ளன்' 'பொறுத்தது போதும்' போன்ற படங்களும் இந்த ரகம்தான். என்ன காரணம்? அவர் நினைக்கிறபடி படமாக்க வேண்டுமாம். திடீர் திடீரென்று காரெக்டர்களை மாற்றி விடுவாராம். மனித ஜாதியில் நிரோஷா நடித்த கேரக்டரை மாற்றி மீண்டும் ஷூட் பண்ணப் போகிறாராம்! இது எப்படி இருக்கு?

●● சமீபத்திய சத்யராஜ் படங்கள் எல்லாமே தோல்வி! எனவே மிகவும் சிரத்தையுடன் 'மல்லு வேட்டி மைனர்' என்ற படத்தில் நடித்து வருகிறார். 'என் புருஷன்தான் எனக்கு மட்டும்தான்' படத்திற்குப் பின்பு மனோபாலா டைரக்ட் செய்யும் படம் இது. சத்யராஜுக்கு மட்டுமல்ல; மனோபாலாவுக்கும் சேர்த்தே இந்தப் படம் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் என்று சொல்லப்படுகிறது!

●● 'இது தாண்டா போலீஸ்' பட வெற்றிக்குக் காரணமாக இருந்த டைரக்டர் கோபி. இராமகிருஷ்ணாவின் பெயரைப் போஸ்டர் விளம்பரங்களில் அதிகம் பயன்படுத்தாமல் தம்முடைய பெயரையே பெரிசாகப் போட்டுக் கொண்டு வந்தார் டாக்டர் ராஜசேகர். மனம் வருத்தமடைந்த கோபி. இராமகிருஷ்ணா, பத்திரிகையாளர்களை அழைத்து. அந்தப் படத்துக்காகத் தாம் பாடுபட்ட கதையைச் சொல்லவும், டாக்டர் ராஜசேகர் வேறு வழியின்றி இது தாண்டா போலீஸ் பட நூறாவது நாள் விழாப் போஸ்டர்களில் டைரக்டரின் பெயரைப் பெரிசாகப் போட்டு விட்டார்!

— எஸ். பாலு.



கல்கி

1990 மே 13
மலர் : 48 இதழ் : 41
பிரமோதூத சித்திரை 30

நேர்மையைத் தண்டிக்காதீர்கள், தண்டவதே!

கறுப்புப்பணம் பற்றித் தண்டவதே சமீபத்தில் கூறியுள்ளது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. 'வீடு கட்டுமானத் தொழில், அல்லது உற்பத்திக்கு உதவுகிற இனங்களில் கறுப்புப்பணம் பாயுமானால் அரசுக்கு ஆட்சேபணை இராது. பணம் எங்கேயிருந்து வந்தது என்று எங்களுக்குத் தெரிந்திருக்கும்; ஆனால் கண்டுகொள்ள மாட்டோம்' என்றெல்லாம் கூறியிருக்கிறார் நிதி அமைச்சர். இந்திய வர்த்தகர் கழகத்தில் பேசிய கருத்தானதால், இதற்கேற்ப விதிமுறைகளை அரசு திருத்தி அமைக்கும் என்று எதிர்பார்க்கலாம்.


முன்னர் இப்படித்தான் ஆர். வி. நிதி அமைச்சராக இருந்த போது 'கறுப்புப் பணத்தை வெளிக்கொணருகிறேன்' என்று கூறிக்கொண்டு, ''பேரர் பாண்டு'' விநியோகித்தார். அது இன்றளவும் மோசடிகளுக்கு உதவி வருகிறது! கறுப்புப்பண மோசடி போதாது என்று, ''பேரர் பாண்டு'' மோசடி வேறு!


இந்த மோசடிகள் ஒருபுறமிருக்க, நிதி அமைச்சர்கள், ''கறுப்பை வெளுப்பாக்குங்கள், அரசு கண்டுகொள்ளாமல் இருந்துவிடும்'' என்று கூறும்போது, நாட்டில் உள்ள நேர்மையானர்களைத் தண்டித்து, கறுப்புப் பண மோசடிகளைச் செய்தவர்களுக்குப் பரிசு வழங்குகிறவர்களாகிறார்கள். கஷ்டமோ, நஷ்டமோ பட்டாவது கறுப்புப் பணம் என்று வைத்துக் கொள்ளாமல், வரிகளை ஒழுங்காகச் செலுத்தி வந்தவர்களுக்கு மாபெரும் அநீதி இழைக்கிறார்கள்.

கறுப்புப்பணம் ஏன் உருவாகிறது? அபரிமித வரி காரணமாகத்தான். ஒருவன் திறமைசாலியாக இருந்தால் அதிகம் சம்பாதிக்கவே செய்வான். அந்தத் திறமையைத் தட்டிக் கொடுப்பதற்குப் பதில் தண்டிப்பதுபோல் அவனுக்கு வரியை அதிகரித்தால், அவனுடைய திறமை திசைமாற, 'எப்படி, என்ன மோசடி பண்ணி, நாம் சம்பாதித்த இந்தப் பணத்தை இழக்காமல் காப்பாற்றிக் கொள்ளலாம்' என்று சிந்திக்கத் தொடங்குகிறான்! சம்பாதிக்கும் பணத்தில் வருமானவரி, சர்சார்ஜ், அது, இது என்று அறுபது சதவிதமோ அல்லது அதற்கு அதிகமாகவோ கூட அரசு கொண்டு போய் விடுமானால் வெறுப்பு ஏற்படுவது இயல்பே. 'என் திறமையாலும் உழைப்பாலும் நான் சம்பாதிக்கும் பணத்தையெல்லாம் அரசிடம் ஏன் கொட்டி அழ வேண்டும்? அதுவும் இவர்களுடைய ஊதாரிச் செலவுக்கு!' என்ற எண்ணம் ஏற்படுவது இயல்பு.

எனவே செய்ய வேண்டுவது என்ன எனில், தனி நபர்களுக்கும், கம்பெனிகளுக்கும் மீதான அபரிமித வரிகளை நியாயமான அளவுக்குக் குறைப்பதுதான். இதனால் எல்லாரும் மனமுவந்து, மகிழ்ச்சியோடு வரிசெலுத்த, அரசுக்கு இப்போது கிடைத்து வரும் வருவாயைவிடக் கூடுதலாகவே கிடைக்க வாய்ப்புண்டு. மேலும் இன்று கணக்கில் இல்லாத பல ஆயிரம் கோடி கறுப்புப்பணமும் படிப்படியாக வருமானமாகக் காண்பிக்கப்பட்டு, வெளுப்பாக மாறிவிட, அரசுக்குக் கூடுதல் வரி கிடைப்பதுடன், உற்பத்திக்கு உதவும் வகையில் பாக்கியுள்ள பணம் முதலீடாகும். வேலை வாய்ப்பு பெருகும். 'பூவிலிருந்து தேனீ தேனை எடுப்பது போல் மக்களுக்குத் துன்பமில்லாத விதமாக வரி விதிக்கப்பட வேண்டும்' என்பார் மூதறிஞர்.

வருமான வரியாகவும், எக்ஸைஸ் வரியாகவும், இதர பல வரிகளாகவும், அரசுக்





ருக் கொட்டிக் கொடுக்கும் தொழிலதிபர்களும் இதர தனி நபர்களும், அரசின் கரங்களில் அந்த வரிப்பணத்தின் பெரும்பகுதி ஊதாரிச் செலவினமாக மாறுவதைக் கண்டு மனம் கொதிக்கிறார்கள். வரி ஏய்ப்புக்கு இது இரண்டாவது முக்கிய காரணம். மனோதத்துவ ரீதியாக இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நம்மைவிடவும் எவ்வளவோ முன்னேறியுள்ள அமெரிக்கா, நம்மைப் போலவே கடந்த பல ஆண்டுகளாகப் பற்றாக்குறை பட்ஜெட் சமர்ப்பித்து வந்தது. ஆனால் இதனால் பொருளாதாரம் பாழாவதை உணர்ந்து, தற்போது பட்ஜெட் பற்றாக்குறையைக் குறைக்கும் நோக்கில், அரசுச் செலவினங்களைக் கணிசமாகக் குறைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இதை ஏன் இந்தியாவும் செய்யக்கூடாது?

'ஏழைக்கு வரி விதிக்கவில்லையே, முதல் வகுப்புக் கட்டணத்தைத்தானே உயர்த்துகிறோம்? பெட்ரோல் விலையைத்தானே ஏற்றுகிறோம்?' என்பதெல்லாம் ஏமாற்று வேலை. முதல் வகுப்பில் பயணம் செய்வது பெரும்பாலும் அரசு அதிகாரிகளே, அல்லது கம்பெனிக் கணக்கில் செல்பவர்களே. மிகப் பெரும்பாலான கார்கள், ஜீப்கள் அரசுச் செலவில்தான் ஓடுகின்றன. ஆக, இந்தக் கட்டண உயர்வு, விலை உயர்வு எல்லாம் கடைசியில் சராசரிக் குடிமகன் தலையில்தான் வரியாகச் சுமத்தப்படுகின்றன. பல்வேறு அரசுத்துறை நிறுவனங்களின் வீண் செலவினங்களுக்கோ, குவியும் நஷ்டத்துக்கோ கணக்கெழுதி மாளாது!

பிரத்யட்ச நோக்கில் அமையாத நிதிக்கொள்கை, அநீதிகளை வளர்க்கும் கொள்கையாகவே இருந்து வரும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

மத்யமர் —

புதுமோதிரம் — வாசகர் விமர்சனம்:

இடி மின்னலாக ஓர் அதிர்ச்சி!

* "மோதிரம் புதுசாம்மா?" என்ற மகளின் கேள்விக்கு "ஆமாம், உனக்காக...." என்று பத்மாவதி பதில் சொன்ன அடுத்த வினாடி, மின்னல் இடியாக என் நெஞ்சில் ஒரு பயங்கர அதிர்ச்சி. என்ன நடந்தது என்பதை இவ்வளவு அழுத்தமாக, அர்த்தமாக, சுருக்கமாக, சுரீரென்று சொல்ல சுஜாதாவால் மட்டுமே முடியும். 'புது மோதிரம்' சிறு கதையைப் படித்து முடித்து நாலைந்து நாள் ஆனபிறகும், இந்தச் சிறுகதை என் மனத்தில் ஏதோ ஓர் இனம்புரியாத வருத்தத்தை ஏற்படுத்துகிறது. அதற்கு முக்கிய காரணம், கதையின் கருவை ஆசிரியர் கையாண்டிருக்கும் விதம்தான்!

மங்கைநல்லூர், ஆர் செல்வராணி.

பலத்தை எழுதுங்களேன்!

* 'மத்யமர்' என்ற தலைப்பில் பத்மாவதியின் பலவீனம் மத்தியதர வகுப்பினரின் பலவீனமாக நினைக்க வைப்பது எந்த விதத்தில் நியாயமோ தெரியவில்லை. பலவீனங்களை விட்டு விட்டுப் பலத்தை எழுதுங்களேன்.

கோவை, செல்வி ரஜினி.

பலி கடா

* எதிர்பாராமல்..... 'பலிகடா' ஆகும் நிலைக்குத் தள்ளும் சூழ்நிலை. அதை உண்டாக்கிக் கொண்டு, நியாயப் படுத்திக் கொள்ளும் ஆசை... அதன் விளைவால் நேருகின்ற 'விஸ்வரூபமான' பாதிப்பு! — இவைகளைச் சேதாரமின்றி, மெல்லியதாக.... ஆனால் அழுத்தம் கெடாமல் கதையெங்கும் சொல்லி வருகின்ற 'உத்தி' நெஞ்சில் நிற்கிறது!

விரசமின்றி... ஜீரணிக்க இயலாத 'அந்தக் கசப்பை' நாசுக்காகச் சில வரிக்குள் பிடித்துத் தருகின்ற ஆசிரியரின் எழுத்தில் அடங்கி உள்ள 'உத்திதான்' இந்த வாரச் சிறுகதையின் உயர்ந்த அம்சமாகும்!

சேலம், சின்னை வெங்கட்ராமன்.

சோக இழை!

* சுஜாதாவின் கதைகளில் ஆங்கில நாவலாசிரியர் தாமஸ் ஹார்டியின் **'Irony of fate'** என்ற சோகமான இழை போன்ற ஒன்று மறைந்திருப்பதைக் காண முடியும். 'புது மோதிரம்' கதையும் அதற்கு விலக்கல்ல. மேலோட்டமாகப் படிப்பவர்களுக்கு அந்த இழை ஒவ்வொரு வசனத்திலும் ஊடுருவியிருப்பது தெரியாது. அந்த சினிமா டைரக்டர் தாயான பத்மாவின் மேல் ஒரு கண் வைத்திருப்பதை முதலிலேயே அறிமுகப் படுத்தி விடுகிறார். பிறகு புலி ஒன்று பசு வேஷம் போடுவதை டைரக்டரின் லெக்சரில் விளக்கி விடுகிறார். புகுந்த வீட்டில் அடக்கி ஒடுக்கப் பட்டதால் பத்மா போன்ற குடும்ப பெண்கள் தங்கள் நோக்கம் நிறை வேறக் குதிரைப் பார்வை (பக்கத்தில் எதுவும் தெரியாது) பெற்று விடுவது மத்யமர் வர்க்கத்தினரின் சாபக் கேடு. இது ஒரு எச்சரிக்கையும் கூட. பத்மாவுக்கு வந்த வெறி தன்னைப் போல இல்லாமல் தன் பெண் லதா சிறப்பாக வரவேண்டும் என்பது — தெரிந்தே ஒரு கலாசார இழப்புக்குத் தயாராகிவிடுகிறது.

இந்தக் கதையின் **dialect** தான் ஒரு நெருடலான சமாச்சாரம். சுஜாதா போன்றவர்கள் **same side goal** போடக் கூடாது. பிராமண பாஷையைத் தவிர்த்து பொதுவான மனிதர்களாகச் சித்திரித்திருக்கலாம். மத்யமர் என்று பேர் வைத்துவிட்டதால் அவர் இனிமேல் வரும் கதைகளில் 'பொதுமர்' பாஷை உபயோகிக்கட்டும்.

திருப்பத்தூர், விமலா சாயிராம்.

வைரக்கிரீட வரிகள்!

* இக்கதையின் சிறப்பு அதன் கதைக் கருவை விட அவர் எழுதிய விதத்தில் தான் பளீரிடுகிறது. கடைசி நான்கு பத்திகள் கதைக்கு அமைந்த வைரக்கிரீடவரிகளாகும். அப்பாவிக் கணவன்; போலிப் பகட்டுக்கு ஏங்கும் மனைவி; பேதைப் பெண்; இவர்களின் அறியாமையை அபிலாஷையைத் தன் மன விகாரத்திற்கு மிக நாசூக்காகப் பயன்படுத்திக் கொண்ட டைரக்டர்! இந்த நான்கு கேரக்டர்களைக் கொண்டு மத்யமரின் தடுமாற்ற வாழ்க்கை நிலையை ஒரு கோணத்தில் வெளியாக்கி விட்டார். அறையை விட்டு வெளியேறிக் குடும்பப் பெருமையைபத்மாநிலைநாட்டியிருக்கலாம். ஆனால் அவளோ, டைரக்டரின் மோதிரத்தை கையில் அணிந்து 'உனக்காக' — என்று பெண்ணிடம் கூறுகிறாள். வேஷம் போடும் திரையுலகப் பகட்டு வெளிச்சத்தையும், விட்டில் பூச்சிகளாகிவிடும் மத்யதர பத்மாக்களின் பேராசைகளையும் அதனால் நிலைதாழ்ந்து விடும் சீனிவாசன்களையும் இக்கதை மூலம் சுஜாதா வெளிப்படுத்தி

அதிர வைத்து விட்டார். பாராட்டுக்கள்.

புதுவை — 8, ஆர். விஜயா ராமன்.

எதிர்க்கிறேன்!

* பணத்திற்காகவும், புகழுக்காகவும் கேவலமான காரியங்களில் ஈடுபட்டு ஒழுக்கத்தைத் துச்சமாக மதிப்பவர்கள் எல்லாத் தரப்பினரிலும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் சுஜாதா மத்யதர வகுப்பினர் என்ற தலைப்பின் கீழ் இதைக் கொடுத்து இருக்கிறார். நானும் மத்யதர வகுப்பைச் சார்ந்தவள் என்பதால் இதை எதிர்க்கிறேன். இன்றைய பண்பாடு, கற்பு நெறி சிதறாமல் காப்பவர்கள் நாங்கள்தான். ஆனால் சுஜாதா அதைப் பற்றி எழுதாமல் பொதுவாக எல்லாத் தரப்பினரிடமும் இருக்கும் பலவீனத்தை எங்கள் தலையில் கட்டுகிறார்!

விருதுநகர், ஆர். காமராஜினி.

சிறந்த கரு; தகுந்த உத்தி!

* கதையின் கரு உலகிற்கு மிகவும் தேவையானது. அடங்காமை ஆரிருளில் உய்த்து விடும். தேவையற்ற ஆசைகளை, உணர்ச்சிகளை அடக்கி, தகுந்த முறையில் நெறிப் படுத்தத் தவறினால் ஒழுக்கக் கேடுதான் விளையும். சிறந்த இலக்கை அடைவதற்குக் கூட நேரிய பாதையில்தான் செல்ல வேண்டும் என்பதை, மறக்கவே கூடாது. மேலும் எக்காரணத்தைக் கொண்டும் நமது மனக் குறைகள், ஏமாற்றங்கள் எதிர்பார்ப்புக்களை அடக்கமின்றிப் புதிய மனிதர்களிடம் கூறுவது ஆபத்து. சிறந்த கரு, தகுந்த உத்தியுடன் இயற்கையான முறையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. பாராட்டுக்குரியது.

கடலூர் — 1, சத்யா.

அபாயம் உண்டு!

* தமிழகத்தில் பெருமளவு அவமானப் படுத்தப்படும் ஒரு இனத்தவரைக் குறிப்பிட்டு கதை எழுதப்பட்டிருப்பது துரதிர்ஷ்டமே. இந்த இனத்தை அழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் கட்சிகளின் நாளேடுகள் இக்கதையைத் தங்கள் கொள்கைகளுக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் அபாயமும் உண்டு.

சென்னை — 40, மீனாட்சி கிருஷ்ணா.

தேங்கிய உணர்வு

* ஒரு பெண்ணை, குடும்ப வாழ்க்கையின் சிறப்பை உணர்பவளாக வளர்க்க வேண்டும். அவ்வப்போது அவளின் ஆர்வங்களுக்கும் வழி விட்டு போஷிக்க வேண்டும் என்பதை உணர்த்தும் 'கரு' தான் இக்கதையின் சிறப்பம்சம். ஒரு பெண்ணின் சுதந்திரப் பாதைகள் திடீரென அடைபடும் போது, அவளின் உணர்வுகள் வடி காலின்றித் தேங்கி விடுகிறது. கணவனின் அப்பாவித் தனத்தையும், தனது அளவற்ற ஆர்வத்தையும் அடுத்தவர் முன் அவள் வெளிப்படுத்துவதைக் கூட அந்தத் தேக்கத்தின் கசிவு என்றுதான் சொல்ல வேண்டும். இறுதியில் அந்தத் தேக்கம் நாயகியைச் சாக்கடையாகவே மாற்றி விடுகிறது என்பதுதான் வருத்தம். கதையின் ஆரம்பமே முடிவை யூகிக்க வைத்து விட்டது.



காட்டூர், எஸ். அருள்மொழி.

கருத்து சரியில்லை

* கடைசி நான்கு பாராக்களில் நடை அழகாக, நாகரிகமாக அமைந்திருக்கிறது. ஆபாசமான ஒரு விஷயத்தை ஆபாசமின்றி எழுத முடியும் என்று நிரூபிக்கிறார். இருப்பினும் கருத்து சரியில்லை. டைரக்டர் போனில் மறுபடியும் பேசும் போது, 'ஸ்கிரீன் டெஸ்ட் கூடத் தேவையிருக்காது. பேஸ் ஸெட் ஆயிடும்' என்று சொல்பவர் அங்கு அழைக்கும் போது மூவரையும் அழைக்கிறார். அதிலிருந்து அவருக்குத் தப்பான எண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை.

மேலும் கணவனும் மகளும் எந்த நிமிஷமும் வந்து விடுவார்கள் எனத் தெரிந்த ஒரு நடுத்தர வயது மிடில்க்ளாஸ் மாது அவ்வளவு சீக்கிரம் முடிவெடுத்து மோதிரம் வாங்கிக் கொள்ள மாட்டாள்.

திருச்சி, ஹேமலதா.

இலை மறை காயாக —

* அன்னிய புருஷனிடத்தில் தன் கணவன், புக்ககத்தாரைப் பற்றி முதல் சந்திப்பிலேயே சொல்கிற — அவளுடைய அடக்கமற்ற (லஜ்ஜை கெட்ட) குணத்தைக் கோடி காட்டி இருக்கிறாரே — அது கதையின் முடிவுக்கான அஸ்திவாரம். 'என் ஆசைகளை இவ மூலமா நிறைவேத்திக் கணும்னு வெறி சார்' என்று அவள் சொல்கிற போது, அவள் Characterன் கன பரி

சிறப்புப்பரிசு ரூ 50 பெறுபவர்:
விமலா சாயிராம்,
12/1, சாம நகர்,
திருப்பத்தூர், வ. ஆ. 635 601
மற்ற விமர்சனங்கள்: ரூ 25 சன்மானம் பெறுகின்றன.

மாணத்தை நம்மை உணர வைக்கிறாரே — அது அவருடைய அடுத்த உத்தி. பிறகு 'தலையாலே தண்ணி குடிச்சாவது அவளை நடிக்க வைப்பேன்' என்கிறபோது நம் தலையில் அடித்து நடக்கப் போவதை ஊகிக்க வைக்கிறாரே — அது அடுத்த உத்தி. பிறகு டைரக்டர் ஹோட்டல் அறையில் எதுவும் வெளிப்படையாகப் பச்சையாகக் கேட்காமலே உணர்த்துகிறாரே — சபாஷ் போட வைக்கிறது என்றால் அடுத்து அவர் 'முதல் வாக்கியம் காதில் விழவில்லை' என்கிறாரே, என்ன நாசூக்கு! எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தாற் போன்ற உத்தி — சுஜாதா ஸ்பெஷல் அது தான். வாசகர் யூகத்துக்கே விட்டு இலைமறைகாயாய் உணர்த்தும் கதையின் உச்சகட்டம். 'மோதிரம் புதுசாம்மா?' என்ற பெண்ணிடம் 'ஆமாம் உனக்காகத் தான்' எனத் தாயின் பதில் கூறும் இடம்.

ஆக உத்திகளின் மன்னன், வாசகரையே யூகிக்க வைத்து, சொல்கின்ற வார்த்தையை விட சொல்லாத வார்த்தைக்கு விலை அதிகம். குறைந்த வார்த்தைகளில் நிறைய உணர வைக்கும் மன்னன்.

சென்னை — 33, வசந்தா.

ஃபைவ் ஸ்டார் ஓட்டலில் வேப்பம்பூப் பச்சடி!

* கருவைக் கையாண்டுள்ள உத்தி, பைவ் ஸ்டார் ஓட்டலில் விருந்து வைத்து வேப்பம் பூப் பச்சடியைக் கொடுத்தது போல் உள்ளது. ஒரு சிலரிடம் உள்ள பலவீனங்களைப் பொதுவாக மத்யமரின் பலவீனங்கள் என்று கருதும்படி இப்படி வெட்ட வெளிச்சமாக்குவது — இந்த நோக்கில் கதைகளை வெளியிடுவது — கரு, உத்தி, நடை எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும் கல்கிக்குப் பலவீனமே.

கோவை, எஸ். குருசாமி.

''எப்படியாவது''

* மேல் மட்டத்தைச் சேர்ந்த குடும்பத்தில் பிறந்து, மத்தியதர குடும்பத்தில் வாழ்க்கைப் பட்ட ஒரு பெண் கசங்கிப் போன தனது கனவுகளைப் புதுப்பிக்க முயற்சி செய்வது தான் கதையின் கரு. கனவுகளுக்கும் நிதர்சனங்களுக்கும் இடையிலுள்ள தூரத்தை ஜீரணிக்க இயலாமை மத்தியதர வர்க்கத்தின் பெரும் பிரச்னை என்பதை அடிப்படையாகக் கொண்டு எழுந்த கதை. நிதர்சனங்களை வென்று கனவுகளை எப்படியாவது பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்ற வெறி ஏற்படுவது சாத்தியமற்றது அல்ல என்ற உண்மை தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுதில்லி, நிறைமதி சேதுராமலிங்கம்.

கொடுமையிலும் கொடுமை!

* பத்மாவதி போன்ற ஒரு நடு வயதுக் குடும்பப் பெண், சினிமா மோகத்தினால் உந்தப்பட்டு, தன் பெண்ணிற்காகத் தான் சீரழிவது கொடுமையிலும் கொடுமை! சினிமா உலகம் என்பது, பெண்ணினத்தை நிஜவாழ்க்கையிலும் துகிலுரித்துக் கேவலமாக்கும், வில்லன்கள் நிறைந்த ஒரு நரகம். அந்த உலகத்திற்குச் சென்ற பெண்கள் மானத்துடன் திரும்ப முடியுமா? ''சினிமாக்காரங்க அத்தனை பேரும் கெட்டவங்கன்னு ஓர் அபிப்ராயம் இருக்கு. அதை நீக்க, மரியாதைக்கும், மதிப்புக்கும் உரிய குடும்பங்களைச் சேர்ந்தவங்க பீல்டுக்கு வரணும்'' என்று டைரக்டர் சொல்வது சாத்தான் வேதம் ஓதுவது போல் உள்ளது. ஆனாலும் அந்த டைரக்டர் பத்மாவதிக்கு இரு வழிகளைக் காட்டியும், பத்மாவதி குறுக்கு வழியில் சென்று நாசமாய்த்தான் போவேன் என்று நாசமாய்ப் போகிறாள். என்னே இந்த சினிமா மோகம்! இந்த மாதிரி மத்யமரைக் கேவலப்படுத்தி விட்டாரே என்று சுஜாதாவைக் குறை கூற முடியாது.

சென்னை — 4, வெ. முத்துகிருஷ்ணன்.

அற்புத பாணி!


* ஒரு ரசமான கதைக்கு 'முரண்' எவ்வளவு அவசியம் என்பதை 'சுஜாதா' இந்தக் கதையில் காட்டுகிறார். முடிவு நெருங்கும் வரை அந்த முரண் வெளிப்படவே இல்லை. கடைசி வரிகளைப் படித்ததும் புதுமைப் பித்தனின் 'பொன்னகரம்' தான் நினைவுக்கு வந்தது. அக்கதையின் நாயகி 'அம்மாளு'வும் இப்படித்தான் நிர்ப்பந்தத்துக்கு ஆளாகிறாள். ஆனால் அவள் கீழ்மட்டப் பாத்திரம். அவளுக்கென்று அபிலாஷை ஏதுமில்லை. கணவனின் கடைசி ஆசையைப் பூர்த்தி செய்யச் 'சோரம்' போகிற பத்தினி அவள். ஆனால் இங்கு — மத்யதர வகுப்பின் பிரதிநிதியான பத்மா தனது அபிலாஷைகளை நிறைவேற்ற, மகள் பெயரைச் சொல்லி, சோரம் போகிறாள். பொன்னகரம் தரும் சோகத்தை 'புது மோதிரம்' தருகிறது. ஆனால் இக்கதை வெளிப்படுத்தும் சோகம் வேறு வகையானது. ஆசைப்பட்டதை அடைய 'வக்கும்' இல்லாமல், அதைத்துறக்கவும் முடியாமல் சீரழியும் மத்யமரின் அவலத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது கதை. கதையில் வரும் டைரக்டர் ஒவ்வொரு முறையும் பத்மாவைப்புகழும்போது, வாசகர்க்கு ஓரளவு முடிவின் சாயல் புலப்பட்டாலும், திடீரென்று அவசரமாய் பத்மாவின் வீழ்ச்சி நேருவதுதான் சுஜாதாவின் அற்புதபாணி. இதில் தெரியும் உண்மை கசக்கவே செய்கிறது. ஆனாலும் அதை மறைப்பது வெறும் பாசாங்கில் முடியும்.

விருத்தாசலம், சபா. அகிலநாயகம்.


ஆரோக்கிய ரகசியம்:
வி. என். குமாரசாமி.

5

புஜங்காசனம்



* புஜங்காசனம் முதல் நிலை



* புஜங்காசனம் இரண்டாம் நிலை

விரிப்பில் குப்புறப் படுக்கவும். இரண்டு குதிகால்களும் சேர்ந்து இருக்க வேண்டும். இரண்டு உள்ளங்கைகளும் புஜங் களுக்குக் கீழ் விரிப்பில் படியும்படி விரல் களை நீட்டிச் சேர்த்து வைக்கவும். முகவாய்க் கட்டை விரிப்பில் ஒட்டியிருக்க வேண்டும். இப்பொழுது புஜங்காசனம் செய்யத் தயாரா யிருக்கிறீர்கள். சுவாசத்தை மெதுவாக விட்ட வாறே, கையை ஊன்றியவாறு தலையைத் தூக்கிப் பின்னுக்கு எவ்வளவு வளைத்துப் பார்க்க முடியுமோ, அவ்வளவு வளைத் துப் பார்க்கவும். கைகள் சற்று வளைந்திருக்க வேண்டும். அடிவயிறும் தொப்புளும் விரிப் பில் ஒட்டியிருக்க வேண்டும். வயிற்றுக்குக் கீழ்ப்பாகத்தை விறைப்பாய் வைத்துக்கொள் ளாமல் லாகவமாய் விட்டுவிட வேண்டும். நாலைந்து வினாடி அப்படியே தலையைத் தூக்கி வைத்திருக்க வேண்டும். இப்பொழுது மூச்சு சௌகரியப்படி விடலாம். பிறகு நிதான மாய் மூச்சு விட்டுக் கொண்டே தலையைக் கீழே இறக்கிச் சாதாரண நிலைக்கு வரவும்.

பிறகு வேறு ஒரு விதமாகச் செய்ய வேண்டும். முன் விவரித்தது போலவே செய்து, கையை மடக்காமல் நிமிர்த்தி இன்னும் தலையையும் புஜங்களையும் பின் பக்கம் கூடுமானவரை வளைத்துப் பார்ப் பது. இதிலும் அடிவயிறும் தொப்புளும் தரை யில் ஒட்டியிருக்க வேண்டும்.

சிலருக்குத் தலையை நிமிர்ந்து மேலே பார்க்கும் போது பின் குதிகால்கள் ஒட்டாமல் பிரிந்து போகும். அப்படிப் பிரித்து வைத்திருந்தால் சுலபமாகச் செய்ய வரும். அப்படிச் செய்யாமல் ஒட்டியே வைத்து நிமிர்ந்து பார்க்க முயற்சி செய்ய வேண்டும்.

சிலருக்கு மேலே தலையைத் தூக்கிப் பார்க்கும் போது காலிலிருந்து உடல் ஒரே பலகை மாதிரி தூக்கும். கொஞ்சமும் பின் னுக்கு வளையாது. அப்பேர்ப்பட்டவர்கள், நடு முதுகைத் தாழ்த்தி அடிவயிறும் தொப் புளும் தரையில் ஒட்டும்படி முயற்சி செய்ய வேண்டும். முரட்டுத்தனம் காட்டாமல் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற வேண் டும். விடாமல் முயற்சி செய்தால் சில நாட் களில் சரியான நிலை வந்துவிடும்.

சிலருக்குக் கழுத்தைப் பின்பக்கம் வளைத்துப் பார்க்க முடியாது. பின் பக்கக் கழுத்துச் சதை கனத்துத் தடுக்கும். நரம்பு கள் வலிக்கும். சிலருக்குக் கைகள் நடுங்கும். இவையெல்லாம் நாளாவட்டத்தில் மறைந்து போகும்.

இந்த ஆசனம் பண்ணும் போது சிலருக்கு வாய் திறந்துவிடும். சிலர் வாயின் வழியே மூச்சு விடுவார்கள். எப்போதும், எந்த



"அந்த நிருபரிடம் ரொம்ப நேரமாக் கெஞ்சிக் கேட்டுக்கிட்டு இருந்தியே, என்னது...?"

"என்னைப் பற்றி ஏதாவது வதந்தியை கிசுகிசுவாக எழுதச் சொல்லித்தான்...!"

— திருப்பூர்கபி.

ஆசனம் செய்யும் போதும் வாய் மூடியே இருக்க வேண்டும். வாய் வழியாக மூச்சு இழுக்கவோ, விடவோ கூடவே கூடாது. காற்றை இழுக்கவும் விடவும் மூக்கைக் கடவுள் சிருஷ்டித்திருக்கும் போது எதற்காக வாயை உபயோகிக்க வேண்டும்? மேலும் ஆசனம் பழகும் போது ரொம்ப ரொம்ப அத்தியாவசியமானாலொழிய பேசவும் கூடாது.

புஜங்காசனம் செய்வதால் ஏற்படும் நன்மைகள்: முதுகெலும்பின் மேல் பாகத்துக்குப் பயிற்சி ஏற்படுகிறது. இரண்டாவது கட்டத்தில் முதுகுத் தண்டின் நடுப் பாகத்திற்கும் பயிற்சி கிடைக்கிறது. முதுகுத் தண்டு இளமை அடைகிறது. கழுத்தும் தோள்பட்டையும் வலுவடைகின்றன. இந்த ஆசனம் செய்பவர்களுக்குக் கழுத்து வலி, கழுத்துச் சுளுக்கு முதலியன ஏற்படாது.

மணிக்கணக்காகக் குனிந்து எழுத்து வேலை செய்பவர்கள்தான் நம்மில் பெரும்பாலோர். எழுத்தாளர், குமாஸ்தாக்கள், ஆபீஸர்கள், டைப்பிஸ்டுகள், ஓவியர்கள் போன்றவர்களுக்கு இந்த ஆசனம் ஒரு வரப் பிரசாதம் மாதிரி. கூனிய முதுகை நிமிர்த்துகிற இந்த ஆசனத்தில் சுவாசப்பை நன்றாக விரிகிறது. பிராண வாயு விரிந்த நுரையீரலின் ஒவ்வொரு சந்து பொந்துக்குள்ளும்

"இப்பெல்லாம், எழுத்தாளர்கள் படு உஷாராயிருக்காங்க சார்...!"

"எப்படி...?"

"பாருங்க... இந்த எழுத்தாளர், கதையோடுகூடவே, "மணியார்டர்" கூப்பனையும் அனுப்பியிருக்கார்...!"

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா.



போவதால் அங்குள்ள கிருமிகள் நாசமடையும். ரத்தம் முன்னைவிடச் சுத்தமாகும். இடுப்பு வலுவடையும். வயிற்றுச் சதைகளும் இழுக்கப்படுவதால் அதற்கும் இலேசாய் பயிற்சி கிடைக்கிறது.

புஜங்காசனத்துக்கு இன்னொரு பெயர் சர்ப்பாசனம். நல்லபாம்பு படம் எடுத்து ஆடுவது போன்ற நிலையில் இந்த ஆசனம் அமைவதால் இந்தப் பெயர் ஏற்பட்டது.

சாதாரணமாய் நம் வீடுகளில் வளரும் நாய், பூனை முதலியவற்றைக் கவனமாகப் பாருங்கள். நாய் சற்று அதிக நேரம் ஓரிடத்தில் உட்கார்ந்திருந்து விட்டாலோ, அல்லது அதிகாலையில் எழுந்து நின்றதுமோ என்ன செய்கிறது? பின்னங்கால்களைப் பின்னுக்குத் தூரமாக வைத்து, உடலின் பின் பக்கத்தைத் தாழ்த்தி, தலையை நிமிர்த்தி நெட்டொடிக்கிறது. பிறகு முன்னங்கால்களைத் தாழ்த்திப் பின்பக்க உடலைத் தூக்கித் தலையைத் தாழ்த்தி தண்டால் எடுக்கிறது. இவற்றை யார் அதற்குச் சொல்லிக் கொடுத்தார்கள்?

பூனை நடுமுதுகைக் கோபுரம் போல் வளைத்து நான்கு கால்களை நெட்டாக வைத்து நரம்புகளையெல்லாம் இழுத்துக் கொள்ளும். இப்படி நரம்புகளையும் முதுகுத் தண்டையும் பயிற்சி அளித்துச் சரிப்படுத்திக் கொண்டுதான் வேறு காரியங்கள் செய்யும்.

யாரும் கற்றுத் தராமல் இயற்கையிலேயே அவை தேகப்பயிற்சியின் அவசியத்தை உணர்ந்திருக்கின்றன. ஆனால் மனிதனோ நாகரிக மோகத்தில் தேக உழைப்பை உதாசீனம் செய்கிறான். நடந்து போவது மதிப்புக் குறைவு என்றும், சிறு பெட்டியானாலும் 'போர்ட்டர்' தூக்க வேண்டும் என்றும், நினைக்கிறான். எப்படி இவர்களுக்கு ஆரோக்கியம் கிட்டும். "தேகாப்பியாசம் நல்லதா? தேங்காய்ப் பாயசம் நல்லதா?" என்று தர்க்கம் செய்து கொண்டிராமல், யோகாசனங்களைப் பழக முன் வர வேண்டும்.

வழக்கமாய் ஆசனம் செய்து வரும் பெண்கள், கர்ப்பமானால் இந்த ஆசனத்தை இரண்டு மாதங்கள் வரை செய்யலாம்.

(தொடரும்)

புகைப்படத்தில்:
குமாரி லக்ஷ்மி ஜெயராமன்.

இடம்: **சிவானந்தா யோக வேதாந்த கேந்திரம்.**

படம்: **உத்ரா.**



வண்ணப்படம்: உத்ரா

அக்கம் பக்கம் பார்த்து...

இலேசான குறட்டை ஒலியுடன், நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்த கணவனைப் பார்க்க, கோபம் கோபமாக வந்தது ரமாவுக்கு.

'சே! என்ன மனுஷர் இவர்' என்று முப்பதாவது முறையாக மனத்திற்குள் சலித்துக் கொண்டாள்.

அவர்கள் குடியிருந்த வீடு மிகவும் சிறிய தாகவும், தண்ணீர் வசதி இல்லாமலும் இருந்ததால், வேறு வீடு பார்க்கும்படி கணவனை நச்சரித்துக் கொண்டிருந்தாள் ரமா.

பத்து நாட்களுக்கு முன்பு, எட்டு வீடுகள் கொண்ட காம்ப்ளெக்ஸ் ஒன்றில், காலியாயிருந்த ஒரு வீட்டைப் பார்க்க ரமாவை அழைத்துக் கொண்டு போனான், அவள் கணவன் குமார்.

வீட்டைப் பார்த்த உடனேயே ரமாவுக்கு மிகவும் பிடித்துப் போய் விட்டது. பளபள வென மொஸைக் தரை, பெரிய ஹால், பெட்ரூம், ஸ்டோர்ரூம், பெரிய கிச்சன், டைனிங் ஹால் எல்லாமே பாந்தமாக இருந்தன. கிச்சனிலேயே பாத்திரங்கள் கழுவ, பாத்திரங்களை அடுக்கி வைக்க வசதிகள். வீட்டில் நான்கைந்து இடங்களில் தண்ணீர்க் குழாய்கள். அட்டாச்டு பாத்ரூம்... ரமாவுக்கு அப்போதே அந்த வீட்டுக்குக் குடி வந்து விட வேண்டும் என்று தோன்றியது. அதுவும் வாடகை நானூறு ரூபாய்தான்; இரண்டு மாத வாடகைதான் அட்வான்ஸ் என்று தெரிந்ததும் அவளால் தன் ஆவலைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

''என்னங்க, இப்பவே 'ஹவுஸ் ஓனரைப்' பார்த்து அட்வான்ஸ் கொடுத்துட்டு வந்துடுங்களேன்'' என்று அரிக்க ஆரம்பித்தாள்.

''சரி சரி'' என்று தலையை அசைத்தானே யொழிய குமார் அப்படிச் செய்யவில்லை.

அதற்கடுத்த மூன்றாம் நாள் மறுபடியும் வீடு பார்க்க என்று அவளை வேறு ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்றான்.

ரமாவுக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது.

மிகவும் சாதாரணமான வீடு. தண்ணீர்க் கஷ்டம் இருக்காது என்று தோன்றினாலும், இரண்டே இரண்டு இடங்களில்தான் தண்ணீர்க் குழாய்கள் இருந்தன. இவர்களுக்கென தனி பாத்ரூம், லெட்ரின் என்றாலும் அவை வீட்டுக்கு வெளியே இருந்தன. வெறும் சிமெண்ட் தரைதான். கிச்சனில் சமைப்பதற்கு மட்டும் மேடை. பாத்திரங்களை பாத்ரூமில் கொண்டு வந்து போட்டுக் கொண்டுதான் துலக்க வேண்டும்.

வாயைத் திறந்தால் அழுகை வந்து விடும் போல் இருந்தது ரமாவுக்கு.

''வாடகை முந்நூறு ரூபாய்தான் ரமா. அட்வான்ஸ் இல்லே. பேசாமே இந்த வீட்டுக்கு வந்துடலாம்'' என்று குமார் சொன்னதும் ரமாவுக்குக் கண்களில் நீர் முட்டியது.

அன்று வாயை மூடிக் கொண்டவள்தான், புது வீட்டுக்குக் குடிவந்து நான்கு நாட்கள் ஆகியும் கணவனிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை.

''ஒரு நூறு ரூபாய் வாடகை அதிகம் அவ்வளவுதான். ஆனால் எவ்வளவு வசதி. அதற்குப் போய் கஞ்சத்தனம் பண்ணிண்டு...'

கணவனைப் பார்க்கவே எரிச்சலாக இருந்தது ரமாவுக்கு. அவனை எழுப்பி, சண்டை போட வேண்டும் போல் இருந்தது.

அதே நேரம், 'சட்'டென்று கண் விழித்த குமார், ரமா இன்னமும் தூங்காமல் இருப்பதைப் பார்த்து, ''ஏய் ரமா, இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இப்படி 'உம்'ன்னு தூங்காமே இருக்கப் போறே? உடம்பு கெட்டுடும். பேசாமே படுத்துத் தூங்கு'' என்றான்.

''கெட்டா கெட்டுட்டுப் போவட்டும். நீங்க ஒண்ணும் பணம் செலவு பண்ணி, வைத்தியம் பார்க்க வேணாம்'' என்றாள் ரமா நிஷ்டூரமாக.

'கலகல'வெனச் சிரித்தபடி படுக்கையில் எழுந்து உட்கார்ந்த குமார் ''ரமா, எந்த விஷயத்திலேயும் உணர்ச்சிகளுக்கு மட்டும் இடம் கொடுத்துடக் கூடாது. கொஞ்சம் யதார்த்தமாவும் பார்க்கணும்'' என்று ஆரம்பித்ததும், அவன் என்னவோ ஸீரியஸ்ஸாக சொல்லப் போகிறான் என்பதை உணர்ந்தவள் போல், தன் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டாள் ரமா.

''ரமா, நானூறு ரூபாய் வாடகை தர்றது எனக்குப் பெரிய விஷயமில்லேதான். என் சம்பாத்தியத்துலே என்னாலே அவ்வளவு வாடகை தர முடியும். ஆனாலும் அந்த வீட்டுக்குக் குடி போறதாலே உனக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய ரெண்டு மூணு கஷ்டங்களைத் தவிர்க்கத்தான், அந்த வீட்டை நான் அவாய்ட் பண்ணினேன்...'' என்று புதிர்

சத்யா ஸ்ரீனிவாசன்



போடுபவன் போல் சொன்னதும், ''நீங்க என்ன சொல்றீங்க?'' என்பது போல் அவனைப் பார்த்தான் ரமா.

''ஆமா ரமா. அந்தக் காம்ப்ளக்ஸில் இருக்கறவங்க எல்லாம், பாங்க் ஆபீஸர்ஸ், எல்.ஐ.ஸி. ஆபீஸர்ஸ், இன்ஜினியர்கள்... இப்படித்தான் இருக்காங்க. அதாவது நம்மை விட ஒரு படி மேலே இருக்கறவங்க. ப்ரிட்ஜ், கலர் டீவி, வாஷிங் மெஷின்னு சகல சௌகர்யங்களோட இருக்கறவங்க. அந்த இடத்துலே, அது போல ஐவிட்டங்கள் எதுவுமே இல்லாத நாம குடி போனா, அவங்க நம்பளை ஒரு மாதிரியாப் பாக்க றாங்களோ இல்லியோ, நமக்கே — குறிப் பாக எப்பவுமே வீட்டிலேயே இருக்கப் போற உனக்கு, ஆட்டோமாடிக்காக தாழ்வு மனப்பான்மை வந்துடும். அதைப் போக்க ணும்னா, கடன் உடன் பட்டாவது அந்த வசதிகளையெல்லாம் நாமும் ஏற்படுத்திக் கணும். அப்புறம் குடும்பம் உருப்படுமா?'' என்ற அவன் சற்று நிறுத்தினான்.


''நான் ஒண்ணும் உங்களை அப்படி யெல்லாம் பிடுங்க மாட்டேன்'' என்றான் ரமா சிணுங்கலாக.

''சரி. இன்னொரு விஷயம் இருக்கு. அது உன்னைக் கட்டாயம் பாதிக்கும்... அந்த காம்ப்ளக்ஸிலே இருக்கறவங்க எல்லோ ருமே ஆபீஸ்லே வேலை செய்யறவங்க. சாயங்காலம் அஞ்சு மணியானா 'டாண்'ன்னு வீட்டுக்கு வந்துடுவாங்க. ஆனா, என் வேலை அப்படியில்லே. நான் வேலை பாக்கறது டிரான்ஸ்போர்ட் கம்பெனியிலே. நான் வீட்டுக்கு வர தினமும் ராத்திரி பத்து மணியாயிடுது. 'மத்தவங்க வீட்டுக்காரங்க எல்லாம் அஞ்சு மணிக்கே வந்துடறாங்க. இவர் மட்டும் பத்து மணிக்கு வர்றாரே'ன்னு உன் மனசு அனாவசியமாக் கஷ்டப்படும். இங்கேன்னா அந்தக் கஷ்டங் கள் எதுவும் இல்லே. சுத்தி இருக்கறவங்க எல்லாம் பாக்டரியிலே வேலை செய்யற வங்க. நைட் ஷிப்டு, டே ஷிப்டுன்னு போற வங்க. இங்கே உனக்கு எந்தவிதமான 'சைக்கலாஜிகல்' பிராப்ளமும் வராது. நாம அங்கேயிருந்தா சிங்கத்துக்கு வாலாத் தான் இருக்க முடியும். இங்கே நாம எலிக் குத் தலை. எது பெட்டர்?''

''ஆமா, இப்படி எதையாவது சாமர்த்திய மாச் சொல்லி என்னைச் சரி பண்ணிடுங்க'' என்று செல்லமாகச் சிணுங்கியவாறு அவன் மார்பில் சாய்ந்தான் ரமா.

"சி.எம். காலைப் பிடித்தாவது பஸ் நிலையம் கொண்டு வருவேன்"

இ. காங்கிரஸ் எம். எல். ஏ. சுந்தரதாஸின் தொகுதி இது...



* மார்த்தாண்டம்: பஸ் நிலையம் கிடையாது

மார்த்தாண்டத்தில் பஸ்ஸை விட்டு இறங்கியதுமே பிரச்னைதான். மார்த்தாண்டத்திலிருந்து மற்ற ஊர்களுக்குச் செல்லும் பஸ்கள், ஏழு இடங்களில் உதிரி உதிரியாக நிற்பதால் எந்த ஊர் பஸ் எங்கே நிற்கிறது என்று கண்டுபிடிப்பதே பகீரதப் பிரயத்தனம்தான். இத்தனைக்கும் மார்த்தாண்டம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஊர். ஆயினும் பஸ் ஸ்டாண்டு என்று ஏதும் கிடையாது.

"ஆமாம்: எங்களுக்கு இதுவொரு பெரும் பிரச்னைதானாக்கும்..." என்று சொல்ல ஆரம்பித்தார், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மார்த்தாண்டம் முனிசிபல் சேர்மன் டி. மணி.


"எல்லாம் சில தனிப்பட்டவர்களின் சுயநலப் போக்குதான். நாங்கள் குலசேகரம் ரோடிலுள்ள இடத்தில் பஸ் நிலையம் வந்தால் அனைவருக்கும் வசதியாக இருக்கும் என்கிறோம். மற்றவர்களோ, தேசிய நெடுஞ்சாலையிலிருந்து ஒரு கி. மீக்கு மேல் தள்ளியிருக்கிற காளைச் சந்தையில்தான் வரவேண்டும் என்கிறார்கள். இதுதான் பிரச்னையே..."

"காளைச் சந்தையில் வருவதில் உங்களுக்கென்ன ஆட்சேபம்?"

"அந்த ரோடு குறுகலானது. மார்க்கெட் ஏரியா என்பதால் நெரிசலானது. அதோடு நெடுஞ்சாலையிலிருந்து தள்ளியிருப்பதால் விரைவு பஸ்களுக்கு நேரம் ஒரு பிரச்னை. இதை நேசமணி போக்குவரத்துக் கழகம்

* இரையுமன் துறை: மீன்வளம் அதிகம்...





• ஆற்றில் மணல் எடுப்பதால் பாலம் கூட பலமிழக்கிறது...

• கொச்சு: ''எங்கள் கஷ்ட ஜீவனத்திலும் மண் விழுந்து விட்டது....''



சுட்டிக் காட்டியிருக்கிறது. ஆனால் நாங்கள் கூறுகிற இடம் அனைவருக்கும் வசதியான இடம். இந்த இடம் போலீஸ் குடியிருப்புக் கட்டுவதற்காக ஒரு போலீஸ்காரர் தானமாகக் கொடுத்தது என்பதால் அதில் பஸ் நிலையம் அமைக்கக் கூடாது. முனிசிபாலிட்டிக்குச் சொந்தமான காளைச் சந்தையில் தான் அமைக்க வேண்டும் என்பது மற்றவர்களின் பிடிவாதம். அதற்குக் காரணம், பொது நலமல்ல. காளைச் சந்தை இடத்தில் பஸ் நிலையம் வந்தால், அதையொட்டியுள்ள எம். எல். ஏ.வுக்கு வேண்டப்பட்டவர்களின் நிலமதிப்பு அதிகமாகும் என்கிற சுயநலம்தான். போலீஸ் குடியிருப்புக்காக நிலதானம் செய்தவரின் சந்ததிகளே, அந்த இடத்தில் பஸ் நிலையம் அமைவதில் ஆட்சேபணையில்லை என்று சொல்கிறார்கள். ஆனால், எம். எல். ஏ.வைச் சேர்ந்தவர்கள் தான் ஒரு காரியத்துக்காகக் கொடுக்கப்பட்ட இடம் வேறு காரியத்துக்காகப் பயன்படுத்தப்படக் கூடாது என்று முரண்டு பிடிக்கிறார்கள். இனி, இதில் முதலமைச்சர் தலையிட்டுத்தான் ஒரு முடிவுக்கு வர வேண்டும்...'' என்கிறார் சேர்மன் மணி.

''சுயநலம் எங்களுக்கல்ல; சேர்மன் மணிக்குத்தான்...'' என்கிறார் இ. காங்கிரஸ் எம். எல். ஏ.வான சுந்தரதாஸ்.

''சேர்மன் மணிக்குப் பக்கபலமாக இருப்பவர்கள் சிறு சிறு வியாபாரிகள். அவர்கள் இப்போது ஏழு இடங்களில் பஸ்கள் நிற்கின்றனவே, அங்கெல்லாம் கடைகள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் வசதிக்காகத்தான் எந்த இடத்திலும் பஸ்



உத்தரங்கோடு: கூரையில்லாமல் நடுநிலைப்பள்ளி

நிலையம் வருவதை சேர்மன் விரும்பவில்லை. என்னை விட மார்த்தாண்டம் ஊரில் சேர்மனுக்குத்தான் செல்வாக்கு அதிகம். ஊரிலுள்ள ஒவ்வொருவரையும் அவர் நன்றாக அறிந்தவர். இந்த நிலையில் நான் எப்படி குறுக்கே நிற்க முடியும்? பொய் சொல்லுகிறார் அவர். ஏழு இடங்களில் பஸ்கள் நின்றால்தான் அவருக்கு மிக வேண்டிய வியாபாரிகளின் வியாபாரம் நடக்கும் என்பதால் அவர் எந்த இடத்திலும் பஸ் ஸ்டாண்டு வருவதையே விரும்பவில்லை. பஸ் நிலையம் அமைப்பதென்பது முனிசிபல் சேர்மன் வேலை. இவர் மட்டும் முட்டுக்கட்டை போடாமல் இருக்கட்டும், நான் சி.எம்மின் காலைப் பிடித்தாவது மார்த்தாண்டத்தில் பஸ் நிலையம் அமைக்க ஏற்பாடு செய்கிறேன்...'' என்றார் எம்.எல்.ஏ. சுந்தரதாஸ் உணர்ச்சிவசப்பட்டு!

மார்த்தாண்டம் பஸ் நிலையத்தின் கதை இப்படியென்றால் களியக்காவிளை பஸ் நிலையத்தின் கதை வேறு மாதிரி. தி.மு.க. அரசாங்கத்தின் அமோக சுறுசுறுப்புக்கு அதுவொரு சிறந்த உதாரணம். ஆமாம்; கடந்த 17.8.89 அன்று 'களியக்காவிளை பஸ் நிலையத் திறப்பு விழா' நடந்திருக்கிறது. திறந்து வைத்தவர் முதல்வர் மு. கருணாநிதி. தலைமை வகித்தவர் அமைச்சர் கண்ணப்பன். முன்னிலை வகித்தவர்கள் அமைச்சர் கே. பி. கந்தசாமியும் அமைச்சர் சுப்புலட்சுமி ஜகதீசனும்!

ஆனால், உண்மையில் நடந்தது பஸ் நிலையத் திறப்பு விழாவா? இல்லவே இல்லை. ஏற்கெனவே இருக்கும் பஸ் நிலையத்தை விரிவாக்குவதற்கான அடிக்கல் நாட்டு விழாதான். ஆனால் கல்லில் 'திறப்பு விழா' என்று எப்படி பொறிக்கப்பட்டது?

''அந்தக் கல்லில் உள்ள வாசகங்களை நான் இதுவரை படித்துப் பார்க்கவே இல்லை. நீங்கள் சொல்லித்தான் அந்த விஷயமே எனக்குத் தெரிகிறது. எப்படியாயினும் அது அதிகாரிகள் செய்த தவறேயன்றி வேறில்லை....'' என்றார் எம். எல். ஏ.

''அன்றைய திருவாங்கூர் — கொச்சின் சமஸ்தானத்தின் முதல்வர் பி. கோவிந்த மேனன் 55ம் ஆண்டு ஆகஸ்ட் 3ல் ஒரு திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார். அது தான் 'விளாத்துறை நீரேற்றுப் பாசனத் திட்டம்! இதில் தாமிரபரணியின் கிளையாற்றிலிருந்து முதல் கட்டமாக ஒரு பம்பிங் ஸ்டேஷன். இது அனுப்பும் நீரை மேலும் பம்ப் செய்ய இரண்டாவது நிலையிலும் ஒரு பம்பிங் ஸ்டேஷன். மூன்றாவது நிலையில் ஒரு பெரிய தொட்டி. அதிலிருந்து வாய்க்கால் மூலம் பாசனத்திற்கு நீர் செல்லும். குடிநீர்ப் பிரச்னையையும் தீர்க்கும்.

''இத் திட்டம் பூர்த்தியாக்கப்பட்டு 3.8.60ல் காமராஜால் திறந்து வைக்கப்பட்டது. பல கிராமங்களுக்கும் மிகுந்த பலன் கொடுத்தது. ஆனால் முந்தைய தி. மு. க. ஆட்சிக் காலத்தில் ஒரு நாள் திடீரென்று பம்பிங்ஸ்டேஷனிலிருந்தமோட்டார்களெல்லாம் கழற்றி எடுத்துச் செல்லப்பட்டு விட்டதால் பல கிராமங்களில் குடிநீருக்கே கஷ்டமாக இருக்கிறது...'' என்று சம்பந்தப்பட்ட இடங்களுக்கே நம்மை நேரில் அழைத்துச் சென்று காண்பித்தார், பாரதீய ஜனதா கட்சியைச்சார்ந்தவிளாத்துறைடவுன்பஞ்சாயத்துத் தலைவரான சி. ஆர். காந்தி.

''இந்த நீரேற்றுப் பாசனத் திட்டம் செயல்படாமல் போன போது, சிற்றாறு — பட்டணங்கால் அணை கட்டப்பட்டு, அதன் மூலம் இத் திட்டத்தில் அடங்கியுள்ள ஆயக்கட்டு நிலங்களும் பாசன வசதி பெற்றதால் யாரும் அப்போது கவலைப்படவில்லை. ஆனால் இப்போது தண்ணீர்ப் பிரச்னை எழுந்துள்ளபடியால் மீண்டும் இது செயல்பட வேண்டும் என்கிறோம். இது செயல்படுவதில் உள்ள ஒரே பிரச்னை பராமரிப்புப் பிரச்னை. யார் பராமரிப்பது? பஞ்சாயத்தா? பொதுப்பணித் துறையா? இதுதான் பிரச்னை. இருப்பினும் அரசிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அரசும் பரிசீலித்து வருகிறது.



''உங்க ஆபீஸ் வாசல்ல எப்பவும் ஒரு மந்திரவாதி உட்கார்ந்திருக்காரே, ஏன்?''

''ஆபீஸ்ல யாராவது பயங்கரமான கனவு கண்டுட்டா, உடனே மந்திரிக்கவிடத்தான்!''

— வி. ரேவதி.



செயல்படாத நீரேற்றுப் பாசனத் திட்டம்.



சி. ஆர். காந்தி



டி. மணி — மார்த்தாண்டம் முனிசிபல் சேர்மன்.

''இதன் கூடவே பள்ளிக்குட்டம் அணை கட்டுவது பற்றியும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்த அணையால் நிலத்தை இழக்கக் கூடியவர்கள் அணை கட்டப்படுவதை எதிர்க்கிறார்கள். மற்றவர்கள் ஆதரிக்கிறார்கள். அங்குள்ள நிலம் ரப்பர் விளையும் அருமையான நிலம். அதை அழித்து அணை கட்டினால், லாபகரமானதாக இருக்குமா? அரசு பரிசீலித்து வருகிறது...'' என்றார் எம். எல். ஏ.

''கனரக ரப்பர் தொழிற்சாலை ஒன்று அமைப்பேன் என்று நீங்கள் தேர்தல் வாக்குறுதி கொடுத்தீர்களாமே?'' — எம். எல். ஏ. விடம் கேட்டோம்.

''அப்படியொரு வாக்குறுதியை நான் தரவேயில்லை. இதெல்லாம் இந்தக் கம்யூனிஸ்ட்களின் பொய்ப் பிரசாரம். கன்னியாகுமரி மாவட்டத்தில் உலக அளவில் சிறந்த தரமுள்ள ரப்பர் விளைகிறது என்பது உண்மைதான். என் தொகுதியில் களியல் என்ற பகுதியில் விளைகிறது. ஆயினும் இங்கு யாரும் ரப்பர் தொழிற்சாலை அமைக்க முன்வருவதில்லை. காரணம், இந்தக் கம்யூனிஸ்ட்கள் கிளப்பி விடும் தொழிலாளர் பிரச்னை. உதாரணத்திற்கு என் தொகுதியை ஒட்டியுள்ள தம்ஸ் அப் தொழிற்சாலையை எடுத்துக் கொள்ளுங்கள்... அதை நிர்வாகம் மூட நினைக்கிற அளவுக்குப் பிரச்னைகளை வளர்த்து விட்டார்கள் கம்யூனிஸ்ட்கள். இந்த நிலையில் எந்த முதலாளி இங்கே தொழிற்சாலை அமைக்க முன்வருவான்?''

''அப்படியானால் கம்யூனிஸ்ட்கள் முன் வைக்கும் தொழிலாளர் கோரிக்கைகள் நியாயமற்றவை என்கிறீர்களா?''

''நான் அப்படிச் சொல்லவில்லை. ஆனால், ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்ட புதிதிலேயே கோரிக்கைகளைக் கொண்டு சென்றால், அது எப்படி நியாயம்? அதே சமயத்தில் முதலாளிகள் பக்கமும் முழு நியாயம் இருப்பதாகவும் சொல்ல முடியாது. உதாரணத்திற்கு முந்திரிப் பருப்புத் தொழிற்சாலைகளை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் ஆயிரக்கணக்கான பெண்கள் வேலை செய்கிறார்கள். ஆனால், அரசாங்கம் நிர்ணயித்துள்ள குறைந்தபட்சக் கூலியைக் கூட முதலாளிகள் கொடுக்க மறுக்கிறார்கள். மீறிக் கேட்டால் தொழிற்சாலைகளை மூடிவிடுவதாகப் பயமுறுத்துகிறார்கள். இதிலெல்லாம் அரசுதான் தலையிட்டு ஏதாவது செய்ய வேண்டும். முதல் வரும் தொழிற்சாலைகள் அமைப்பதில் தீவிரம் காட்டுவதால், கன்னியாகுமரி மாவட்

டத்தில் நிச்சயம் தொழிற்சாலைகள் அமையும் என்று நம்புகிறேன்...'' என்றார் எம். எல். ஏ.

அதங்கோடு என்ற கிராமத்தில் சுமார் பதினைந்து குடும்பங்கள் மண்பாண்டங்கள் செய்து விற்று ஜீவனம் நடத்துகிறார்கள். ''எங்கள் கஷ்ட ஜீவனத்திலும் மண் விழுந்து விட்டது. நாங்கள் காலங்காலமாக அருகிலுள்ள புறம்போக்குக் குளத்தில்தான் தண்ணீர் எடுத்து வந்து எங்கள் தொழிலைச் செய்து வந்தோம். இப்போது அதற்கான வழியை ஒருவர் அடைத்துத் தன் நிலத்தோடு சேர்த்துக் கொண்டு விட்டதால் தண்ணீர் எடுக்க வழியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இதுபற்றி எம். எல். ஏ. விடம் சொன்ன போது உடனே ஆக்கிரமிப்பை அகற்றித் தருவதாகச் சொன்னார். ஆனால் இன்னும் செய்யவில்லை...'' என்றார் கொச்சு என்பவர் பரிதாபமாக.

''அந்தக் குளத்திற்குச் செல்லும் பாதையை ஆக்கிரமித்திருப்பது உலகமகா அநியாயங்களில் ஒன்றுதான். நானும் நூறு முறைகளுக்குமேல் அதிகாரிகளிடம் சொல்லிப் பார்த்துவிட்டேன். அவர்கள் அசைய மாட்டேன் என்கிறார்கள். இனி நான் தனிப்பட்ட முறையிலாவது கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து அந்த ஆக்கிரமிப்பை அகற்றியே தீருவேன்...'' என்றார் எம். எல். ஏ.



° கிளிட்டஸ்: ''எங்களுக்குத் தனித் தொகுதி என்றார்கள்...''

இதேபோல் இன்னொரு விஷயத்திலும் தமது தோல்வியை ஒப்புக் கொள்கிறார் எம். எல். ஏ. சுந்தரதாஸ். அது காஞ்சாபுரம் — வைக்கலூர் சாலையைச் செப்பனிட்டுத் தருவது.

''அதில் பதினேழு ஆண்டுகளுக்கு முன்பு செப்பனிடும் வேலை துவங்கியது. செப்பனிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட காண்ட்ராக்டர் ஊழல் செய்ததாக விஜிலன்ஸில் கேஸ் போட்டார்கள். அது இன்னும் முடிந்தபாடில்லை என்பதால் அந்த வேலை அப்படியே கிடக்கிறது. எனது வாக்குறுதியை அதில் நிறைவேற்ற முடியாததால் அண்மையில் நடந்த எம். பி. எலெக்ஷனில் எங்கள் கட்சிக்கு வோட்டுக் கேட்க நான் அந்தப் பகுதிக்குச் செல்லவேயில்லை. எந்த முகத்தை வைத்துக் கொண்டு நான் போய் அங்கு வோட்டுக் கேட்க முடியும்? எப்படியாவது அதைச் செப்பனிடும் பணியைத் துவங்கச் செய்துவிடுவேன்...'' என்று நம்பிக்கை இழக்காமல் சொன்னார் சுந்தரதாஸ்.

''கடந்த தேர்தலில் வோட்டுக் கேட்க வந்த போது, கடலோரங்களிலுள்ள மீனவர்களுக்குத் தனித் தொகுதி அமைத்துத் தருவதாகச் சொன்னார் எம். எல். ஏ. ஆனால் அதற்கு இதுவரை அவர் என்ன செய்தார் என்று தெரியவில்லை. மேலும், முட்டம், விழிஞ்ஞம் கடலோரக் கிராமங்களில் மீன் பிடித் துறைமுகங்கள் உண்டு. அதுபோல் எங்கள் ஊரிலும் ஒரு மீன்பிடித் துறைமுகம் இருந்தால் வசதியாக இருக்கும்...'' என்றார் இரையுமன் துறை என்ற கடலோர கிராமத்தைச் சேர்ந்த கிளிட்டஸ் என்பவர்.

''மீனவர்களுக்குத் தனித் தொகுதி என்று நான் வாக்குறுதி கொடுத்தேனா? அப்படி ஓர் எம். எல். ஏ. வாக்குறுதி தர முடியுமா? நான் ஒன்றும் முட்டாளல்ல; சட்டம் படித்தவன். தனித் தொகுதி என்பதெல்லாம் பாராளுமன்றப் பிரச்னை. சட்டமன்றப் பிரச்னை அல்ல. இதுவும் கம்யூனிஸ்ட்கள் செய்யும் திட்டமிட்ட பொய்ப் பிரசாரம். அது கிடக்கட்டும்...

''இரையுமன் துறைக்கு அருகிலுள்ள தேங்காய்ப்பட்டிணத்தில்ஒருமீன்பிடித்துறைமுகம் கட்ட வேண்டுமென்று நான் சொன்னேன். ஆனால், ஆய்வு செய்த போது அந்தப் பகுதியிலுள்ள மண்வாகு காரணமாக அங்கே மீன் பிடித் துறைமுகம் கட்ட முடியாது என்று சொல்லி விட்டார்கள்...'' என்ற எம். எல். ஏ.விடம், ''கடற்பகுதியில் மீனவர்கள் நிறைய இருப்பதால் மீன் பதனிடும் தொழிற்சாலை ஏதும் அமைக்க ஏற்பாடு செய்யலாமே?'' என்றோம் நாம்.

''இதுவரை அப்படியொரு கோரிக்கையை அந்த மக்கள் என்னிடம் கொண்டு வரவில்லை. அவர்கள் பிடிக்கும் மீன்களை வாங்க வியாபாரிகள் ஏராளமாக இருப்பதால் அவர்களுடைய விற்பனையிலும் ஏதும் பிரச்னைகள் இல்லை என்று கருதுகிறேன். எனினும் நீங்கள் சொன்ன விஷயம் நல்ல விஷயம்தான். அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்...'' என்றார் சுந்தரதாஸ்.

''குழித்துறை ஆற்றில் சட்டவிரோத

மாகப் பலரும் மணல் எடுக்கிறார்கள். அதுவும் குளிக்கும் இடங்களில் எடுக்கிற போது, சிலர் ஆழந்தெரியாமல் இறங்கி இறந்து போவதாகவும், பாலங்களுக்கு அடியில் எடுப்பதால் பாலம் பலமிழந்து போவதாகவும் சொல்கிறார்கள்?''

''பலரும் சொந்த உபயோகத்துக்குத்தான் எடுக்கிறார்கள் என்பதால் யாரும் கண்டு கொள்வதில்லை. கூடவே சிலர் சட்ட விரோதமாகவும் எடுத்து விற்பனையும் செய்யலாம். மறுக்கவில்லை. பலரும் சொந்த உபயோகத்திற்காகவே எடுப்பதால் விட்டு விடத்தான் வேண்டியிருக்கிறது.''

''திற்பரப்புக்குஅருகிலுள்ள களியல் என்ற இடத்தில் கோதையாறு ஓடுகிறது. அதைக் கடந்தால் அந்த மக்களுக்கு நான்கு கி. மீ. தூரம் சுற்றிச் செல்வது மிச்சமாகும். அதில் ஒரு பாலம் கட்ட ஏற்பாடு செய்வதாகச் சொன்னீர்களாமே?''

''அதுகுறித்து எஞ்ஜினியர்களையெல்லாம் அழைத்து வந்து காட்டினேன். இரண்டு கி. மீ. இடைவெளியில் இருபுறமும் இரண்டு பாலங்கள் இருப்பதால் அதற்குள் மூன்றாவதாக ஒரு பாலம் கட்ட விதிமுறை இல்லை என்று சொல்லி விட்டார்கள். உண்மையில் அந்த இடத்தில் ஒரு பாலம் அவசியம்தான். இப்போது தெப்பத்தில் ஆற்றைக் கடந்து செல்லும் மக்களுக்குச் சிரமம்தான் என்பதில் சந்தேகமில்லை. ஒப்புக் கொள்கிறேன். பஞ்சாயத்துத்தான் ஏதாவது செய்ய வேண்டும்.

''உங்களுக்கு ஒன்று கூறுகிறேன். எல்லா விஷயத்திலும், எம். எல். ஏ. தலையிட முடியாது. நகரசபை, பஞ்சாயத்துக்கள்தான் முழு அதிகாரம் படைத்தவை. அவை சரியாக இருந்தாலேபிரச்னைகள்தீர்ந்துபோய்விடும். உதாரணத்திற்கு ஒன்று. செங்கல் சூளை இங்கு அதிகம். சூளை வைக்க நகராட்சி தான் அனுமதி வழங்க வேண்டும். குடியிருப்புப் பகுதிகளில் அனுமதி வழங்கக் கூடாது என்பது விதி. ஆனால் மார்த்தாண்டத்தில் அது மீறப்படுகிறது. அப்படி விதிகள் மீறப்பட்டு கன்னக்கோல் என்ற இடத்தில் வைக்கப்பட்ட செங்கல் சூளை அண்மையில் வெடித்து, நிறையச் சேதம். நல்ல வேளையாக ஆள் சேதம் ஏதுமில்லை.

''இதுபற்றி அவர்கள் நகராட்சியில் புகார் செய்த போது அதிகாரிகள் எந்த நடவடிக்கையுமே எடுக்கவில்லை. வேறு வழியின்றி அந்த மக்கள் என்னிடம் வந்தார்கள். நான் முதல்வர் வரை அப்பிரச்னையைக் கொண்டு சென்ற பிறகுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டதென்றால் பார்த்துக் கொள்ளுங்கள்...'' என்றார் சுந்தரதாஸ்.

''உத்திரங்கோடு என்ற இடத்திலுள்ள நடுநிலைப் பள்ளிக் கட்டடத்தில் கூரையே இல்லை... இதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தீர்களா?''



* எம். எல். ஏ. சுந்தரதாஸ்: ''இனிமேல் நான் அடிக்கடி தொகுதிக்குச் செல்வேன்...''

''உத்திரங்கோட்டில் மட்டுமல்ல; மற்ற இடங்களில் அப்படியிருக்கும் பள்ளிகள் பற்றியும் புகைப்படங்களோடு அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளேன். அதே போல் குழித்துறையிலுள்ள பெண்கள் கல்லூரிக்கான கட்டட வசதிகள் பற்றியும் அமைச்சரிடம் எடுத்துச் சொல்லியுள்ளேன். அதேபோல் மடிச்சல் கால்வாய் விரிவாக்கம் பற்றியும் எடுத்துச் சொல்லியுள்ளேன். இந்த மாவட்ட மக்கள் மற்ற மாவட்ட மக்களைப் போன்றவர்கள் அல்ல. கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், அடுத்த தேர்தலுக்கு வோட்டுக் கேட்கச் சென்றால், கழுத்தில் துண்டைப் போட்டுக் கேள்வி கேட்பார்கள். மக்களை ஏமாற்ற முடியாது.''

''இருப்பினும் கூட நீங்கள் தொகுதிக்கு அடிக்கடி சென்று மக்களிடம் குறைகளைக் கேட்டறிவதில்லை என்று பலரும் சொல்கிறார்கள்.''

''இந்தக் குற்றச்சாட்டை நான் முழுமையாக ஒப்புக் கொள்கிறேன். பிரச்னைகள் என்று வரும்போதுதான் அந்தந்தப் பகுதிகளுக்குச் செல்கிறேனே தவிர, மற்ற சமயங்களில் செல்வதில்லை என்பது உண்மைதான். இதுவொரு பெரிய குறைதான். என்னைச் சுற்றியுள்ளவர்கள் இக்குறையை என்னிடம் இதுவரை சுட்டிக்காட்டியதே இல்லை. நீங்கள் சுட்டிக்காட்டி விட்டீர்கள். இனி நிச்சயம் அடிக்கடி தொகுதியில் சுற்றுப் பயணம் செய்து மக்களின் குறைகளைக் கேட்பேன் என்று உறுதி கூறுகிறேன்...'' என்றார் எம். எல். ஏ. சுந்தரதாஸ்.

— இளங்கோவன்

வண்ணப்படங்களும், படங்களும்: சுபா

விபத்து

பாலிடெக்னிக் காலேஜ் பக்கம் அந்த விபத்து நிகழ்ந்தது. பொன்னுசாமி எப்பொழுதும் கடைப்பிடிக்கும் நிதானம் ஏதோ ஒரு காரணத்தில் தவற, சின்னச் சந்திலிருந்து வேகமாக வந்த சைக்கிள்காரன் வலது பக்க முன் சக்கரத்தில் அடிபட்டு உள்ளே விழ, பிரேக் பிடிக்கப்பட்ட பஸ் நிதானமாக அவன் மேல் ஏறி இறங்கியது.

ஒரு மரண அலறல். கேட்ட எல்லோருமே உயிர் அவஸ்தையை உணர்ந்தார்கள். பொன்னுசாமிக்குச் சகலமும் விட்டுப் போனது. பஸ்ஸை ரோட்டின் இடப்புற ஓரத்தில் கொண்டு நிறுத்தினார். அடிவயிற்றிலிருந்து பயம் சுருண்டு எழ உடல் முழுவதும் வியர்த்தது.

முழு ரோட்டையும் அடைத்துக் கூட்டம் சேரத் தொடங்கியது. கதவைத் திறந்து கொண்டு பொன்னுசாமி இறங்கினார். தவறு இது. நேர் செய்ய முடியாத தவறு.

ரத்தக் குவியலாக அவன் கிடந்தான்.

''டிரைவர்களுக்குக் கண் கிடையாது...''

''நேரம்தான் பெரிசு. எவன் குறுக்க வந்தா என்ன?''

எதுவும் காதில் விழவில்லை. பொன்னுசாமி கைகள் நடுங்கியபடி பக்கத்தில் இருந்த சோடாக் கடை பெஞ்சில் உட்கார்ந்தார். ஒரு சோடாவை வாங்கிப் பாதி குடிப்பதும், பாதி உடம்பை நனைப்பதுமாக இருந்தார்.

உடம்பு நனைந்தாலும் குளிரவில்லை. எரிந்தது. பொன்னுசாமியின் இருபது வருஷ சர்வீஸில் முதல் உயிர்ப்பலி இது. பதினேழு வயசில் அப்பாவிடம் கோபித்துக் கொண்டு விருத்தாச்சலம் பாஸஞ்சரில் திருட்டு ரயில் ஏறிச் சேலம் வந்து, க்ளீனராக வாழ்க்கையைத் தொடங்கியதிலிருந்து கெட்ட பெயர் கிடையாது. மூன்று வருஷம் க்ளீனர். பத்து வருஷம் மெக்கானிக். இரண்டு வருஷம் கண்டக்டர். எட்டு வருஷமாக டிரைவர். டிரைவர் பதவி உயர் பதவி. கம்பெனியே வளர்த்து அவருக்குக் கொடுத்திருக்கும் பதவி. எல்லாம் பொடிப் பொடியாய் ரோடு ஓரத்தில் ரத்தமாகக் கிடக்கிறது.

முதலில் ஓடி வந்தது அந்த உடல் சொந்தங்களில் ஒன்று. வந்தது பெண். எனவே சோகமும் பெரிது; வெளிப்பாடும் பெரிது.

''அய்யய்யோ ராசா! தெனைக்கும் போறதை விடச் சீக்கிரமா டூட்டிக்குப் போறேன்னியே, இப்படி எமனோட டூட்டி பண்ணப் போயிட்டியே. புள்ளைங்க இன்னும ஆளாகாம இருக்கே? இதுகளைக் கவனிக்காம ஒனக்கு என்ன ராசா அவசரம்? அய்யோ! நான் இனிமே என்ன பண்ணுவேன்?''

தலையிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டது இன்னும் கொடுமையாக இருந்தது.

பொன்னுசாமி இருபத்தி ஐந்தாவது வயதில் அங்கம்மாவைக் கல்யாணம் செய்து கொண்டார். சின்னப் பெண்ணாக, எப்பொழுதும் தலையைக் கவிழ்த்துக் கொண்டிருக்கும் அவள் இப்பொழுது பிரகாசமாக — மூன்று குழந்தைகளின் தாயாக ஒரு பெரிய குத்து விளக்கு. அவள் வந்த பிறகுதான் வீட்டில் நிதானமும், பொறுமையும் வந்திருக்கிறது. கோபம் கிடையாது. இரவில் ஏற்றிக் கொள்ளும் சாராயம் கிடையாது. சம்பளம் கூடக் கூட குழந்தைகளின் வயதும், தேவைகளும் கூடியது. இருந்தாலும் மாசக் கடைசியில் இருபது ரூபாயாவது மிச்சம் பண்ணும் சாமர்த்தியம் அங்கம்மாவிடம் இருந்ததால்தான் பெரிய பயல்கள் இரண்டு பேரையும் படிக்க வைக்க முடிகிறது. மூத்தவன் குமார் ப்ளஸ் டூ. நிறையக் கனவு காண்கிறான். இஞ்ஜினியரிங் அல்லது பாலிடெக்னிக் கனவு.

போலீஸ் வந்தது. மோட்டார் பைக்கில் இன்ஸ்பெக்டர். பின்னால் ஒரு கான்ஸ்டபிள். இன்னொரு பைக்கில் வந்தவர்களில் ஒருவன் அந்த உடலைச் சுற்றி சாக்பீஸ் கோடு போட்டான்.

''எவன்டா டிரைவர்?'' அதிகாரம் கேள்வி கேட்டது.

மொத்தக் கூட்டமும் பொன்னுசாமிக்கு விரல் நீட்டியது. போலீஸை பார்த்தால் எழுந்து நிற்க வேண்டும் என்ற கலவர பயம் கூட மரத்துப் போன நிலையில் பொன்னுசாமி உட்கார்ந்திருந்தார்.

''நில்லுடா'' முழங்காலுக்குக் கீழே உருட்டையான, உறுதியான லத்தி இறங்கியது. நின்றார்.

''என்ன அவசரம்னு வண்டி ஓட்டறீங்கடா? ட்ராஃபிக் ரூல் உண்டா? பிஸி ரோட்ல இருபது கிலோ மீட்டர் வேகத்தைத் தாண்டக் கூடாதுன்னா எவன்டா கேக்கறீங்க? அம்பது அறுபதுன்னு ஒம்பது மணிக்கு ஏன்டா வண்டி ஓட்டறீங்க? லைசன்ஸ் இருக்கா? வலது பக்கம் வந்து விழுந்திருக்கானே கண்ணு என்ன அவிஞ்சா போச்சு?''

கேள்விகள். கேள்விகள். பதிலே சொல்ல முடியாத அல்லது பதில் இல்லாத கேள்விகள்.

சத்தியப்பிரியன்

வனவாசிக்குக் காலையில் இரண்டு ட்ரிப். ஒன்று ஏழு மணிக்கு. இன்னொன்று ஒன்பது மணிக்கு. முதலில் டாட்டா வண்டி போகும். இரண்டாவது டிவிஎஸ் 1503 லேலண்ட். இதோ விபத்தைச் செய்துவிட்டு எந்தப் பாதிப்பும் இல்லாமல் நின்று கொண்டிருக்கும் வண்டி.

ஒரு நாள் விட்டு ஒரு நாள் வரும் ட்ரிப்பில் பொன்னுசாமி எப்பொழுதும் ஒன்பது மணிக்குத்தான் வண்டி எடுப்பார். அதிலும்



இந்த டிஎஸ்எம் 1503 குழந்தை மாதிரி.பாண்டிச்சேரியில் ரிஜிஸ்தர் ஆகி வந்த வண்டி. டயர் போடவோ, மாற்றவோ, சிரமம் கொடுக்காத வண்டி. வாரம் ஒரு முறை ப்ரேக் லைன், என்ஜின், பாட்டரி, லைட் எல்லாவற்றையும் செக் பண்ண இவரே இறங்கி விடுவார். ஒன்பது மணி என்றால் சரியாக ஒன்பது மணிக்குப் புது பஸ் ஸ்டாண்டை விட்டு வண்டியை எடுத்து விடுவார். பின்னால் வரும் பஸ்காரர்களின் வயிற்றெரிச்சலையும், வசவுகளையும் வாங்கிக் கொண்டு இன்னும் இரண்டு டிக்கெட் ஏறாதா, கலெக்ஷன் கூடாதா என்று நிற்க மாட்டார். இந்த விஷயத்தில் கண்டக்டருக்கும் அவருக்கும் வாய்ச் சண்டை கூட வரும். பைபாஸ் வரையில் இருபது கிலோமீட்டர் ஸ்பீட். பைபாஸிலிருந்து ஜங்ஷன் வரை முப்பது. ஜங்ஷனில் பிடித்தால் வண்டி சமயத்தில் எண்பதைத் தொட ஒரு மணி நேரத்தில் வனவாசி. நிதானம். நிதானம். இத்தனையையும் மீறி விபத்து நிகழ்ந்து விட்டது.

ஏன்?

முதலாளிக்கு டெலிபோனில் செய்தி சொல்லப்பட்டது. வெள்ளை மாருதியில் கதர் ஜிப்பா, கதர் வேட்டியில் வந்து இறங்கினார். கூடவே ஜீன்ஸ் பாண்ட் மாட்டிக் கொண்ட அவரது பையன்.

''நீயா விபத்து உண்டாக்கின பொன்னுசாமி?''

பொன்னுசாமி கேட்க வேண்டிய கேள்வியை முதலாளி கேட்டார். இருபது பஸ்களின் ஓனர்.

''எப்படி?''

என்ன பதில் சொல்வது?

நேரம் பிசகிப் போனது. முதல் நாள் முழுவதும் அங்கம்மா பேசின பேச்சு காதில் நின்றது காரணம். முதல் பையன் அவளை உருவேற்றி விட்டிருக்க வேண்டும். ப்ளஸ் டூவில் நிறைய மார்க் வாங்கினால் சுலபமாக இஞ்ஜினியரிங் படிப்பு. கொஞ்சம் சிரமப்பட்டாலும் நாலு வருஷம் ஓடி விடும். இஞ்ஜினியரிங் முடித்தால் ஆயிரம் ஆயிரமாகச் சம்பாதிக்கலாம். அப்பாவுக்கு பஸ் ஓட்ட வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. சம்மதிக்க வைப்பது உன் பொறுப்பு. அவன் சொன்ன அத்தனையையும் அவரிடம் ஒப்பித்தாள். பாதி சலனம். பாதி பயம். எல்லாமாகக் குழம்பிய நிலையில் பஸ் எடுக்கத் தாமதமானது. ஐந்து ரோடிலும், ஜங்ஷனிலும் கணிசமான பாஸஞ்சர்களை ஏற்ற பைபாஸ் தாண்டியதும் ஐம்பதைத் தொட்ட வண்டி விபத்தில் வந்து நின்றது. சொல்ல முடியுமா?

சொல்ல முடியவில்லை.

ரிப்போர்ட்டாக போலீஸில் எழுதி வாங்கிக் கொண்டார்கள். ஒரு வாரம் ரிமாண்டில் இருந்தார். முதலாளி ஜாமீன் பேப்பர்களில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து அவனை வெளியில் கொண்டு வந்தார்.

பொன்னுசாமியை முதலாளி கூப்பிட்டு விட்டார்.

''என்ன செய்யப் போறே?''

''சொல்லுங்க முதலாளி.''

''நிதானம் முக்கியமில்லியா?''

''ஆமாம்.''


''காம்பன்சேஷனுக்கு வழக்குப் போட்டிருக்காங்க. தப்பு உன் பக்கம்தான். அம்பதாயிரம், ஒரு லட்சம்னா என்ன செய்யறது? அவங்களை ஏமாத்தி, இவங்களை ஏமாத்தி அங்கே லஞ்சம் கொடுத்து, இங்கே லஞ்சம் கொடுத்து கேஸை ஒண்ணுமில்லாம பண்ணிடலாம். அதுக்கும் செலவாகும். என்ன செய்யலாம்?''

டிரைவர் பதவி போனது. சிம்மாசனத்தைப் பிடுங்கிச் சாக்கு மூட்டையில் உட்காரச் சொன்னார்கள். மாசம் மூந்நூறு ரூபாய் பிடிக்கப்பட இரண்டு வருஷ இன்க்ரிமெண்ட் கட் என்றார்கள்.

மனம் முழுவதும் அரிப்பு. தாங்க முடியாத குற்ற உணர்ச்சி. சில்லறை சில்லறையாக வண்டி எடுக்கும் பொழுதெல்லாம் சக்கரம் வயிற்றில் ஏறி இறங்கியதை உணர்த்தும் நினைவு.

பெரியவன் அப்பாவை ஒன்றுமே கேட்கவில்லை. ப்ளஸ் டூவோடு படிப்பை முடித்துக் கொண்டு பஞ்சு மில்லில் கணக்கெழுதப் போகிறான். இதற்கு முன்னால் இஞ்ஜினியரிங் கனவு கண்டவனைப் போலவே காட்டிக் கொள்வதில்லை.

இப்போது தூக்கம் மீறும் பொழுது பொன்னுசாமி குடிக்கிறார். நாட்டுச் சரக்கு உள்ளே போனால் சகலமும் சாந்தி. பரம ஞான நிலை. இரவில் அங்கம்மா கண்டு பிடித்து மொலு, மொலு என்று பிடித்துக் கொள்வாள். பதிலுக்கு இவர் இரைய, வாதம் முடிவில் அங்கம்மா அடி வாங்கிக் கொண்டு அழுவதோடு முடியும்.



அசத்திர ஸ்லைடு!

திருவையாறு சினிமா தியேட்டர்களில், மோசமான படம் திரையிடப்பட்டால், படம் ஆரம்பிப்பதற்கு முன்பே, சிலைடு மூலம், ''படம் சுமாராகத்தான் இருக்கிறது. தயவு செய்து பெஞ்சுகளை உடைக்காதீர்கள்'' என்று கேட்டுக் கொள்கிறார்கள்!

— கடலூர் சாந்தன்.



அத்தியாயம் 76

வடவாறு திரும்பியது!

இந்த நெடுங் கதையில் வரும் பாத்திரங்களில் சிலர் முன்னுக்குப் பின் முரணாகப் பேசியும் நடந்தும் வருவதை வாசகர்கள் கவனித்திருப்பார்கள். அதற்கு நாம் பொறுப்பாளிகள் அல்லவென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். மனித இயற்கை என்றைக்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை. சூழ்நிலையும் பல்வேறு சம்பவங்களும் அவர்களுடைய மனப்போக்கையும் நடத்தையையும் மாற்றுகின்றன. நேற்றைக்கு ஒருவிதமாகப் பேசி நடந்து கொண்டவர்கள் இன்றைக்கு முற்றும் முரணான முறையில் பேசுகிறார்கள்; நடந்து கொள்கிறார்கள்.

பெரிய பழுவேட்டரையர் இக் கதையின் ஆரம்பத்தில் ஒரு பெரிய இராஜரீகச் சதியாலோசனைக்குத் தலைவராயிருந்தார். இப்போது பலரறியத் தாம் செய்த குற்றத்தை எடுத்துச் சொல்லி அதற்குப் பிராயச்சித்தமாகத் தம் சிரஸைத் தாமே துணித்துக் கொண்டு உயிரை விட விரும்பினார்.

பெரிய சம்புவரையர் இளவரசர் கரிகாலரின் உயிரற்ற உடலைக் கண்டதும் அடைந்த திக்பிரமையில், எப்படியாவது அந்தப் படுகொலைப் பழி தம் குடும்பத்தின் மீது சாராமற்போகவேண்டுமென்னும் கவலையினால், தமது பழைய மாளிகையையே எரிக்க முற்பட்டார். அந்தப் பழியை வேறு யார் தலையிலாவது சுமத்தி விட வேண்டும் என்று ஆவல் கொண்டு தம் மகனையும் அந்த முயற்சியில் ஏவி விட்டார். இப்போது குற்றம் தம் பேரில் சாரவில்லை என்று அறிந்த பிறகு, தம் அருமைப் புதல்வி வந்தியத்தேவன் பேரில் கொண்டிருந்த அன்பின் ஆழத்தை அறிந்த பிறகு, வேறு விதமாகப் பேசலானார்.

இந்தக் கதையின் ஆரம்பத்தில் மூடு பல்லக்கில் மறைந்து வந்த போலி மதுராந்தகனையே உண்மை மதுராந்தகன் என்றும், அவனே பின்னால் உத்தம சோழ சக்கரவர்த்தியாகப் போகிறான் என்றும் வாசகர்கள் நம்பும்படியாக நாம் செய்திருந்தோம். கதைப் போக்குக்கு அது அவசியமாயிருந்தது. ஏன்? முதன் மந்திரி அநிருத்தருக்கு ஓரளவு பழைய இரகசியங்கள் தெரிந்திருந்த போதிலும், அவரும் மதுராந்தகரே முடிசூட்டப்பட வேண்டும் என்று கருதினார். அக் காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளின் முன்பின் விவரங்களை அவர் பூரணமாக அறிந்திருக்கவில்லை. ஆகையால், போலி மதுராந்தகர் கண்டராதித்தரின் புதல்வர் அல்லவென்றாலும் சுந்தர சோழருக்கும் மந்தாகினிக்கும் பிறந்த புதல்வர் என்று எண்ணினார். அதனால் அவரும் தடுமாற்றம் அடைந்து முன்னுக்குப் பின் முரணாக நடந்து கொள்ள வேண்டியதாயிற்று.

இந்தக் கதையிலேயே நேர்மையில் சிறந்தவர் என்றும், சத்திய சந்தர் என்றும் நாம் கருதி வந்த அருள்மொழித் தேவர் முன்னுக்-

அமரர் கல்கி

குப்பின் முரணாகப் பேசியதை நாம் கடைசியாகப் பார்த்தோம். இத்தனை காலமும் தமக்கு அரசுரிமை வேண்டவே வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருந்தவர் இப்போது திடீரென்று தம் போக்கை மாற்றிக் கொண்டு "நானே முடிசூட்டிக் கொள்வேன்" என்று பலர் அறியச் சொல்ல ஆரம்பித்து விட்டார். சமய சந்தர்ப்பங்கள்தான் அவருடைய இந்த மாறுதலுக்குக் காரணம் என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டிய அவசியம் இல்லை அல்லவா?

ஓம்; அருள்மொழித் தேவரின் வார்த்தைகள் அங்கிருந்தோர் அனைவரையும் வியப்பும் திகைப்பும் அடையச் செய்தன. அதே சமயத்தில், அவர்களுடைய மனத்தில் ஒரு நிம்மதியையும் உண்டாக்கின. சோழ சிங்காதனம் ஏறுவதற்கு எல்லா வகையிலும் தகுதியானவரும் உரிமையுள்ளவரும் பொன்னியின் செல்வர்தான் என்பதை அனைவரும் உள்ளத்தின் உள்ளே அந்தரங்கத்தில் உணர்ந்திருந்தார்கள். சோழ சாம்ராஜ்யத்தில் வாழ்ந்த மிகப் பெரும்பாலான மக்களின் விருப்பமும் அதுவே என்பதை அறிந்திருந்தார்கள். மக்களின் பொது விருப்பத்துக்கு விரோதமாக வேறொருவரைச் சிங்காதனம் ஏறச் செய்தால் அதனால் நேரக் கூடிய பின்விளைவுகள் எப்படியிருக்குமோ என்ற கவலையும் அவர்கள் மனத்தில் இருந்தது.

ஆனாலும் பல்வேறு காரணங்களினால் அங்கிருந்தவர்களில் யாரும் பொன்னியின் செல்வருக்கு முடிசூட்ட வேண்டும் என்று சொல்லத் துணியவில்லை.

இப்போது பொன்னியின் செல்வரே முன்வந்து "நானே மகுடம் சூட்டிக் கொள்ளப் போகிறேன்; தங்கள் திருக்கரத்தினால் முடிசூட்ட வேண்டும்!" என்று பெரிய பழுவேட்டரையரைப் பார்த்துக் கூறியதும், அனைவருடைய உள்ளத்திலும் அமைதியும் மகிழ்ச்சியும் உண்டாயின. "நல்ல முடிவு ஏற்பட்டு விட்டது; ஆனால் அந்த முடிவு செய்ய வேண்டிய தர்மசங்கடமான பொறுப்பு நம்மை விட்டுப் போய் விட்டது!" என்று உவகையும் ஆறுதலும் அடைந்தார்கள்.

பொன்னியின் செல்வரிடம் குடிகொண்டு பிரகாசித்த அபூர்வமான காந்தசக்தியானது, அவர் எதிரில் அவருக்கு விரோதமாக யாரும் பேச முடியாமல் செய்தது என்பதை முன்னம் நாம் பார்த்திருக்கிறோம். ஏன்? வைர நெஞ்சம் படைத்த சின்னப் பழுவேட்டரையர் கூடப் பொன்னியின் செல்வரை நேரில் கண்டதும் தலைவணங்கி அவருக்கு முகமன் கூறி வரவேற்றதை நாம் பார்த்தோம் அல்லவா?

பெரிய பழுவேட்டரையர் தம் உயிரைத் தாமே போக்கிக் கொள்ளும் முயற்சியைப் பொன்னியின் செல்வர் தடுத்து நிறுத்தியதை அறிந்தார். அவருடைய வார்த்தையின் பொருளையும் உணர்ந்தார். இளவரசரின் செயலும் சொற்களும் அவரது உள்ளத்தை நெகிழச் செய்தன. உணர்ச்சி மிகுதியினால் அவருடைய உடலும் நடுங்கியது. கண்களில் கண்ணீர் மல்கியது. நாத்தழுதழுத்தது.

ஒருவாறு மனத்தை விரைவில் திடப்படுத்திக் கொண்டு அவர் கூறினார்:— "சோழ குலத் தோன்றலே! பொன்னியின் செல்வ! தங்களுடைய சொற்கள் எனக்கு அளவிலா மகிழ்ச்சியை அளித்தன. தாங்களே முடிசூட்டிக் கொள்ள வேண்டும் என்று நான் தங்களை வேண்டிக் கொள்ள எண்ணினேன். சோழ குலத்துக்கே துரோகியாய்ப் போய் விட்ட எனக்கு அந்த வேண்டுகோள் விடுக்கவே உரிமை இல்லை என்று பேசாதிருந்தேன். தங்களுடைய பெரிய பாட்டனாரும் மகா புருஷருமான கண்டராதித்த சக்கரவர்த்தி ஓர் ஏற்பாடு செய்து விட்டுப் போனார். தமது சகோதரர் வழிசத்தில் வந்தவர் சிங்காதனம் ஏற வேண்டும் என்று அந்த மகான் வற்புறுத்திக் கூறினார். அவர் செய்திருந்த ஏற்பாட்டுக்கு விரோதமாக நாங்கள் சிலர் காரியம் செய்ய எண்ணினோம். எங்களுக்குள் ஏற்பட்டிருந்த மாற்சரியத்தினால் அந்தச் சிவபக்த சிரோமணியின் விருப்பத்துக்கு மாறாக மதுராந்தகத் தேவருக்குப் பட்டம் சூட்ட எண்ணினோம். தங்கள் தந்தையும் அதற்கு உடன்பட்டு விட்டார். நாங்கள் கருதியது நிறைவேறியிருந்தால், எவ்வளவு பெரிய விபரீதம் ஆகியிருக்கும் என்று எண்ணும்போது என் குலை நடுங்குகிறது! இளவரசே! தங்கள் தந்தை வீற்றிருக்கும் சோழ சிங்காதனத்துக்கு உரிமை பூண்டவர் தாங்கள்தான். சோழ சாம்ராஜ்யத்தின் மணிமகுடத்தை அணிவதற்குத் தகுதி வாய்ந்தவரும் தாங்கள்தான்! தாங்கள் சின்னஞ்சிறு பாலனாக இருந்த போது என் மார்பிலும் தோளிலும் ஏந்திச் சீராட்டியிருக்கிறேன். அப்போதெல்லாம் தங்கள் அங்க அடையாளங்களைப் பற்றியும் தங்கள் கரங்களை அலங்கரிக்கும் ரேகைகளையும் பார்த்து, 'இந்தப் பூமண்டலத்தையே ஆளும் மன்னாதி மன்னர் ஆகப் போகிறீர்கள்' என்று நானும் சொல்லிக் கொண்டிருந்தேன். ஓடத்திலிருந்து காவேரியின் வெள்ளத்தில் விழுந்து முழுகிப் போன தங்களைக்

காவேரி அன்னை கரங்களில் ஏந்தி எடுத்துக் கொடுத்ததைப் பற்றி எத்தனையோ நூறு தடவை சொல்லி மகிழ்ந்திருக்கிறேன். இந்த மூன்று வருஷ காலத்திலேதான் காமக் குரோத மத மாற்சரியங்கள் என் மனத்தைக் கெடுத்து விட இடங் கொடுத்துத் துரோகி யாய்ப் போய் விட்டேன். பொன்னியின் செல்வ! தாங்கள் சோழ சிங்காதனம் ஏறி மணி மகுடம் புனைவது முறைமையானது; தகுதியானது. ஆனால் அந்த மணி மகுடத்தை எடுத்துத் தங்கள் சிரசில் சூடும் தகுதியை நான் இழந்து விட்டேன்! என் கரங்களும் இழந்து விட்டன! இந்தக் கரங்களினால் நான் இனி செய்யக்கூடிய புனிதமான காரியம் என் குற்றத்துக்குப் பரிகாரமாக என்னை நான் மாய்த்துக் கொள்வதுதான்!''

''இல்லை, இல்லை! கூடவே கூடாது!'' என்று அந்த மந்திராலோசனை சபையில் பல குரல்கள் எழுந்தன.

சுந்தர சோழர் உருக்கம் நிறைந்த குரலில் கூறினார்: ''மாமா! இது என்ன வார்த்தை! இது என்ன காரியம்! தாங்கள் சோழ குலத்துக்கு அப்படி என்ன துரோகம் செய்து விட்டீர்கள்? ஒன்றுமில்லையே? என்னுடைய குமாரர்களுக்குப் பதிலாக என் பெரியப்பாவின் குமாரரைச் சிங்காதனத்தில் அமர்த்த எண்ணினீர்கள். அது சோழ குலத்துக்கு எப்படித் துரோகம் செய்வதாகும்? என் புதல்வர்களைக் காட்டிலும் என் பெரிய தந்தையின் குமாரனுக்குச் சோழ குலத்து மணி மகுடம் புனைய அதிக உரிமை உண்டல்லவா? இப்போது கூட, என் மனத்தில் உள்ளதைச் சொல்ல நீங்கள் அனுமதி கொடுத்தால்....''

முதன் மந்திரி அநிருத்தர் குறுக்கிட்டு, ''பிரபு! இந்த நாடெங்கும் 'அருள்மொழி வர்மரே திருமுடி சூட வேண்டும்' என்ற குரல்கள் ஒலிக்கின்றன. இத்தனை நாளாக அஞ்ஞாத வாசம் செய்து வந்த கண்டராதித்த தேவரின் திருக்குமாரரும் அதே உறுதி கொண்டிருக்கிறார். பொன்னியின் செல்வரும் அதே முடிவுக்கு வந்து விட்டார். இனி, அதற்கு மாறான யோசனை எதுவும் செய்வதில் பயன் ஒன்றுமில்லை!'' என்றார்.

''நீங்கள் யாரேனும் அவ்வாறு யோசனை செய்தாலும் நான் ஒப்புக் கொள்ள முடியாது!'' என்றார் சேந்தன் அமுதனாகிய மதுராந்தகத் தேவர்.

''என் மகன் கூறுவதுதான் சரி; இனி வேறு யோசனையே வேண்டியதில்லை!'' என்றார் செம்பியன் மாதேவியார்.

''அன்னையே! தங்கள் வார்த்தைக்கு எதிர் வார்த்தை கூறக் கூடியவர் இங்கு



''இன்று கிரைண்டர் ரிப்பேராக இருப்பதால், பில்லுக்குத் தலையைச் சொறிந்து, பல்லிளிப்பவர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.''

— கஸ்தூரி குரலோன்.

யாரும் இல்லை. கடவுளின் விருப்பத்தின்படி நடக்கட்டும். ஆனாலும் பழுவூர் மாமா நம் குலத்துக்குத் துரோகம் செய்து விட்டதாகக் கூறித் தம் உயிரை மாய்த்துக் கொள்ள விரும்புவது சரியில்லைதானே? தங்கள் திருக்குமாரருக்கு முடிசூட்ட வேண்டும் என்று அவர் பிரயத்தனப்பட்டது சோழ குலத்துக்குத் துரோகம் செய்தது ஆகாது அல்லவா?'' என்றார் சக்கரவர்த்தி.

பெரிய பழுவேட்டரையர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு கூறலுற்றார்:— ''ஐயா! கேளுங்கள்! என்னுடைய முயற்சி பலிதமாயிருந்தால் எவ்வளவு பயங்கரமான விபரீதம் நடந்திருக்கும் என்பதைக் கேளுங்கள்! இதை நான் சொல்லாமலே என் உயிரை மாய்த்துக் கொள்ள விரும்பினேன். முக்கியமாக சோழ சாம்ராஜ்யத்தின் மேன்மையைத் தவிர வேறு எதையும் கனவிலும் கருதாதவனான என் சகோதரன் காலாந்தககண்டனின் மனத்தைப் புண்படுத்தத் தயங்கினேன். ஆயினும் இப்போது என் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு உண்மையைச் சொல்லி விடத் தீர்மானித்து விட்டேன். சக்கரவர்த்தி! நாங்கள் மகான் கண்டராதித்தரின் குமாரர் என்று எண்ணிச் சோழ சிங்காதனத்தில் ஏற்றி வைப்பதற்கு இருந்தவன் சோழ குலத்துக்குப் பரம்பரைப் பகைவனான வீர பாண்டியனுடைய மகன்!.......''

''ஐயையோ!'' ''இல்லை!'' ''அப்படி இருக்க முடியாது!'' என்றெல்லாம் அச் சபையில் குரல்கள் எழுந்தன.

''உங்களுக்கு நம்புவது கஷ்டமாகத்தானிருக்கும். என் காதினாலேயே நான் கேட்டிரா விட்டால் நானும் நம்பியிருக்க மாட்டேன். அரசர்க்கரசே! என்னுடைய அவமானத்தை நான் மீண்டும் சொல்லிக் கொள்ள வேண்டியிருக்கிறது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் நான் எந்தப் பெண்ணின் முக லாவண்யத்தைக் கண்டு மயங்கி மோக வலையில் வீழ்ந்து அவளை என் அரண்மனையில் சர்வாதிகாரியாக்கி வைத்திருந்தேனோ, அவள் வீர பாண்டியனுடைய மகள்! அவள் வாயினால் இதை ஆதித்த கரிகாலரிடம் சொல்லியதை நான்

என் காதினால் கேட்டேன். வீரபாண்டியனை ஆதித்த கரிகாலர் கொன்றதற்குப் பழிக்குப் பழி வாங்கவே பழுவூர் அரண்மனைக்கு அவள் வந்திருந்தாள். அதற்குத்தான் சமயம் பார்த்துக் கொண்டிருந்தாள்! அந்தப் பாதகியும் அவளுடன் சதி செய்தவர்களும் கரிகாலரைக் கொன்று விட்டு வீரபாண்டியனுடைய குமாரனையே சோழ சிங்காதனத்தில் ஏற்றி வைக்கத் திட்டமிட்டிருந்தார்கள். நம் குல தெய்வமான துர்க்காதேவியின் அருளினால் அத்தகைய கொடிய விபரீதம் நேராமல் போயிற்று. துர்க்கா பரமேசுவரி என்கண்களைத் திறப்பதற்காகவே அந்த வாணர்குலத்து வீரனை அனுப்பி வைத்தாள். அவன் மூலமாகவே இந்தப் பயங்கரமான இரகசியங்களை நான் அறிய முடிந்தது. இன்னும் சிலசெய்தி



களை அவனிடம் நான் கேட்டறிய வேண்டுமென்று இருந்தேன். அவனை இந்த இளஞ் சம்புவரையன் கொன்று வடவாற்று வெள்ளத்தில் விட்டு விட்டு வந்து விட்டான்! திர்மூடன்!''

இந்த வார்த்தையைக் கேட்டு அங்கிருந்தோர் அனைவரும் திகைத்துப் போய் நிற்கையில், கந்தமாறன் மட்டும், ''ஐயா! எப்படியும் அந்த வந்தியத்தேவனும் சதிகாரக் கும்பலுடன் சேர்ந்தவன்தானே? அவனை நான் வேலெறிந்து கொன்றதில் குற்றம் என்ன?'' என்றான்.

பெரிய பழுவேட்டரையர் அவனைக் கோபமாகத் திரும்பிப் பார்த்தார். அச்சமயம் அநிருத்தர் குறுக்கிட்டு, ''ஐயா! வாணர்குல வீரனைக் கொன்று விட்டதாக இவன் சொல்லுகிறான். அவ்வளவுதானே? இவன் வேலெறிந்து கொன்றவன் வந்தியத்தேவன் என்பது என்ன நிச்சயம்?'' என்று கேட்டார்.

பார்த்திபேந்திரன் சிறிது தணிவான குரலில், ''வடவாற்று வெள்ளம் திரும்பி மேற்கு நோக்கிப் பாய்ந்து செத்தவனின் உடலைக் கொண்டு வந்தால், ஒரு வேளை உண்மை வெளியாகும்!'' என்றான்.


''யார் கண்டது? வடவாற்று வெள்ளம் திரும்பிப் பாய்ந்தாலும் பாயலாம்!'' என்றார் முதன் மந்திரி அநிருத்தர்.

அவருடைய வாக்கை மெய்ப்படுத்துவது போல் அடுத்த கணத்தில் சொட்ட நனைந்திருந்த ஈரத் துணிகளிலிருந்து தண்ணீர்த் துளிகளைச் சிந்த விட்டுக் கொண்டு வந்தியத்தேவன் அந்த மந்திராலோசனை மண்டபத்தில் பிரவேசித்தான்! அவனுடைய முகத்தின் மிரண்ட தோற்றமும், அவன் உள்ளே வந்த அலங்கோலமான நிலையும், வெள்ளத்தில் மூழ்கி இறந்தவனுடைய உடல் ஏதோ ஒரு ஜால வித்தையினால் எழுந்து நடமாடுவது போன்ற பிரமையைப் பார்த்தவர்களின் உள்ளத்தில் உண்டாக்கியது.

''ஆகா! வடவாற்றின் வெள்ளம் திரும்பியே விட்டது! இறந்தவனையே உயிர்ப்பித்துக் கொண்டு வந்து விட்டது!'' என்றார் முதன் மந்திரி அநிருத்தர்.

அச் சமயம் வந்தியத்தேவன் அங்கே அந்தக் கோலத்தில் எவ்வாறு வந்து சேர்ந்தான் என்பதை வாசகர்களுக்கு நாம் அறிவித்தாக வேண்டும்.

பொன்னியின் செல்வர், குந்தவை தேவி முதலியோர் தன்னைத் தனியே விட்டுச் சென்ற பிறகு வந்தியத்தேவன் மிக்க மனச்சோர்வு அடைந்திருந்தான். வீர தீரச் செயல்கள் புரிந்து உலகத்தையே பிரமிக்க வைக்க வேண்டும் என்னும் ஆர்வம் கொண்டிருந்தவனுக்குப் பலரும் தன்னைப் பார்த்துப் பரிதாபமும் அனுதாபமும் கொள்ளும்படியான நிலையில் இருந்தது சிறிதும் பிடிக்கவில்லை. பாதாளச் சிறையைக் காட்டிலும் இந்த அரண்மனை அந்தப்புரத்துச் சிறை கொடியதாக அவனுக்குத் தோன்றியது. பொன்னியின் செல்வரின் தயவினால் அவன் பேரில் கரிகாலரைக் கொன்ற குற்றத்தைச் சுமத்தாமலும் அதற்காகத் தண்டனை அளிக்காமலும் ஒருவேளை விட்டு விடுவார்கள். ஆனால், அரண்மனையில் உள்ளவர்களுக்கெல்லாம் அவனைப் பற்றி ஒரு சந்தேகம் இருந்து கொண்டுதானிருக்கும். அவனைக் களங்கம் உள்ளவனாகவே கருதுவார்கள். இளையபிராட்டி அவனிடம் காட்டும் இரக்கமும் அனுதாபமும் அவ்வளவுடன் நின்று விடும். சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொள்ளப் போகும் பொன்னியின் செல்வரின் திருத்தமக்கையாரைக் கைப் பிடித்து மணந்து கொள்வது கனவிலும் நடவாத காரியம். அரண்மனைப் பெண்கள் அவனை ஏதோ குற்றம் செய்து மன்னிப்புப் பெற்ற சேவகனாகவே மதித்து நடத்துவார்கள். அமைச்சர்களும் தளபதிகளும் அவனை அருவருப்புடன் நோக்குவார்கள். அரச குலத்தினரின் சித்தம் அடிக்கடி மாறக் கூடியது. இளவரசர் அருள்மொழிவர்மர்தான் அவன் மீது எத்



தனை நாள் அபிமானம் காட்டி வருவார் என்பது யாருக்குத் தெரியும்?

ஆகா! முதலில் அவன் உத்தேசித்திருந்தபடி சேந்தன் அமுதன் குடிசைக்கு அருகில் குதிரை மேல் ஏறியிருந்தால், இத்தனை நேரம் கோடிக்கரையை அடைந்திருக்கலாம். ஏன்? ஈழத் தீவுக்கே போய்ச் சேர்ந்திருக்கலாம். தான் வைத்தியர் மகனால் தாக்கப்பட்ட சமயத்தில் குதிரை மேல் ஏறிச் சென்றவர்கள் யாராயிருக்கும்? ஒருவன் 'பைத்தியக்காரன்' என்று பெயர் வாங்கிய கருந்திருமன். உண்மையில் அவன் பைத்தியக்காரனில்லை; சூழ்ச்சித் திறமை மிக்கவன். அவனுடன் சென்றவன் யார்? பழைய மதுராந்தகத் தேவரைக் காணோம் என்கிறார்களே? அவராக இருக்கலாம் அல்லவா? ஆம், ஆம்! அப்படித்தான் இருக்க வேண்டும்! அவர்கள் இருவரும் சேர்ந்து தப்பித்துச் செல்வதில் ஏதோ பொருள் இருக்கிறது. அந்த மதுராந்தகர் உண்மையில் யார் என்பது இங்குள்ளவர்களுக்குத் தெரிந்தால் எத்தனை வியப்படைவார்கள்? அவர்கள் இருவரும் பத்திரமாக ஈழ நாடு சேர்ந்து விட்டால், அதன் விளைவு என்னவாகும்? ஏன்? பாண்டிய நாட்டு மணிமகுடத்துக்கும் இரத்தின ஹாரத்துக்கும் உரியவன் அவற்றை அடைந்து விடுவான்! மகிந்தன் உதவியுடனே மறுபடியும் நாட்டை அடையப் போர் துவங்குவான்.....! அப்படி நடவாமல் மட்டும் தடுக்க முடியுமானால்.....? தடுக்கக் கூடிய ஆற்றல் உடையவன் தான் ஒருவன் தான்! இங்கே இந்த அரண்மனை அந்தப்புர அறையில் ஒளிந்து உயிர் வாழ்வதில் என்ன பயன்?

இவ்வாறெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டு வந்தியத்தேவன் அந்த அறையில் அங்குமிங்கும் வட்டமிட்டு உலாவிக் கொண்டிருந்தான். அடிக்கடி அந்த அறையின் ஒரு பக்கத்துச் சுவரில் இருந்த பலகணியின் ஓரமாக வந்து நின்று ஆவலுடன் வெளியே பார்த்தான். அரண்மனையின் ஒரு கோடியில் இருந்த மேல் மாடத்து அறையில் அவன் இருந்து வந்தான். அதையொட்டி வடவாறு சென்று கொண்டிருந்தது. அங்கே அரண்மனையின் வெளிச்சுவரே தஞ்சைபுரிக் கோட்டையின் வெளிச் சுவராகவும் அமைந்திருந்தது. அந்தப் பலகணி வழியாகக் கீழே குதித்தால் வடவாற்று வெள்ளத்தில் குதித்து விடலாம். அல்லது செங்குத்தான சுவரின் வழியே சிறிது பிரயத்தனத்துடன் இறங்கியும் வடவாற்று வெள்ளத்தை அடையலாம். அந்த மேன் மாடத்துக்குக் கீழே அரண்மனைப் பெண்டிர் நதியில் இறங்கிக் குளிப்பதற்காக வாசலும் படித்துறையும் இருந்ததாகத் தோன்றியது. மேன்மாடத்திலிருந்து கீழே சென்று அந்த வாசலை அடைவதற்கு வழி எப்படி என்று தெரியவில்லை. அந்தப்புரத் தாதிமார்களுக்கும் அரசிளங் குமரிகளுக்கும் அது தெரிந்திருக்கும். அவன் தப்பிச் செல்வதாயிருந்தால், அவர்கள் அறியாமல் அல்லவா செல்ல வேண்டும்....?

பலகணி ஓரத்தில் நின்று அவன் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருந்த போது, சற்றுத் தூரத்தில் தோன்றிய ஒரு காட்சி அவனைத் திடுக்கிடச் செய்தது.

அவன் இருந்த அரண்மனைக்கு அடுத்த அரண்மனைத் தோட்டத்தில் ஒரு பெண் தலைவிரி கோலமாகப் பித்துப் பிடித்தவள் போல் ஓடிக் கொண்டிருந்தாள். ஆகா! அது பெரிய பழுவேட்டரையரின் அரண்மனைத் தோட்டம் போல அல்லவா இருக்கிறது! ஆம், ஆம்! அந்தத் தோட்டந்தான்! அதில் பித்துப் பிடித்தவள் போல் ஓடுகிற பெண் யார்? ஈசுவரா! மணிமேகலை போல் அல்லவா இருக்கிறது? அவளுக்கு என்ன நேர்ந்து விட்டது? எதற்காக அப்படி ஓடுகிறாள்...? கரிகாலர் மரணம் அடைந்த அன்றிரவு கடம்பூர் மாளிகையில் அவள் அவனுக்குச் செய்த உதவிகள் எல்லாம் நினைவுக்கு வந்து அவனுடைய நெஞ்சு விம்மும்படிச் செய்தன! அவளுக்குப் பின்னால், அவளைத் தொடர்ந்து பிடிப்பதற்காக ஓடுகிறவர்களைப் போல் இன்னும் இரு முதிய ஸ்திரீகள் ஓடினார்கள். ஆனால் அவர்கள் வர வரப் பின்தங்கி வந்தார்கள். மணிமேகலையை அவர்கள் பிடிப்பது இயலாத காரியம்! அதோ அவள் வெளி மதில் சுவரண்டை வந்துவிட்டாள். சுவர் ஓரமாக வளர்ந்திருந்த ஒரு மரத்தைப் பிடித்துக் கொண்டு மதில் சுவரின் மேல் ஏறிவிட்டாள்! ஐயோ! என்ன காரியம் செய்கிறாள்? அவள் கையிலே ஒரு சிறிய கத்தி மின்னுகிறதே! அதனால் என்ன செய்யப் போகிறாள்? கடவுளே! மதில் சுவரிலிருந்து தலைகுப்புற நதியின் வெள்ளத்தில் விழுந்து விட்டாளே!

முன்னொரு சமயம் வீர நாராயண ஏரியில் மணிமேகலையும் நந்தினியும் தண்ணீரில் முழுகும் தறுவாயிலிருந்ததும், அவன் மணிமேகலையை எடுக்க முதலில் உத்தேசித்துப் பிறகு நந்தினியைத் தூக்கிக் கரை ஏற்றியதும், அதனால் மணிமேகலை அடைந்த ஏமாற்றமும் அந்த ஒரு கண நேரத்தில் வந்தியத்தேவனுடைய மனத்தில்



அருள்வாக்கு

பிறருக்கு உதவியாகப் பரோபகாரப் பணிகளைச் செய்யத்தான் வேண்டும். ஆனால் தன் கை தன் கார்யத்துக்கு உதவியாக இல்லாமல், தன் கார்யத்துக்கு அகத்தின் மற்ற மனுஷ்யர்களின் கையை எதிர்பார்த்துக் கொண்டு அவர்கள் கையில் நம் கார்யப் பொறுப்பைப் போட்டு விட்டு, நாம் ஊருக்கு உபகாரம் பண்ணுவது என்பது தப்பு.

ஊருக்குப் பண்ணினால் நாலு பேர் நம்மைக் கொண்டாடுவார்கள். வீட்டுக்கு, நாம் செய்ய வேண்டிய கடமையைச் செய்வதற்காக, வீட்டார் நம்மைக் கொண்டாட மாட்டார்கள்தான். வீட்டுக்குப் பண்ணாமல், தன் சொந்தக் கார்யத்தைப் பண்ணிக் கொள்ளாமல் ஊருக்கு ஒருத்தன் பண்ணுகிறான். அதற்கு இடைஞ்சலாகச் சொல்கிறார்களே என்று வீட்டுக்காரர்களிடம் எரிந்து விழுந்து கொண்டிருக்கிறானென்றால் அவனுக்கு வாஸ்தவமான தொண்டு உள்ளமே இல்லை, பேர் வாங்குவதற்காகத்தான் ஸோஷல் ஸர்வீஸ் என்று பண்ணுகிறான் என்றே அர்த்தம்.

தொண்டு உள்ளத்துக்கு லக்ஷணம் அன்பும் அடக்கமும்தான். "தொண்டர் தம் பெருமை" என்று அதைப் பெரியதற்கெல்லாம் பெரியதாக மற்றவர்கள் கொண்டாடலாமேயொழிய, தொண்டு செய்கிறவனுக்குத் 'தான் பெரியவன்' என்ற எண்ணம் லவலேசங் கூட இருக்கக் கூடாது. தான் ரொம்பவும் சின்னவன் என்ற எண்ணமேயிருக்க வேண்டும். பேருக்கு ஆசைப்பட்டுக் கொண்டு செய்வதென்றால் அந்தத் தொண்டையே அழுக்குப் பண்ணினதாகத்தான் அர்த்தம். அடக்கமும் அன்பும் இருந்தால் வீட்டிலேயிருக்கிறவர்களை எதிர்த்துக் கொண்டும் அவர்களிடம் எரிந்து விழுந்து கொண்டும் எவனும் வெளியிலே தொண்டு செய்யப் போக மாட்டான்.

லோக ஸேவைக்குப் போகிறவர்கள் 'என் கார்யம் பூராவையும் நானே பார்த்துக் கொண்டுதான் பொதுத் தொண்டுக்குப் போவேன்' என்று பிரதிக்ஞை பண்ணிக் கொண்டு விட்டால் எல்லாம் ஸரியாய் விடும்.

தன் கார்யம் என்பதில் தன் வீட்டுக் கார்யம் மாதா — பிதா — பத்னி — புத்ரர் — ஸஹோதரர் முதலான வீட்டு மநுஷ்யர்களின் கார்யம் அடக்கந்தான்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

குமுறிப் பாய்ந்து வந்தன.

அதற்கு மேலே அவனால் சும்மா நிற்க முடியவில்லை. அரண்மனை மேல் மாடத்திலிருந்து பலகணியின் வழியாக வெளிவந்து ஆற்று வெள்ளத்தில் குதித்தான்.

சில கண நேரம் மூச்சுத் திணறிப் பின்னர் சமாளித்துக் கொண்டு நாலாபுறமும் பார்த்தான். ஆம்; அவன் குதித்த இடத்துக்கு அருகாமையில் படித்துறை மண்டபமும் அதற்கு உள்ளிருந்து வரும் வாசலும் காணப்பட்டன. அதற்கு எதிர்த் திசையிலேதான் சற்றுத் தூரத்தில் மணிமேகலை மதில் மேலிருந்து கீழே குதித்தாள். நல்ல வேளையாக, ஆற்று வெள்ளம் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தது. மணிமேகலையும் வெள்ளத்தில் மிதந்து வந்தால், அவனை நோக்கித்தான் வர வேண்டும்.

தட்டுத் தடுமாறி நதியின் கரையோரத்தை வந்தியத்தேவன் அடைந்தான். ஆற்று வெள்ளத்தை எதிரிட்டுக் கொண்டு விரைவாக நடந்து சென்றான். ஆகா! அதோ மணிமேகலை மிதந்து வருகிறாள்! அவள் உடம்பில் உயிர் இருக்கிறதா? அல்லது அது உயிரற்ற உடம்பா? ஐயோ! மறுபடியும், தன்னிடம் அன்பு கொண்டவர் ஒருவரின் உயிரற்ற உடம்பைச் சுமந்து செல்லும் துர்ப்பாக்கியம் தனக்கு ஏற்பட்டு விடுமோ! அடடா! அந்தப் பெண் தன்னிடம் எவ்வளவு அன்பு வைத்திருந்தாள்? வீர நாராயணத்து ஏரிக்கரை மண்டபத்தில் அவள் யாழ் வாசித்துக் கொண்டு பாடிய பாட்டின் தொனி, வெள்ளத்தில் அவள் உடல் மிதப்பது போலவே காற்றிலே மிதந்து வந்தது. வந்தியத்தேவனுக்கு அது அளவில்லாத

வேதனையை அளித்தது.

அந்த வேதனையை எப்படியோ சகித்துக் கொண்டு வெள்ளத்திலே பாய்ந்து சென்று மணிமேகலையை இரு கரங்களினாலும் தூக்கி எடுத்துக் கொண்டான். தெய்வங்களே! இந்தப் பெண்ணின் உயிரைக் காப்பாற்றிக் கொடுங்கள்! சோழ நாட்டிலுள்ள ஒவ்வொரு ஆலயத்துக்கும் சென்று ஒவ்வொரு சந்நிதியிலும் தரையில் விழுந்து கும்பிடுகிறேன். சிவன் கோயில், விஷ்ணு கோயில், அம்மன் கோயில், அய்யனார் கோயில் எல்லாவற்றுக்கும் சென்று ஒவ்வொரு தெய்வத்துக்கும் நன்றி செலுத்துகிறேன். சூது வாது அற்ற இந்தச் சாதுப் பெண்ணின் உயிரை மட்டும் காப்பாற்றிக் கொடுங்கள்!.......

இவ்வாறு மனத்துக்குள் பல்வேறு தெய்வங்களையும் பிரார்த்தித்த வண்ணமாக வந்தியத்தேவன் மணிமேகலையைப் படித்துறையில் கொண்டு வந்து சேர்த்தான். ஏற்கெனவே ஈட்டிக் காயத்தினால் மரணத்தின் வாசலிலிருந்து திரும்பி வந்தவன் நதி வெள்ளத்தில் திடீரென்று குதித்த அதிர்ச்சியினால், மேலும் பலவீனமுற்றிருந்தான். நீரில் மூழ்கியதனால் கனத்திருந்த மணிமேகலையைத் தூக்கிக் கொண்டு நதியில் நடந்த போது அவனுக்கு மூச்சு வாங்கியது. அவளை மேலும் தூக்கிக் கொண்டு நடப்பது இயலாத காரியமாகத் தோன்றியது. எனவே, படித்துறையின் மேல்படி அகலமாக இருந்ததைப் பார்த்து, அதன்பேரில் மணிமேகலையைப் படுக்க வைத்தான்.

பின்னர் என்ன செய்வது என்று ஒரு கணம் யோசித்தான். மணிமேகலையின் உடம்பில் இன்னும் உயிர்க்கனல் இருந்தது. ஆனால் அவளை மூர்ச்சை தெளிவித்து உயிர்ப்பிக்கும் காரியம் தன்னால் ஆகக்கூடியதில்லை. உடனே, யாராவது ஒரு பெண்ணின் உதவி தேவை. அரண்மனைக்குள் சென்று அங்கிருந்து யாரையாவது அழைத்து வர வேண்டும்.

படித்துறைக்கு அரண்மனைக்குள்ளேயிருந்து வருவதற்காக அமைந்த வாசல் அவன் கண்முன் காணப்பட்டது. அதன் அருகில் சென்று சாத்தியிருந்த கதவின் பேரில் தன் உடம்பில் மிச்சமிருந்த பலம் முழுவதையும் பிரயோகித்து மோதினான். அதிர்ஷ்டவசமாகக் கதவின் உட்புறத் தாழ்ப்பாள் தகர்ந்து கதவு திறந்து கொண்டது. திறந்த கதவின் வழியாகப் புகுந்து ஓடினான். சிறிது தூரம் அது குறுகிய பாதையாகவே இருந்தது. பின்னர், தாழ்வாரங்களும் முற்றங்களும் வந்தன. அங்கேயெல்லாம் யாரையும் காணவில்லை. "இங்கே யாரும் இல்லையா?" "ஒரு பெண்ணைக் காப்பாற்றுவதற்கு யாரும் இல்லையா?" என்று அலறிக் கொண்டே அங்குமிங்கும் ஓடினான். கடைசியாக, ஒரு பெரிய மண்டபத்தின் வாசலில் சேவகர்கள் இருவர் அவனை வழி மடக்கி நிறுத்த முயன்றார்கள். அவர்களை மீறித் தள்ளிக் கொண்டு உள்ளே புகுந்தான். அங்கே சக்கரவர்த்தி உன்னதமான சிங்காதனத்தில் அமர்ந்திருப்பதையும், ஆடவர்கள், பெண்டிர்கள் பலர் சூழ்ந்து நிற்பதையும் கண்டு திகைத்துப் போனான். முதலில் அவன் கண்களில் எதிர்ப்பட்ட பெண்மணி பூங்குழலி என்று தெரிந்து கொண்டதும், அவனுக்குச் சிறிது தைரியம் உண்டாயிற்று. "சமுத்திர குமாரி! சமுத்திர குமாரி! மணிமேகலை ஆற்றில் விழுந்து விட்டாள். உடனே வந்து காப்பாற்று!" என்று அலறினான்.

(தொடரும்)



ஜால்ரா!

ஹரியானாவில் தியாகிகள் தினம் கொண்டாடப்பட்டது. இதில் முதல்வர் சௌதாலா உள்பட பல மந்திரிகள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் பலர் சௌதாலாவையும் தேவிலாலையும் புகழ்ந்தார்களேயன்றி, தியாகிகளைப் புகழ வில்லை. இவர்களுக்கெல்லாம் ஒரு படி மேலே போய் 'ஜால்ரா' அடித்தார், ஹரியானா சட்டசபையின் உதவி சபாநாயகர் கே. எஸ். மாலிக்! அவர் இப்படிக் கூறினார்:


"நான் சமீபத்தில் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தேன். அப்போது ராணி எலிசபெத்தைச் சந்தித்தேன். அவர், 'பிரபல மான தேவிலால் பிறந்த மாநிலமான ஹரியானாவிலிருந்தா வருகிறீர்கள்?'' என்று கேட்டார்...!"

— ஜால்ரா தட்ட வேண்டியதுதான்... அதற்காக இப்படியா...?!

ஆதாரம்: டைம்ஸ் ஆஃப் இந்தியா.

தகவல்: — ராஜி ராதா.

ஒரு போஸ்ட் கார்டு போதும்!...



உங்களுக்கும் உங்களது முன்னேற்றத்திற்கும் இடையில் இப்பொழுது உள்ள தூரம் ஒரு போஸ்ட் கார்டு தான் என்று நாங்கள் கூறினால் அது சற்று மிகையாகத் தோன்றும். ஆனால் உண்மை அதுதான்.

நீங்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு ஆங்கில மொழியில் போதிய பயிற்சியின்மை ஒரு தடையாக இருந்திருந்தால்........

மற்றவர்கள் ஆங்கிலத்தில் பேசும் போது அதை ஓரளவு புரிந்து கொண்டும், அதற்கு ஆங்கிலத்திலேயே பதிலளிக்க முடியவில்லையே என்ற குறை உங்களிடம் குடி கொண்டிருந்தால்,

பல புத்தகங்களைப் படித்தும் ஆங்கிலத்தில் பேச முடியவில்லையே என்ற சலிப்பு உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்,

நீங்கள் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தை இப்பொழுது அடைய ஒரே ஒரு போஸ்ட்கார்டுபோதும்...ஆமாம்!

ஆங்கிலத்தில் இலக்கணப் பிழையின்றி கடிதங்கள் கட்டுரைகள் எழுத வேண்டும், தயக்க மின்றி சரளமாகப் பேசவேண்டும் என்ற உங்களது விருப்பத்தை ஒரு போஸ்ட் கார்டில் எழுதி தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்று போற்றப்படும் விவேகானந்தா கல்வி நிலையத் திற்கு இன்றே அனுப்புங்கள்.

நீங்கள் மேற்கொள்ள வேண்டிய பயிற்சியைப் பற்றியும் மற்ற தகவல்களையும் உடனே உங்களுக்கு அனுப்பி வைப்பார்கள்.

வீட்டிலிருந்த படியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் இந்த எளிய பயிற்சி முறையை நீங்கள் மேற்கொள்ளலாம்.

"நேர்முகப்பயிற்சியும் உண்டு."

என்ன?.....எங்கே கிளம்பி விட்டீர்கள்? போஸ்ட் கார்டு வாங்கத்தானே?

உங்களது முன்னேற்றத்தின் முதல் முயற்சி துவங்கிவிட்டது.

நீங்கள் கடிதம் எழுத வேண்டிய முகவரி

விவேகானந்தா கல்வி நிலையம்
9, மேட்லி ரோடு,
தி. நகர், சென்னை - 17.

NAGA

சுவீகாரம்

ஆபீஸிலிருந்து வீட்டுக்குப் போய் விட்டு, விட்டுக்குள் நுழைந்த சபேசன் பேச்சை ஆரம்பித்தார்.

''தர்மு, உன்னிஷ்டப்படியே நாம் ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் எடுத்துக்கலாம்னு முடிவு பண்ணிட்டேன்.''

இதைக் கேட்ட தர்முவுக்குச் சந்தோஷத்தில் குபுக்கென்று கண்ணில் நீர் திரண்டது.

''நம்முடன் பழகிய, நமக்குத் தெரிந்த சொந்தக்காரர்களின் பிள்ளைகளில் ஒருவனையே தத்து எடுத்துக் கொள்ளலாம். ஏன் என் தம்பி சிவராமனுக்கும் இரண்டு பிள்ளைகள், உன் தங்கை சரஸ்வதிக்கும் இரண்டு பிள்ளைகள். இவர்களில் யாராவது ஒருவரின் இரண்டாவது பிள்ளையை எடுத்துக் கொள்ளலாம், அதுவும் நீ சம்மதித்தால்...''

''என்னா அவா மனசு வந்து கொடுப்பாளா? நமக்குப் பெரிசா சொத்து சுகம் கூடக் கிடையாது.''

''கேட்டுப் பார்ப்போம்.''

அடுத்த வாரமே கணவனும் மனைவியுமாகச் செங்கல்பட்டிலிருக்கும் சிவராமனின் வீட்டுக்குக் கிளம்பினர். சிவராமனுக்கு இரண்டு பிள்ளைகள், ஒரு பெண் என்று மூன்று குழந்தைகள். மூத்த பிள்ளை பெற்றோரின் சொத்து. ஆகவே இரண்டாமவனைக் கேட்டுப் பார்க்க வேண்டும். கிளம்பிவிட்டனரே தவிர, போகுமிடத்தில் வரவேற்பு எப்படி இருக்குமோ என்ற பயம் இருவருக்குமேயிருந்தது. மனத்தில் ஓடிய எண்ணங்களை, வெளிப்படுத்தாமல் ஒருவித டென்ஷனுடன் இருந்தனர். சிவராமன் நல்லவன்தான். கொஞ்சம் சாது. அதனால்தானோ என்னவோ அவன் மனைவி மீனலோசனி முகத்தில்எப்பொழுதும்சிடுசிடுப்பு குடியிருக்கும்.

ஆழ்ந்த யோசனையிலிருந்த அவர்கள் ஏதோவோர் இடத்தில் பஸ் நின்ற போதுதான் சுயநினைவுக்கு வந்தனர்.

விசிறி போல் கொத்து லாட்டரி டிக்கெட்டுகளை விசிறிக் கொண்டே லாட்டரி டிக்கெட் விற்கும் பையன் அவர்களிடம் வந்தான்.

''தம்பி எனக்கு அதிர்ஷ்டத்துல நம்பிக்கை இல்லை. இந்தா இந்த எட்டணாவை வெச்சுக்கோ.''

பையன் முகம் சிவந்தான். ''இல்லம்மா, நான் இனாமாக் காசு வாங்கறதில்லை. இன்னும் ஒரு எட்டணாவைக் கொடுத்தீங்கன்னா ஒரு டிக்கெட் உங்களுக்கும் கொடுத்து விடுவேன்!''

வேறு வழி தோன்றாமல் இன்னொரு ஐம்பது பைசா நாணயத்தைக் கொடுத்து ஒரு லாட்டரி சீட்டை வாங்கி அவரிடம் கொடுத்தாள்.

சபேசன் கேலியாகச் சிரித்தார்.

அவர்கள் எதிர்பார்த்தது போலவே சிவராமனுக்கு முடிவெடுக்கும் உரிமை இல்லை என்பது விளங்கி விட்டது. தன் மனைவி மீனலோசனியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''இதோ பாரும்மா, நீயும் சிவராமனும் நல்லா யோசிச்சு ஒரு முடிவுக்கு வாங்க. முடிவு எங்களுக்குப் பாதகமாயிருந்தாலும் பரவாயில்லை...''

மீனலோசனி விருட்டென்று உள்ளே போனாள். சிவராமனும் பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு அவளைப் பின்தொடர்ந்தான்.

''இதோ பாருங்கோ உங்க மூஞ்சிக்கு எதிர்க்கவே சொல்றேன். எனக்கு இதிலே துளிக்கூட இஷ்டமில்லை. இந்தக் கிழங்களுக்குத்தான் ஏன் இப்படி புத்தி போறதோ? ஏதோ பெரிய சொத்து சுகத்தை வெச்சிண்டு காத்திண்டிருக்காப்பல நினைப்பு. இவாளுக்குக் கர்மம் பண்றதுக்குன்னா நான் பிள்ளையைப் பெத்து வச்சிருக்கேன்? பத்து மாசம் சொமந்து பெத்திருந்தா அருமை தெரியும். என்னமோ காப்பிப் பொடி, சர்க்கரை கடன் கேக்கறா மாதிரி பிள்ளையைக் கேக்கறாளே... வயசானா மூளை மழுங்கிப் போயிடும் போலிருக்கே!''

''மீனா தயவுசெஞ்சு கத்தாதேயேன். அண்ணா மன்னி காதில விழுந்துடப் போறது. அவா கேக்கறதிலே எந்தத் தப்பும் இருக்கிறதாத் தெரியலை. குடுக்கறதும் குடுக்காததும் நம்ம இஷ்டம். நம்மை வற்புறுத்தவா போறா? நமக்கு இஷ்டமில்லேன்னு நாசூக்காச் சொல்லிட்டாப் போறது. நீ இவ்வளவு நிஷ்டூரமாப் பேசறதைக் கேட்டாக்க அவா மனசு புண்பட்டுப் போயிடுவா...''

புண்பட்டுத்தான் போனார்கள். மீனலோசனியின் தொண்டை அப்படிப்பட்டது. அக்ஷரம் பிசகாமல் அவள் பேசியதெல்லாம் காதில் விழுந்தது. ஒரு வாய்த் தண்ணீர் கூட அருந்தாமல், தங்கள் உணர்ச்சிகளை

எஸ்.அன்னபூரணி



வெளிக்காட்டாமல் அங்கிருந்து நகருவதற்குள் பாடுபட்டுத்தான் போனார்கள். ஒரு வேளை தங்களிடம் மிதமிஞ்சிப் பணங்காசு இருந்திருந்தால் உடனே மீனா சம்மதித்திருப்பாளோ என்று தோன்றியது.

அடுத்தது தர்மாம்பாளின் தங்கை சரஸ்வதியிடமும் ஒரு வார்த்தை கேட்டு விடலாம் என்று பட்டது. தர்முவுக்கு, என்ன இருந்தாலும் கூடப் பிறந்த தங்கை இவ்வுளவு புண்படும்படி பேச மாட்டாள் என்ற நம்பிக்கை இருந்தது.

சரஸ்வதி அவர்களை முகமலர்ச்சியுடன் வரவேற்றாள். சுவீகார விஷயத்தைப் பற்றிக் கேட்டதும் சிறிது குழம்பினாள். தன் கணவரைக் கேட்பதாகக் கூறினாள். அவள் கணவன் கோபாலன் நேரடியாகவே தன் மறுப்பைத் தெரிவித்து விட்டான்.

''இதோ பாருங்கோ, ஏற்கெனவே எங்க சொந்தக்காராளுக்குத் தத்துக் கொடுக்கறதா வாக்குக் கொடுத்துட்டேன். அவா நிலம் நீச்சுன்னு ரொம்ப வசதிப்பட்டவா. இத்தனையும் பிற்காலத்தில் என் பிள்ளைக்குத்தான் வரும். இந்த வாய்ப்பை நழுவ விடறதா எனக்கு உத்தேசமில்லை.''

இங்கும் பணம்தான் பேசியது.

நொந்து போன இருவரும் துக்கத்தைத் தாங்கமாட்டாமல் மனத்துக்குள்ளேயே கேவினர்.

''என்னா சொந்தக்காரா குழந்தையைத்தான் எடுத்துக்கணுமா? எவ்வளவோ அனாதைக் குழந்தைகளில்லையா?''

''நானும் யோசிக்காமலில்லை தர்மு. நாம ரெண்டு பேரும் வயசானவா. அடுத்தடுத்து மண்டையைப் போட்டுட்டா, நம்ப உறவு ஜனமாயிருந்தா அவா அந்தக் குழந்தையை அம்போன்னு விட்டுடமாட்டா. ஒரு அனாதைக் குழந்தையை வளர்த்து, நாம இரண்டு பேருமே இல்லாம போயிட்டா அதை ரெண்டாவது தடவையும் அனாதையாக்கிற பாவத்தை வேற கொட்டிக்கணுமா? இனிமே இந்த எண்ணத்தையே விட்டுடு. மரம் வெச்சவன் தண்ணி ஊத்துவான். நடக்கிறபடி நடக்கட்டும். யாரையும் நம்பி யாரும் பொறக்கலே.''

ஒரு நாள் பக்கத்து வீட்டு வித்யா ஒரு தினசரியை எடுத்து வந்து ஏதோ பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்னடியம்மா வித்யா அப்படி உத்துப் பாக்கறே?''

''இல்லை மாமி நான் ஒரு லாட்டரிச் சீட்டு வாங்கியிருந்தேன். அதுக்கு ஏதாவது பிரைஸ் விழுந்திருக்கான்னு பாக்கறேன்...''

''ஏதாவது, விழுந்திருக்கா?''



கெய்சிங் போராட்டம்:

அப்புறம் என்ன ஆச்சு?

டார்ஜிலிங் கோர்க்கா ஹில் கவுன்சில் அமைத்த பிறகும், உருப்படியாகப் பொருளாதார ரீதியாக எதுவும் பலன் கிடைக்கவில்லை என்று இப்போது வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார் அதன் தலைவர் சுபாஸ் கெய்ஸிங்.

அவரிடமிருந்து நம்பிக்கையோடு பல மாற்றங்களை எதிர்பார்த்த மக்களுக்கும் இப்போது ஏமாற்றம்தான் மிஞ்சியிருக்கிறது. மத்திய அரசும் சரி, மேற்கு வங்க அரசும் சரி. அப்படி ஒன்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அள்ளிக் கொடுத்து விடவில்லை என்று தெரிகிறது. (270 கோடி ரூபாய் வளர்ச்சிப் பணிகளுக்குத் தேவைப்படுகின்றன என்று தெரிவிக்கப் பட்டது: இதில் மே. வங்க அரசு 17 கோடி ரூபாயும், மத்திய அரசு 10 கோடி ரூபாயும் மட்டுமே உதவியிருக்கின்றன வாம்.)

தனியார் துறை நிறைய முதலீடு செய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது. சுற்றுலா, ஓட்டல், சிறுதொழில்கள், மலைத் தோட்டப் பயிர்கள், கனிமங்கள் ஆகியவற்றில் இவை ஈடுபட்டால் கனவு ஓரளவு நிஜமாகி விடுமாம். டார்ஜிலிங்கில் சாலைகள் கூடச் சரியாகப் போடப் படவில்லை; ரயில்வே சர்வீசுகள் போதுமான அளவுக்கு இல்லை!

கோர்க்கா மாநில கவுன்சில் தலைவராகக் கெய்சிங் பொறுப்பேற்று, போராடி, ஒப்பந்தமும் கையெழுத்தான பிறகு, எல்லாம் இனி சுபிட்சம்தான் என்று நினைத்திருந்த மக்களுக்கு ஒரே ஏமாற்றம். போராட்டம் ஓய்ந்து விட்டால், எல்லாம் அவ்வளவுதான் போலிருக்கிறது! அல்லது, 'கோர்க்காக்கள்' போராட்ட மனப்பான்மை உடையவர்கள்: அங்கே போய் மாட்டிக் கொள்ள வேண்டாம்' என்று தனியார் துறை முதலாளிகள் ஒதுங்குவதும் காரணமாக இருக்கலாம்!

— சித்தார்த்.

''ஹூ'கும்'' என்று உதட்டைப் பிதுக்கினாள்.

சட்டென்று ஞாபகம் வந்தவராகச் சபேசன் கேட்டார்.

''ஏன் தர்மு நீ கூட அன்னிக்கு பஸ்ல ஒரு பையன் கிட்டருந்து ஒரு லாட்டரிச் சீட்டு வாங்கினியே, அது என்ன ஆச்சுன்னு பாரேன்...''

''ஆமாம் நம்ப அதிர்ஷ்டம்தான் தெரிஞ்சிருக்கே... எதுக்கும் பாத்துடுவோம்.''

பழைய டப்பா ஒன்றில் சில்லறைக் காசுகளுடன் நான்காக மடித்து வைத்திருந்த சீட்டை வித்யாவிடம் நீட்டினாள். வித்யாவும் ஆர்வமாய் வாங்கிப் பார்த்தாள். பார்த்துக் கொண்டேயிருந்தவள் திடீரென்று துள்ளினாள்.

''மாமி கையைக் குடுங்கோ. உங்களுக்கு அஞ்சு லட்சம் விழுந்திருக்கு!''

''என்ன?'' ஏககாலத்தில் தங்கள் காதுகளையே நம்பாதவர்களாய்க் கேட்டனர் இருவரும்.

லாட்டரிச் சீட்டை வித்யாவின் உதவியுடன் டெபாஸிட் செய்தனர். அவர்கள் போட்டோ தினசரியில் வந்தது. விஷயமறிந்தவுடன் பலாப்பழத்தை ஈ மொய்ப்பது போல நெருங்கிய, தூரத்து உறவினர்கள் சபேசனின் வீட்டை முற்றுகையிட்டனர். பணத்துக்கு இத்தனை சக்தியா என்று அவர்களிருவரும் வியந்து போனார்கள். முக்கியமாக இதுவரைக்கும் வராத சிவராமனும், மீனலோசனியும் தங்கள் இரண்டாவது பிள்ளையை அழைத்துக் கொண்டு வந்திருந்தனர்.

சரஸ்வதியின் கணவன் கோபாலனும் அது மாதிரியே கடைக்குட்டிப் பையனைக் கூட்டிக் கொண்டு வந்திருந்தான். அவர்களிருவருமே நேரிடையாகவும் மறைமுகமாகவும் பிள்ளையை தத்துக் கொடுக்கத் தங்கள் சம்மதத்தை உணர்த்தினர். சபேசன் அதைக் கண்டும் காணாதது போலிருந்தார்.

சிவராமன் தன் மனைவியிடம் கண்டிப்பாகச் சொல்லி விட்டான். ''இதோ பார் மீனா. உன் பேச்சைக் கேட்டுண்டு நான் ஆபீஸுக்கு லீவு போட்டு வந்து ஒரு வாரமாயிற்று. அண்ணா ஒண்ணும் முடிவு செய்யறதாத் தெரியல்லை. நாளைக்குள்ள எப்படியாயிருந்தாலும் கிளம்பியாகணும்.''

''கொஞ்சம் பொறுமையாயிருங்கோ. உங்க மன்னியோட தங்கை ஆத்துக்காரர் வேறே பறந்துண்டிருக்கார். அவர் ஊருக்குப் போனதும் பேச்சை ஆரம்பிக்கலாம்னு நினைச்சா அவா கிளம்பற வழியாகக் காணோம். சரி, இன்னிக்குள்ள எப்படியாவது பேசி முடிவெடுத்துடலாம்.''

இதைக் கேட்டுக் கொண்டிருந்த சரஸ்வதியின் கணவன் கோபாலனுக்கு கோபத்தால் விழிகள் சிவந்தன. 'இந்த சரஸ்வதி வந்திருந்தா அவ அக்கா கிட்ட நைச்சிய

மாப் பேசி நமக்குச் சாதகமா முடிவெடுக்கப் பண்ணியிருக்கலாம். சிவராமன் பெண்டாட்டிக்கு இருக்கிற சாமர்த்தியம் இவளுக்கு வருமா? ஆகட்டும் நானும் ஒரு கை பார்த்துடறேன்' என்று மனத்துக்குள் தீர்மானித்தான்.

அன்று மாலை நிதானமாக ஆரம்பித்த பேச்சு முற்றிப்போய் விடு ரெண்டு பட்டது. சபேசன் மனத்திலிருப்பதைத் தெரிவிக்கு முன்னர் அதைப்பற்றி யோசிக்காமல் மீனாவும், கோபாலனும் உச்சஸ்தாயியில் கத்தினர். சபேசனுக்கு நாராசமாயிருந்தது. சற்று அதட்டலாகவே பேசினார். "இதோ பாருங்கோ, என் அபிப்ராயத்தைப் பற்றிக் கவலைப்படாமே நீங்க ரெண்டு பேருமே பேசிண்டு போனா எப்படி? நான் சுவீகாரம் எடுத்துக்கற எண்ணத்தையே கைவிட்டு ரொம்ப நாளாச்சு. அப்படியிருக்கும் போது நீங்க ரெண்டு பேரும் அநாவசியமாச் சண்டை போட்டு மனக் கசப்பை வளர்த்துப் பானேன்? பேசாமல் சுவீகார விஷயத்தை மறந்துட்டு ஊர்போய்ச் சேருங்கோ..." என்று கண்டிப்பாகவும் பேசி அனுப்பி வைத்தார்.

அவர்கள் போன பிறகு சபேசன் தர்மு விடம் சொன்னார்.

"லாட்டரியில் வந்த பணத்தை இரண்டு பங்குகளாகப் பிரித்து ஒரு பங்கை உன் பெயரில் பேங்கில் டெபாஸிட் செய்திருக்கிறேன். ஒரு வேளை உனக்கு முன்னால் நான் போய்விட்டால் என்னுடைய பங்கை அனாதைக் குழந்தைகளின் இல்லத்துக்கு வழங்கச் சொல்லி உயில் எழுதி வைத்திருக்கிறேன். அடுத்தபடியாக நான் சொல்லப் போகும் விஷயம் உனக்கு ஆரம்பத்தில் மனக்கிலேசத்தைக் கொடுத்தாலும் சிறிது யோசித்துப் பார்த்தால் இதை விடச் சிறந்த முடிவு இருக்க முடியாது என்று உணர்வாய்..... என்ற அவரை ஒன்றும் புரியாமல் புதிராகப் பார்த்தாள் தர்மு.

"கடைசிக் காலத்தில நமக்குக் கர்மம் பண்றதுக்காகத்தானே ஒரு சுவீகாரப் பிள்ளை அவசியம்னு நெனைச்சுக் கேட்டோம்... ஆனா அதுக்கு அவா தயாரா யில்லே. லாட்டரியிலே பணம் வந்ததும் சுவீகாரம் கொடுக்கத் தயாரா இருக்கா. அதிலே என்ன பிரயோஜனம்? பணத்துக்காக சுவீகாரமா வர்ற பிள்ளை கர்மா செய்யறதுலதான் என்ன பலன் கிடைச்சுடும்? அதனால் என் கண்களைத் தானம் கொடுத்திட்டேன். என்னோட உடலையும் கடைசில மெடிகல் காலேஜுக்குக் கொடுத்துடறதுன்னு முடிவு பண்ணிட்டேன். அப்போ கர்மா யார் பண்ணுவாங்கற பிரச்னை வராதோல்லியோ...." என்று இயல்பாகவும் அதே சமயத்தில் உறுதியாகவும் சபேசன் சொன்ன போது, தர்மு நெகிழ்ந்து போனாள்!

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 1990



முதல் பரிசு	ரூ. 1500
இரண்டாவது பரிசு	ரூ. 750
மூன்றாவது பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ. 375 விதம்	ரூ 750

ஆக மொத்தம் ரூ. 3000 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 125 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்றும், இதற்குமுன் எந்தப் பத்திரிகையிலும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தர வேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி: ஜூன் 15.

- உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால்தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் கல்கி ஆகஸ்டு 5 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.
- எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி, சென்னை — 600 032.

ஹிஸ் ஹைனஸ் அப்துல்லா

எடுத்த எடுப்பிலேயே சொல்லிவிட வேண்டும். — தேவை படவிமர்சனமல்ல. இசை விமர்சனம். அந்த அளவுக்கு சங்கீதம் இந்தப்படத்தின் முதுகெலும்பாக விளங்குகிறது. வித்தியாசமான ஆலாபனை உத்திகளும் விவகாரமான ஸ்வரப் பிரயோகங்களும் படம் முழுதும். கதை நிகழ்ந்த சூழ்நிலை பின்னணி இசையிலும் பிரதிபலிக்கிறது.

அரச பரம்பரையைச் சேர்ந்த தம்புரான் நோய்ப் படுக்கையில். அ வ ரு டை ய மரணத்தை எதிர்பார்த்து அரண்மனையில் கூடிவிடும் — சொத்துக்கு ஆசைப் படும் நெருக்கமான உறவினர்கள்.

அவர்கள் எதிர் பார்ப்புக்கு மாறாகத் தம்புரான் பிழைத்தெழுந்து விடவே சொத்துக்களை அடைவதற்கு அவரைத் தீர்த்து விடுவது ஒன்றுதான் வழி என்கிற முடிவுக்கு அவர்கள் வர, பம்பாயிலிருந்து வரவழைக்கப்படும் கொலையாளி அப்துல்லா —

இப்படி எக்கச்சக்கமான க தா பா த் திரங்கள். என்றாலும் அவரவருக்கென்று நிர்ணயிக்கப் பட்டுவிட்ட வரையறைகள் குழப்பமில்லாத திரைக்கதையமைப்பு.

அப்துல்லா அரண்மனைக்கு வந்து சேர்ந்து அனந்தன் நம்பூதிரி என்கிற பெயரில் அறிமுகமாகி இசை மழைபொழியத் தொடங்குவது வரை தவழ்ந்து செல்லும் கதை, ரசிகரான தம்புரான் அந்தச் சங்கீத மழையில் நனைந்து அவனை நெருங்க ஆரம்பிப்பதிலிருந்து சுறு சுறுப்பும் பெறுகிறது.

கொலையாளியான அப்துல்லா கர்நாடக சங்கீத வித்வானாக விளங்குவது எப்படி? எங்கேயோ பம்பாயிலிருந்து வந்தவனுக்குத் தம்புரானின் அரண்மனைப் பழக்க வழக்கங்களும் கேரளத்துச் சம்பிரதாயங்களும் எப்படித் தெரியும்? கிடைத்த அருமையான சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்வதைத் தவிர்த்ததோடு, அவனை நம்பிப் பயனில்லை என்று முடிவு செய்து தம்புரானின் உறவினர்கள் வரவழைத்த வேறு இரு கொலையாளிகளிடமிருந்தும் அவரை அப்துல்லா காப்பாற்றியது எதனால்? — கேள்விகளுக்கு விடை சஸ்பென்ஸான பின்னணிக் கதை.

குடும்பத்தின் வயதான பெரியவர் — கண் தெரியாத நிலையிலும் — ஆலோசகராக மாறி, "எதிரி என்று வந்துவிட்டால் உறவு முறை மறைந்து விடுகிறது" என்று கீதையிலிருந்து எடுத்துக் கூறி, அவ்வப்போது மகாபாரதத்திலிருந்து உதாரண நிகழ்ச்சிகளை விவரித்துச் சொல்லி அவர்களை ஊக்கு வித்துக் கொலைத்திட்டத்தை வழி நடத்திச் செல்வதும் —


கொலை செய்வதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போவது குறித்துக் கோபமடையும் அந்த உறவினர்கள் அப்துல்லாவைச் சூழ்ந்து கொண்டு மடக்க, "சங்கீதமாகட்டும், கொலையாகட்டும், புதுமை வேண்டும்" என்று சொல்லி அவன் சமாளிப்பதும் —

"பிராமணனாக இருக்கப் பிறப்பு ஒன்று மட்டும் போதாது. பிரும்மத்தை உணர்ந்திருக்க வேண்டும். ஈசுவரனை அறிந்திருக்க வேண்டும். சங்கீதமும், ஈசுவரன்தான்" என்று கூறி அப்துல்லாவை நோக்கிப் பொருள் நிறைந்த பார்வையைத் தம்புரான் வீசுவதும் —

சுவாரசியத்துக்குச் சில உதாரணங்கள்.

வித்தியாசமான அணுகுமுறை. கடைசி வரையில் மாறுபடாத பொருத்தமான சூழல். கதையோட்டத்துடன் பொருந்தக் கூடிய, அளவான, இயல்பான நகைச்சுவை. அடக்கமான நடிப்பு. தொடக்கத்திலிருந்து முடிவு வரை கேரளத்து மண்வாசனை.... ஹிஸ் ஹைனஸ் அப்துல்லா.

— சி. ஆர். கே.



18

மணல்வெளி மான்கள்

தொரப்பாடியில் 'கஸ்டடி'யில் இருந்த ஆதியைச் சந்திக்க வக்கீலுடன் காத்திருந்த போது, புல் மேட்டுப் பயணம் ஒரு கனவு போல் தோன்றியது. ரயில் பயணம் ஒன்றில் குட்டித் தூக்கத்தில் கண்ட கனவு.

இரவு முத்துமாரி குனையின் நிலா வெளிச்சமும் கையில் துப்பாக்கியோடு மணிப்புறாவுக்குக் காத்திருந்த தந்தையும் கனவு ஓவியம் போல் நினைவில் எழுந்தன.

அப்பா அவனுக்கு உபதேசித்ததே இல்லை. புல்மேட்டில் இருக்கிறாயா இரு. விட்டலாபுரம் போகிறாயா போ. வேலை தேடுகிறாயா தேடு. பி. எஸ். ஸி. படித்து விட்டு மோட்டார் பம்ப் ரிப்பேர் செய்கிறாயா செய். சும்மா திரிகிறாயா திரி.

அவர் கௌதமைக் கேள்வி கேட்டதே இல்லை. அம்மா போனது காரணமா? அவன் மீது அவர் வைத்திருந்த நம்பிக்கை காரணமா? இந்த இரண்டுடன் அவர் நேசித்த சுதந்திரமும் காரணமாகலாம்.

போலீஸ் ஸ்டேஷன், குற்றவாளிகள், கோர்ட்டு என்று வாழ்க்கையில் பெரும் பகுதியைச் செலவிட்டவர் அவர். சுதந்திரத்துக்காக — எந்த நிர்ப்பந்தமுமின்றி ஹாய்யாக தன்னிச்சையாய் வாழ்வதற்கு அவர் நிறைய ஏங்கியிருப்பார்.

உண்மையான சுதந்திரத்துக்கு ஏங்குபவன், உள்ளுக்குள் எந்தச் சங்கிலிகளிலும் மாட்டிக் கொண்டிராதவன்தான் மற்றவனுக்குச் சுதந்திரம் வழங்க முடியும்.

''இதோ வர்றானே அவன் தான் ஆதியா?'' வக்கீல் கேட்டார்.

ஆதியை வெளியே கொண்டு வந்திருந்தார்கள்.

''ஆமாம் சார்!''

ஆதி லேசாக வெளுத்திருந்தான். முகத்தில் போலீஸ் லாக்கப்பின் போது பார்த்த மருட்சி இல்லை. ஒரு முடிவுக்கு வந்த தெளிவு, சூழ்நிலையை ஏற்றுக் கொண்ட சமாதானம் இருந்தது.

''வா தம்பி.''

''ஆதி இவர்தான் வக்கீல். உனக்காக ஏற்பாடு செஞ்சிருக்கேன்.''

அவன் கை கூப்பினான்.

வக்கீல் அவன் முகத்தைக் கூர்ந்து ஆராய்வதை கௌதம் கவனித்தான்.

''என்ன ஆதி ஜெயில் ரொம்பக் கஷ்டமா இருக்கா?'' என்று வக்கீல் ஆரம்பித்தார்.

அவன் அவரை வருத்தமாகப் பார்த்தான். ''அப்படியெல்லாம் இல்லே சார்! எல்லா இடம் மாதிரியே இதுவும் ஓர் இடம்.''

''உன்னை ஜாமீன்ல எடுக்கணும்னு உன் நண்பர் ரொம்ப முயற்சி பண்றாரு.''

ஆதி திரும்பி கௌதமை அன்பாகப் பார்த்தான்.

''இங்கே மாஜிஸ்திரேட் முடியாதுன்னுட்டாரு. மெட்ராஸ்ல 'ஹைக் கோர்ட்டுக்குப் போக முயற்சி பண்றோம்.''

ஆதி பேசவில்லை. மீண்டும் கௌதமைப் பார்த்து விட்டுத் தலை குனிந்தான்.

''உனக்கு ஜாமீன்ல வர இஷ்டம்தானே?''

கேள்வி சரியில்லை என்று கௌதம் நினைத்தான். சற்று நேரத்தில் அது சரியான கேள்விதான் என்று நிரூபிக்கப்பட்டு விட்டது.

''இல்லே சார்! எனக்கு ஜாமீன்ல வர இஷ்டமில்லே.''

''இஷ்டமில்லியா?''

கௌதமுக்கு லேசான வியப்பு.

''ஏன்?'' வக்கீல் கேட்டார்.

''நான் யாருக்கோசரம் வெளில வரணும்? எங்க அம்மாவுக்கோசரம்தான். அவங்களை கௌதம் தம்பி கவனிக்கும்.''

கௌதம் அவனைப் பார்க்கவில்லை. முகம் திருப்பிக் கொண்டான்.

''என்னை வெளில இட்டாரத்துக்காக இது ஏன் இவ்வளவு லோல் படணும்? ஹைக் கோர்ட்டு அது இதுன்னு அலைஞ்சி இருக்கற தொல்லையோட இந்த உபத்திரவம் வேற இதுக்கு எதுக்கு?''

''உபத்திரவத்தைப் பத்தி எல்லாம் நீ கவலைப்படாதே!'' வக்கீல் சொன்னார்.

''அது மட்டும் இல்லே சார்! ஜாமீன்ல வெளில வந்துட்டாலும் விழுந்த முத்திரை முத்திரைதான்.''

''நீதான் குற்றம் செய்யலியே?''

''கேஸ் நடந்து தீர்ப்பு வரட்டும். அந்த தீர்ப்பிலே நான் நிரபராதின்னு தெரிஞ்சாத் தெரியட்டும். இல்லே குற்றவாளிதான்னு தண்டனை கெடைச்சாக் கெடைக்கட்டும். இதுக்கு நடுவிலே கௌதமுக்கு அநாவசியப் பிரச்னை வேணாம் சார்.''

ஆதி அமைதியாக அழுத்தம் திருத்தமா

வையவன்

கச் சொன்னான். ஒரு மனமுறிவோ ஒரு மனத் தெளிவோ எட்டிய தொனி அது.

''ஆதி!'' கௌதம் அவன் கையைப் பிடித்தான்.

''நெஜம்மாச் சொல்றேன் தம்பி!''

வக்கீல் இருவரையும் மாறி மாறிப் பார்த்தார்.

''நான் வெளில வந்தா மறுபடியும் என்னை உள்ளே தள்றதுக்குத் தொளசிங்கம் என்ன பண்ணணுமோ பண்ணாம விட்டுடுவானா சொல்லு? அதோட... அதோட...'' என்று ஆதி திடீரென்று மூர்க்கமானது போல் விறைத்து நின்றான். அவன் கண்கள் வெறி பிடித்தவை போல் தீர்க்கமாயின. வாய்க்குள் அவன் பல் கடிப்பது தாடை எலும்பு புடைப்பில் வெளிப்பட்டது.

''வெளில வந்தா நானே அவனை என்ன பண்ணுவேன்னு சொல்ல முடியாது கௌதம்!''

அவன் உணர்ச்சிப் பெருக்குக்கு மதிப்பளிப்பதைப் போல் இருவரும் மௌனமாயினர்.

''அவன் ஒரு கொலை பண்ணிட்டேன்னு தானே என்னை உள்ளே தள்ளியிருக்கான்? பண்ணாத கொலைக்குத் தண்டனை வாங்கிக்கறதுக்குப் பண்ணிட்டே வாங்கிக்கறது!''

''ஆதி, ஒனக்கென்ன புத்தி தடுமாறிடிச்சா?'' என்று கௌதம் பதறினான். அதைப் பொருட்படுத்தாமல் ஆதி தொடர்ந்தான்.

''பாவம், அந்த மாசிலா... பைத்தியக்காரன்! இந்த நாகப்பாம்பு கிட்டே மாடா ஒழைச்சிப் பொண்டாட்டியையும் பறி குடுத்திட்டுத் தீயிலே பொசுங்கிப் போனான். இவனையெல்லாம் ஊர்ல ஒலாத்த வுட்டுட்டு நாமெல்லாம் பேமானி மாதிரி இன்னாத்துக்குத் தம்பி பொழைக்கணும்?''

வக்கீல் கௌதமை நிமிர்ந்து பார்த்தார். அவன் கன்னச் சதை துடித்தது.

''உன்னை நிரபராதின்னு வெளியே கொண்டு வர இவரு முயற்சி பண்றாரு. நீ குற்றவாளி ஆயிடணும்னு துடிக்கிறே! வாட் எ ஃபன் மிஸ்டர் கௌதம்?'' என்று அவனிடம் கேட்டார்.

''ஆமா, நிரபராதியாகி நான் வெளில வந்து இன்னா ஆயிடப் போவுது சார்? தொளசிங்கம் மாட்டிக்குவானா? அவன் காலம் இப்படியே சௌக்கியமா நிம்மதியா



போயிட்டே இருக்கப் போவுது.''

அவன் மீண்டும் வாய்மூடிப் பல் கடித்து, எதையோ நினைத்து உக்கிரமாவது போல் மௌனமானான். வக்கில் அவனுக்குப் பேச்சைத் தொடர நேரமளித்துக் கவனித்தார்.

''எனக்கு இருக்கிறது ஒரு ஊமைத் தாயி. எனக்குக் கண்ணாலம் பண்ணிப் பார்க்கணும்னு அவளுக்கு ஒரே ஒரு ஆசை. இப்ப நான் ஜெயிலுக்கு வந்தாச்சு. மெய்யாலுமாக் கொல பண்ணி வந்தேனோ இல்லே சும்மா தள்ளியாந்துட்டாங்களோ எவனுக்குத் தெரியப் போவுது?''

''ஆதி'' என்று அவனை இடைமறித்தான் கௌதம்.

''நீ சும்மாரு தம்பீ! வக்கில்சார் கிட்டே ஒப்பனாப் பேசணும்னு தோணுது. எவன் சார் இனிமே எனக்குப் பொண்ணு குடுப்பான்? ஜெயிலுக்குப் போனவன்தானேன்னு தானே சொல்லுவாங்க? இந்தக் கெட்ட பேரை எதுக்கு அநாவசியமா வாங்கிக்கறது?''

''வக்கில் எதையோ புரிந்து கொண்டார். ''சரி! நாங்க ரெண்டு மூணு நாள் கழிச்சு வர்றோம்'' என்று கௌதமைப் பார்த்தார்.

''சரி, வரட்டுமா?''

ஆதி மீண்டும் சிறைக்குள் போனான்.

ஜெயிலை விட்டு வெளிவரும்போது வக்கில் அவனிடம் பேச்சுக் கொடுத்தார்.

''அவன் ரொம்ப மனசு ஒடஞ்சி போயிருக்கான்.''

''ஆமா சார்.''

''இவன் இப்ப வெளில வரணுமா?''

''எனக்கும் வேணாம்னுதான் தோணுது! உணர்ச்சிவசப்பட்டுடுவான்.''

''இருக்கட்டும். நான் போலீஸ் எஃப் ஐ ஆர் காப்பி வாங்கிப் பாக்கறேன். ரெண்டு மூணு நாள் கழிச்சு வருவோம். அப்ப இவனை மூட் மாறியிருந்தா பெய்லுக்கு முயற்சி செய்வோம்.''

வக்கிலைக் கோட்டை வரை கூடப் போய் கோர்ட்டு வாசலில் விட்டுவிட்டுக் கௌதம் திரும்பினான்.

அவனுக்கு மனசு கனத்தது. ஆதி நிரபராதியாகக் கஸ்டடியில் இருப்பதோ, பெய்லில் வெளிவர மறுப்பதோ கூட, இப்போது அவனுக்குப் பெரிய விஷயமாகத் தோன்றவில்லை.

அவனது திடீர் குணமாற்றம்தான் கவலையாகிக் கனத்தது. ஆதிக்கு எவ்வளவு மென்மையான மனம் என்று கௌதமுக்குத் தெரியும். அது நஷ்டப்பட்டு விட்டது. மனிதன் கடினமாகி விட்டான். அந்தக் குழைவு, ஓர் இளக்கம் எல்லாம் இறுகிக் கெட்டிப்பட்டு விட்டது.

''கோட்டைக்குள்ளவே வந்து கோட்டை விட்ட மாதிரி போறியே என்ன சமாசாரம்?''

நித்யாவின் குரல். கௌதம் சட்டென்று நிமிர்ந்தான். நித்யாவேதான்.

ஜலகண்டேசுவரர் கோவில் பக்கமாக இருந்து வந்து கொண்டிருந்தாள். இங்கே எதிர்பாராத இடத்தில் சந்தித்ததில் அவன் திகைத்துப் போனான்.

''இதுவரைக்கும் கோட்டை விடல்லே. இனிமேல்தான் விட்டிருவேனோன்னு ஒரு கவலை.''

பேச்சு மூடகமாக ஏதோ சொல்கிறது என்று புரிந்து, அவனை இடக்காகப் பார்த்தாள் நித்யா.

''கோட்டை விட்டுடுவோம்னு பயப்பட ஆரம்பிச்சிட்டே அப்போ!''

''பயப்படலே. மனசைத் திடப்படுத்திக்கறேன்.''

''எதுக்கு?''

''கோட்டை விடறதுக்கு.''

நித்யா மூக்கை நெளித்தாள்.

''ஐய்யே... வேற ஏதாவது விஷமமாப் பேசுவேன்னு எதிர்பார்த்தேன்.''

''தனியாப் பேசறேன். இப்ப இங்கே நீ எப்படி வந்தே?''

''நகை செய்யறதுக்காக அப்பா, அம்மா, நான் எல்லாம் பொறப்பட்டு வந்தோம். அப்பா அப்படியே அரிசி மண்டியிலே வேலை இருக்குதுன்னாரு. அம்மாவும் நானும் கோவிலுக்கு வந்தோம்.''

''அம்மா எங்கே?''

''கோவில்லே உக்காந்திருக்காங்க. ரொம்ப தாகம்னாங்க. ஏதாவது கூல் டிரிங்க் வாங்கியாறேன்னு அவங்களை அங்கே ஒக்கார வைச்சுட்டு வர்றேன்!''

''இப்ப என்ன திடீர்னு நகை செய்யற அவசரம்?'' அவள் கண்களையே பார்த்துக் கேட்டான்.

''வர்ற வெள்ளிக்கிழமை பொண்ணுப் பாக்க வரப் போறாங்க இல்லே?'' என்று முகத்தில் சலனம் காட்டாமல் சொன்னாள் நித்யா.

''யாரை?''

''வேற யாரை?''

''ஓகோ!''

''ஓகோன்னா, யாரு, எந்த ஊருன்னு கேக்க வேணாமா?''

இவ்வளவு பேசுகையிலிருந்தே இவள் நெஞ்சமுத்தத்தின் முன் இவள் பெற்றோர் எண்ணம் பலிக்கப் போவதில்லை என்று கௌதமுக்குத் தீர்மானமாகி விட்டது.

''கேட்டு நான் என்ன பண்ணப் போறேன்?''

''சும்மா கோட்டை விடறதுக்கு முன்னாடி ஒரு தெளிவுக்கு வரணும் இல்லே?''

''இந்த வக்கணையெல்லாம் விட்டலாபுரத்திலே வச்சிக்கலாம். அம்மா அங்கே கோயில்லே காத்திருக்காங்க இல்லே. கூல் டிரிங்க் வாங்கிட்டுப் போய்ச் சேரு.''

''ஸ்ஸ்... என்ன இந்த பயம் பயப்படறே? நான் இல்லே, பயப்படணும்?''

அவள் சொன்னது சரி. அவள்தான் பயப்பட வேண்டும். ஆனால் விட்டலா புரத்துக்காரர்கள் எவராவது கோர்ட்டுக்கோ கோட்டைக்கோ வந்திருந்தால் நித்யாவும் அவனும் அங்கே பேசுவதை நாலா புறமும் தூற்றி, அதில் அவள் வருத்தப்படக் கூடாது என்று ஏனோ மனசு பதைத்தது.

''பொண்ணுப் பார்க்க வரப் போறாங்க. அதுக்குள்ளே இப்படி எங்கேயோ எவனோடோ பேசிக்கினு நின்னேன்னா யாராவது அவங்க காதில போட மாட்டாங்களா?''

''அதுக்காகத்தான் பேசிட்டு நிக்கறேன்.''

''சும்மா பேசிட்டுப் பேசிட்டு நின்னா விட்டுடுவாங்களா?''

''வேற என்ன பண்ணணும்? ஓடிப் போயிடலாங்கறியா? சரி வா, ஓடிப் போயிடலாம்.''

ஊர்ச் சூழலை விட்டு, பழகிய இடங்களை விட்டு வேறெங்கோ அவனைப் பார்க்க நேர்ந்த களிப்பில் நித்யா கிறங்கிக் கொண்டிருந்தாள். இது ஒரு மாதிரி விடுதலை, ஒரு மாதிரி சுகம்.

''ஸீரியஸாப் பேசு.''

''படு ஸீரியஸாப் பேசிக்கிட்டிருக்கேன்.''

அவன் அவளை விட்டு ஒதுங்கி கூல் டிரிங்க்ஸ் கடைக்குப் போய் இரண்டு வாங்கி வந்தான்.

''ஒனக்கு?'' என்று கேட்டாள்.

''இது எனக்கு. நீ குடிச்சுட்டு பாட்டிலைக் கொடு. அம்மாவுக்கு வேற வாங்கித் தர்றேன்.''

கூல் டிரிங்க்கைக் குடித்து முடித்து அவள் நீட்டிய பாட்டிலை வாங்கிக் கொண்டு போய்க் கடைக்காரனிடம் கொடுத்துவிட்டு, இன்னொன்று வாங்கிக் கொண்டு திரும்பும் போது, பாதை கடக்கும் நேரத்தில் ஒரு வேன் கிறீச்சிட்டு நின்றது.

நீல வண்ணமடித்த வேன். தலைப்பில் கான்வெண்ட் பெயர். கதவைத் திறந்து விடுவிடுவென்று பிலோமினா இறங்கி வந்தாள். துறுதுறுவென்று என்னவொரு வேகம்!

''ஹலோ கௌதம்.''

''குட்மார்னிங் சிஸ்டர்.''

''இங்கே ஏன் நீங்க... ஓ ஐ ஸீ... கோர்ட்டுக்கு வந்தீங்களா? என்ன ஆச்சு...? அந்த ஆசாமியை பெய்ல்ல எடுத்துட்டீங்களா?''

இன்ஸ்பெக்டர் சொல்லியிருப்பார்.

''இல்லே சிஸ்டர்... வேண்டாம்னு அவனே சொல்றான். நீங்க எங்கே இப்படி?''

''அடுத்த வாரம் எங்க கான்வெண்ட்ல ஆனிவர்ஸரி. கலெக்டர் அம்மாவை இன்வைட் பண்ண வந்துட்டிருக்கேன்.''

இருவரையும் பார்த்தவாறு அருகிலேயே நித்யா நின்றாள். அவளுக்குள் என்னமோ ஒரு சங்கடம்.



''தினமும் ஸ்கூட்டரை தள்ளிக்கிட்டே போறீங்க! வர்றீங்க! 'ரிப்பேர்' பார்க்கிறதுதானே?''

'''ரிப்பேர்' ஒண்ணும் இல்லீங்க! 'பெட்ரோல் விலை' ஏறிப் போச்சே...! அதான்...!''

— ஆர். அப்துல் சலாம்.

''கூல்டிரிங்க் யாருக்கு வாங்கிட்டுப் போறீங்க?'' என்று பிலோமினா கேட்டுவிட்டாள். இனி மறைக்க முடியாது.

''அது... நித்யாவோட அம்மாவுக்கு'' என்று அவளைச் சுட்டிக்காட்டினான்.

''நித்யா?'' என்று அவளைக் கையசைத்து அழைத்தான். அவள் தயக்கத்தோடு வந்தாள்.

''இவங்க என்னுடைய காலேஜ் மேட்.''

''காலேஜ் மேட் இல்லே. இவருடைய டென்னிஸ் ஃபேன்.''

நித்யா கைகுவித்தாள். பிலோமினா சிலுவை தரித்துக் கொண்டாள்.

''மே காட் ப்ளஸ்யூ'' என்று சிரித்தவாறு வாழ்த்திய பிலோமினா, ''சரி, நான் வர்றேன். இப்பவே லேட்டாய்ப் போச்சு'' என்று வேகமாக வேனுக்குள் ஏறிக் கதவை மூடினாள் சிஸ்டர் பிலோமினா.

வேன் நகர்ந்தது. அது சற்றுத் தூரம் போகும் வரை அதையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, பார்வை திருப்பி நித்யாவிடம் கூல்டிரிங்க்கை நீட்டினான்.

''சொல்லவே இல்லையே.''

''எதை?''

''ஒனக்கு இப்படியெல்லாம் டென்னிஸ் விசிறிகள் உண்டுன்னு.''

''சந்தர்ப்பம் வரலே.''

''நீ காலேஜிலே படிக்கறப்பவே இவங்க கன்யா ஸ்த்ரீ ஆயிட்டாங்களா?''

நித்யாவுக்குள் ஏதோ சலனம். பெண்ணுக்கே உரிய சலனம்.

''இல்லே. அப்புறமாத்தான்! எனக்கே மூணு நாளைக்கு முன்னாடிதான் இவங்க 'நன்' ஆனது தெரியும்.''

''ஏன் 'நன்' ஆனாங்க?''

சிலருக்கு எல்லாவற்றையும் கடந்து ஒன்றுக்கு அர்ப்பணமாக வேண்டும் என்று தோன்றுகிறது. இந்தப் பதிலை நித்யா புரிந்து கொள்வாளா?

''ரொம்ப அழகா இருக்காங்க.''

''சரி... நீ போ... அம்மா ஒன்னைத் தேடிக்கிட்டு வந்துடுவாங்க. நாம அப்புறமா ஊர்ல பார்க்கலாம்'' என்று அவன் அவளை அனுப்பிவிட்டுத் திரும்பி நடந்தான்.

(தொடரும்)

கவிதைக்குள் ஒரு கவிதை:

புரட்சிக் கவிஞரின் புதுமை வானம்!

காலையில் அடிவானில் தோன்றிய கதிரவன் மெல்ல மெல்ல முடிவானுக்கு வருகின்றான்.

'பளிச்' சென்ற பகல் நேரம்.

வானம் தன் சூரிய விழியால் பூமியில் நடக்கும் நிகழ்வுகளை உற்று நோக்குகின்றது. கீழ்நோக்கி வானம் பார்ப்பதையும், அந் நேரத்தில் பூமியில் நடப்பதையும் ஒருசேரக் கவனிக்கிறார் பாரதிதாசன்.

ஓடி ஆடிப் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள் உழைப்பாளர்கள். தன் வியர்வையில் உருவான இயந்திரங்களில் வியர்க்க வியர்க்க வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். உழைத்துழைத்தும் இவர்கள் உயரவே இல்லை. பணியை முடித்த தொழிலாளர்களுக்கு வேலைக்கேற்ற ஊதியம் வழங்கப்படவில்லை. உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

பகல் முழுவதும் இதைப் பார்த்துக் கொண்டிருந்தது வானம். பகல் முடிந்து, அந்தியும் முடிந்து இரவு வருகிறது. வானம் நெடுக நட்சத்திரங்கள். நமக்கு அவை நட்சத்திரங்கள். ஆனால், கவிஞருக்கோ... பாடலைப் பார்ப்போம்:


.....இதைத் தன்
கண்மீதில் பகலில் எல்லாம்
கண்டு கண்டு அந்திக்குப் பின்
விண்மீனாய்க் கொப்புளித்த
விரிவானம் பாராய் தம்பி!

சமுதாயச் சீர்திருத்தத்தையும் அழகுணர்வையும் சங்கமமாக்கித் தம்பிக்கு வானத்தைக் காட்டும் பாவேந்தரின் தமிழ்தான் எத்துணை அற்புதம்! 'அழகின் சிரிப்பு' நூலில் உள்ள இப்பாடலில் 'கண்டு கண்டு' என்னும் தொடரிலும், 'விண்மீனாய்க் கொப்புளித்த' என்னும் தொடரிலும் அமைந்துள்ள கவிதைக்குள் ஒரு கவிதை கண்டு கண்டு களித்தற்குரியது.

பகலில் வானம் கொதிக்கிறது. அந்தியில் கோபப்பட்டுச் சிவக்கிறது. இரவில் எதிர்ப்பைக் காட்ட கறுப்பாகிறது. கடைசியில் தன் கொந்தளிப்பைக் கொப்புளங்கள் ஆக்குகிறது என்று சிந்திக்கச் சிந்திக்கத் தன் அகலத்தை அதிகப்படுத்துகிறது இந்த ஆகாயப் பாடல்!

நூற்றாண்டு காணும் பாவேந்தரின் கவிதைத் தொகுப்பில் இப்படிப்பட்ட நூதனங்கள் எண்ணிக்கையற்று ஏராளமாக உள்ளன. அவர் தமிழ் ஒரு பூக்காடு. நாம் அனைவரும் தும்பிகளாக ஆனால் தொடர்ந்து தேன் துய்க்கலாம்.

— மதிவண்ணன், சென்னை — 63.





அதிர்ஷ்ட தேவதை

5

1987 — ஜனவரி — 19 திங்கள்.

மாலு,ரமணி அருகே வந்து நின்றாள். அவன் ஒரு ஃபைலில் மூழ்கிக் கிடந்தான். மிகவும் முக்கியமான விஷயமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் ரமணி நிச்சயமாக மாலு வந்து நிற்பதை உணர்ந்திருப்பான்.

அவள் மௌனமாக நின்றாள். காதல் விஷயத்தில் அவள் எத்தனை நாட்கள் பொறுமையாக இருந்து வந்திருக்கிறாள்!

ரமணி ஃபைலில் ஏதோ எழுதிவிட்டு, எழுதியதை ஒரு தடவை படித்துவிட்டு, ''வெங்கி!'' என்று குரல் கொடுத்தான்.

அதிபருடைய அறைவாயிலில் வெற்றிலையைக் குதப்பிக் கொண்டிருந்த வெங்கி மெதுவாக எழுந்து, மெதுவாக நடந்து வந்தான். குதிரை விஷயத்தில் மட்டும்தான் அவனுக்கு விரைவும் வேகமும் பிடிக்கும்.''

''இன்னா சார்!''

''இந்த ஃபைலை முதலாளி மேஜை மேலே அவர் கண்ணில் படும்படியா வை.''

வெங்கி அலட்சியமாக ஃபைலை எடுத்துக் கக்கத்தில் செருகிக் கொண்டான்.

''ரமணி சார், விசயம் தெரியுமா?''

''என்ன?''

''முந்தா நாள் பம்பாய் ரேசிலே முதலாளி ஜாக்பாட் அடிச்சார். லட்சத்துப் பத்தாயிரத்து முந்நூத்து எழுபது ரூபா. ஐயா தான் ரெண்டு குதிரைங்களைக் கொடுத்தாரு! ஆனா நான்! ரெண்டு குதிரைங்களைத் தெரிஞ்சு வைச்சும் ஜாக்பாட் அடிக்கலே! எப்படி இருக்கு உலகம், பார்த்தியா?''

''உலகத்தை நான் அப்புறமா சாவகாசமாப் பார்த்துக்கறேன். இப்ப உள்ளே போய் இந்த ஃபைலை வை!'' என்றான் ரமணி.

''அடடா, மாலு அம்மா நிக்கறாங்க. அதான் நீ என்னை விரட்டறே!''

மாலு உட்கார்ந்து கொண்டாள்.

''நீ வந்ததை நான் உண்மையா உணரலே. மாலு, ஸாரி!''

''நீங்க ஒரு விஷயத்திலே இறங்கிட்டா முழு மூச்சா அதிலே லயிச்சுப் போயிடுவீங்கன்னு எனக்குத் தெரியும், ரமணி! ஆனா உங்க முழுமூச்சு ஒரு விஷயத்திலே மட்டும் அடிக்க மாட்டேங்குது!''

''புரியறது, மாலு. நான் என்ன செய்ய? உடனடியாக் கல்யாணம் பண்ணிக்கிட்டு, உன்னோடு வாழ்க்கையை ஆரம்பிக்கணும்னு எனக்குக் கொள்ளை ஆசைதான். ஆனா வேளை வரமாட்டேங்கறதே!''

''வேளை தானாக வராது, ரமணி! நாம தான் கொக்கி போட்டு இழுத்துக் கொண்டு வரணும். கேவலம் இந்த ரங்கனுக்குக் கூடக் கல்யாணம் ஆயிட்டுது.''

''அவன் ஒரு முட்டாள். நான் படிச்சுப் படிச்சுச் சொன்னேன். மடையன் கேட்கலே. பிடிவாதமா, சகதியில்தான் விழுவேன்னு விழுந்தான். இப்ப அவதிப்படறான்.''

''நீங்களும் நானும் நிச்சயமா சந்தனக் குழம்பிலேதான் விழுவோம், ரமணி. என் அக்காவுக்கு அடுத்த மாசம் பன்னிரண்டாம் தேதி கல்யாணம். அம்மாவோட ஆசை நிறைவேறாமப் போறது.''

''ஓ, ஓ. அதுவா? உனக்கும் உன் அக்காவுக்கும் ஒரே நாள்ளே கல்யாணம் நடக்கணும்னா ரெண்டே வழிதான் இருக்கு.''

''என்னவாம்?''

''நான் என்னிக்கு உன் கழுத்திலே தாலி கட்டறேனோ அந்த நாள் வரையில் உன் அக்கா காத்திருக்கணும்.''

''இது போகாத ஊருக்கு நீங்க காட்டற வழி. இன்னொண்ணு என்ன?''

''அக்காவுக்கு என்னிக்கு மாரேஜோ அன்னிக்கி அவகூட சேர்ந்து நீயும் மணமேடையிலே உட்காரணும். ஆனா, இதிலே ஒரு சின்னச் சிக்கல்.''

''என்ன அது?''

''உன் பக்கத்தில் நான் இருக்க மாட்டேன். வேறு யாராவது ஒரு பிள்ளையை உன் அப்பாவோ, அல்லது நீயோ பார்த்து முடிக்கணும்.''

''உங்ககிட்டே பேச வந்தேன் பாருங்க. என் புத்தியை...''

''என்ன நீ, அசடு மாதிரிப் பேசறே மாலு? நம்ப காதல் உண்மையானதுதான். ஆனால் அதுக்கு தெய்வீக மாலையைச் சூட்டாதே... பிராக்டிகலா நினைச்சுப் பாரு. என் தாத்தா அஞ்சாறு நாளா இருமறார். இந்த இருமல் நல்ல இருமல் இல்லைன்னு டாக்டர் சொல்றார். மூச்சு விடறப்ப கன்னாபின்னான்னு ராகங்கள் வர்றது. இன்னும் இரண்டு மூணு நாள்லே சுவாசக் குழாயில் இருக்கிற கபமெல்லாம் வெளியே வரலேன்னா, தாத்தாவோட கடைசி அத்தியாயத்தை எழுதத் தொடங்கிடலாம். அதுக்கு அப்புறம் பிரச்னையே இல்லே!''

''என் ரமணி, பழுத்த பழம் காம்பு ஒடிஞ்சு விழப் போறதுன்னு கலகலப்பாச் சொல்றீங்க. அவர் கண் மூடறதுக்கு முன்

பி.வி.ஆர்.

னாடி நாம தம்பதியாப் போய் நமஸ்காரம் செய்தால் அவருடைய ஆசீர்வாதம் கிடைக்குமே?''

''ஆசீர்வாதம் வைச்சுக்கிட்டு என்ன செய்யறது, மாலு? இது திரேதாயுகம் இல்லே. ஆசீர்வாதமும் சாபமும் பலிக்கிறதுக்கு! நாம கலியுகத்திலே இருக்கோம். நியாயமும் தர்மமும் விலை போகாத யுகம். பொய், பித்தலாட்டம், லஞ்சம், வஞ்சனை, தாண்டவமாடறது. கண்டகண்டவனெல்லாம் தன்னை ஒரு அவதார புருஷனா வெளிச்சம் போட்டுக்கிட்டு, இருட்டிலே எல்லா அக்கிரமங்களும் செய்யறான்.''

''உங்க உபன்னியாசம் எனக்குத் தேவை இல்லை. நான் வர்றேன். ஆனா ஒண்ணு. இனிமே என் கழுத்திலே தாலி கட்டுங்கன்னு நான் மண்டி போட்டுக் கெஞ்ச மாட்டேன். 'நான் ரெடி'ன்னு நீங்க வரணும்.''

''அதுவரையில் உன்னால் காத்திட்டிருக்க முடியுமா, மாலு?''

''முடியும். ஒருத்தனுக்கு மனைவின்னா அந்த ஒருத்தன் நீங்கதான்!''

ரமணி சிரித்தான்.

''என்ன சிரிக்கிறீங்க?''

''எனக்கு ஒரு சினிமா டயலாக் நினைவுக்கு வந்தது. என்ன தெரியுமா?''

''எனக்குத் தெரிய வேண்டாம். சினிமாக் காதல் அளவுக்கு நான் இன்னும் தாழ்ந்து போகலே.''

''அது எனக்குத் தெரியாதா, மாலு? இருந்தாலும் சொல்றேன். 'மணந்தால் மகாதேவி, இல்லையேல் மரணதேவி! எப்படி?''

மாலு பதில் சொல்லாமல் தன் இருக்கையை நோக்கி நடந்தாள்.

தனம் நேற்றும் சோறு ஆக்கவில்லை. இன்றும் அடுப்புப் பக்கம் போகவில்லை. ரங்கனால் அவளை எதிர்க்கவும் முடியவில்லை. அவளுடைய வசைமொழிகளை அவன் தன்னுடைய வாழ்க்கை அகராதியில் படித்ததே கிடையாது. சென்னைத் தெருச் சண்டைகளில் கீழ்த்தரமான வசைச் சொற்களை அவன் கேட்டதுண்டு. வேடிக்கை பார்க்காமல் அவன் நகர்ந்து விடுவான்.

அன்று, திங்கட்கிழமை அவன் ஆபீசுக்குப் புறப்படுகையில், ''யோவ், நில்லுய்யா!'' என்று சொல்லி தனம் எதிரே வந்தாள்.

''என்ன தனம்?''

''நான் முந்தாநாள் ஒரு பொம்பளை டாக்டர்கிட்டே போனேன், இல்லே?''

''ஆமாம், போனே.''

''எனக்கு என்ன கோளாறுன்னு உனக்குத் தெரியுமா?''

''தெரியாது.''

''என்னடா இவ அடிக்கடி வாந்தி எடுக்கிறாளே, சரியாச் சோறு தின்றதில்லையே, அடிக்கு அடி ஒடம்பு தானாமப் படுக்கிறாளே, இன்னா விசயம்னு நீ என் கையிலே கேட்டிருக்கியா?''

''இப்ப சொல்லு தனம், உனக்கு என்ன உடம்பு? எதுக்கு டாக்டர் அம்மாகிட்டப் போனே?''

''ஹாங், இப்பக் கேளு. ஏன்யா, நீ அல்லாம் ஒரு புருசனா?''

சீறிப் பாய்ந்த தனம் திடீரென்று அழ ஆரம்பித்தாள். கேவிக் கேவி அழுதாள்.

ரங்கனிடம் இரக்க உணர்ச்சி பெருகவில்லை என்றாலும் அழுகையை அடக்க வேண்டும் என்று தோன்றியது.

''அழாதே தனம். டாக்டர் அம்மா என்ன சொன்னாங்க?''



தனம் கேவலை கீழ் ஸ்தாயிக்குக் கொண்டு போனாள்.

"இன்னும் ஏழெட்டு நாளுக்குள்ளே ஆபரேசன் செஞ்சாகணுமாம். இல்லாட்டி, இல்லாட்டி... நான் செத்துப் பூடுவேனாம். ஏன்யா. நான் ஒன் பொஞ்சாதி இல்லே? ஒனக்கு நான் ஒரு கொயந்தை பெத்துத் தர வேணாம்? நான் செத்துப் பூடணும்னு நீ நெனக்கிறியா?"

"இல்லே தனம். சத்தியமா இல்லே. என்ன ஆபரேஷன்னு டாக்டர் அம்மா சொன்னாங்க?"

"என் வவுத்திலே ஒரு சின்னக் கட்டி வளருதாம். அது பெரிசானா வவுறே வெடிச்சுடுமாம்."

"ஐய்யயோ... நீ சாகக் கூடாது தனம்... நான் இன்னிக்கே உன் அப்பாவைப் பார்த்து விசயத்தைச் சொல்லிடறேன்!"

"அந்தத் துப்புகெட்ட மனுசன் கையிலே எதுக்குய்யா சொல்லணும்? அது ஒரு செல்லாக்காசு குடுக்காது. காதும் காதும் வெச்சாப்பல ஆபரேசனை முடிச்சுப்போம்."

"ரொம்பச் செலவாகுமா, தனம்?"

"டாக்டர் அம்மா நல்ல அம்மா. மூந்தா நாள் என் கையிலே துட்டு கூடக் கேட்கலே. மத்த டாக்டர்னா ரெண்டாயிரம் ஆவும் பாங்க. அவங்க நல்லவங்க. ஆயிரம் ரூவா போதும்னாங்க. முந்தின நாள் ராத்திரி போவணுமாம். மத்தா நாள் சாயங்காலம் வூட்டுக்கு அனுப்பிச்சுடுவாங்களாம்."

"ஆயிரமா?"

"அதுக்கு மேலே நூறு இருநூறு ஆவலாம். மருந்துச் செலவு, ஆட்டோ செலவு இதெல்லாம் இருக்குதில்லே? யோவ், நீ இன்னா செய்யறே, ஒரு ஆயிரத்து இருநூறு ரூபா கொண்டா."

ரங்கன் மௌனமாக நகர்ந்தான்.

"யோவ், பணம் இல்லாட்டி ஆபரேசன் இல்லே! ஆபரேசன் இல்லாட்டி ஒன் பொஞ்சாதி உசிர் இல்லே. இத்த மறந்துடாதே..."

ரங்கன் பதில் கூறாமல் வெளியேறினான்.

ரங்கன், குழைந்து குழைந்து தன்னை நோக்கி வருவதைக் கண்ட ரமணி தனக்குள் சிரித்துக் கொண்டான். தனம் அவனை என்ன பாடுபடுத்தி வருகிறாள் என்பதை ரங்கன் வாய் வார்த்தையாகச் சொல்லாமலே அவன் அறிவான்.

ரங்கனாகப் பேச்சை ஆரம்பிக்கட்டும் என்று ரமணி ஏதோ ஒரு ஃபைலை எடுத்துப் பிரித்தான்.

"ரமணி சார்!" ரங்கனுடைய குரலில் சோகம் இல்லை. கெஞ்சல் ஒலித்தது.

"என்ன ரங்கா, என்ன வேணும்?"

"பணம்."

"நெனைச்சேன்."

"ஆயிரத்து இருநூறு."

"போன மாசம் வரை பத்துப் பைசா இருபது பைசான்னு கணக்குப் பார்த்துச் செலவழிச்சவன் இப்ப ஆயிரம் ஆயிரமா எடுத்து வீசறே!"

"ரொம்ப முக்கியமான செலவு ரமணி சார்!"

"உன் பெண்டாட்டிக்குத்தானே?"

ரங்கன் தலையாட்டினான்.

"இதப் பாரு. போன மாசம் கல்யாணம் ஆன உடனே வீட்டு வாடகை, மளிகை சாமான், அப்புறம் தனத்துக்குத் துணி மணின்னு ஆயிரம் எடுத்தே... அப்புறம் தனம் காதுக்கு ஜிமிக்கி வேணும்னா, காலுக்குக் கொலுசு வேணும்னான்னு எழுநூறு, எடுத்தே... இப்ப ஆயிரத்து இருநூறு! எதுக்கு? உன் கணக்கிலே மூவாயிரத்துச் சொச்சம்தான் இருக்கு."

"அவளுக்கு ஆபரேஷன் செய்யணும்."

"ஆபரேஷனா? தனத்துக்கா?"

"ஆமாம்."

"எங்கே, மூளையிலா?"

ரமணியின் நையாண்டியைப் பொருட்படுத்தாமல், "வயித்திலே ஏதோ கட்டி வளர்ந்திருக்காம். அதை எடுத்துடணுமாம்," என்றான் ரங்கன்.

"அவ சொன்னாளா?"

"டாக்டர் அம்மா சொன்னாங்களாம்..."

"ஆபரேசன் செய்யாமப் போனா என்ன ஆகுமாம், ரங்கா? அதையும் தனம் சொல்லியிருப்பாளே?"

"சொன்னா. கட்டி வளர்ந்துட்டே போகுமாம். பெரிசாகும். அப்புறம் வயிறு வெடிச்சுச் செத்துப் போயிடுவாளாம்."

ரமணி வாய்விட்டுச் சிரித்தான்.

"நீ வடிகட்டின முட்டாள் ரங்கா. உன்னை அவ நன்னா ஏமாத்திட்டு வர்றா."

"இல்லீங்க ரமணி சார்... கொஞ்ச நாளாவே அவ அடிக்கடி வாந்தி எடுக்கறா... சரியாச் சாப்பிடறதில்லே... சுருண்டு சுருண்டு படுக்கறா. எனக்குப் பயமா இருக்கு."

"என்ன பயம்? பெண்டாட்டி அம்பேல் ஆயிடுவாளோன்னா?"

"உங்களுக்கு எல்லாம் விளையாட்டா, இருக்கு, ரமணி சார்."

"ஏண்டா ரங்கா, தெரியாமத்தான் கேக்கறேன். இந்த பஜாரி தனம் செத்துப் போனா உனக்கு என்ன நஷ்டம்? வேறே ஒருத்தி வருவா..."

"இப்படி எல்லாம் பேசாதீங்க, ரமணி சார். பாஸ் புக்கைக் குடுங்க, பணம் எடுத்து வர்றேன்."

"தர்றேன்."

"தனத்தைக் கட்டிக்கிட்டேன். இனிமே அவளுக்குச் செய்ய வேண்டிய கடமை

எனக்கு இருக்கு. இல்லியா?''

''ஓ. இருக்கு! நிறைய இருக்கு. உன் கடமையை நல்லாச் செய்... பாங்க்லே இருக்கிற பணமெல்லாம் கரைஞ்சப்புறம் எப்படி தன்னோட முதலை வாய் தொறக்கறப்பவெல்லாம் நீ வாரி வாரிப் போட்டு உன் கடமையைத் தீர்க்கப் போறேன்னு நான் பார்க்கிறேன்... எனக்கென்ன, உன் பணம், உன் பெண்டாட்டி...''

ரமணி மேஜை டிராயரைத் திறந்து பாஸ் புத்தகத்தை எடுத்து வீசி எறிந்தான். அது மேஜையின் விளிம்பில் பட்டுக் கீழே விழுந்தது.

ரங்கன் குனிந்து எடுத்தபின், ரமணியைப் பார்த்தான்.

''உங்க கோபத்திலே நியாயம் இல்லே, ரமணி சார். நிஜமாலுமே தனத்துக்கு உடம்பு சரியில்லே... மூந்தா நாள் அவ டாக்டர் கிட்டே போனா...''

''யாரு அந்த டாக்டர்?''

''பேரு... பேரு... ஹங்... அம்புஜம்.''

''எங்கே இருக்காங்க?''

''பிராட்வேயில கடைசியிலே சோத்துக் கைப் பக்கமா...''

''சரி போ... ஆமாம், என்னிக்கு ஆபரேஷன்?''

''இனிமேத்தான் தெரியும்.''

''வேறே என்ன உதவி வேணும்னாலும் கேளு. செய்யறேன். உன் கணக்கிலே பணம் தீர்ந்து போனாலும் கவலைப்படாதே. நான் இருக்கேன்.''

''நீங்க மகமாயி மாதிரி. கோவிச்சுப் பீங்க. மகமாயி மாதிரி கருணையும் காட்டு வீங்க, ரமணி சார்...''

ரமணி அன்று மாலையே பிராட்வேயில் கோடி வரை நடந்தான். வலதுபுறத்தில் ஒரு மூன்று மாடி வீட்டில், முதல் மாடியில் அம்புஜம் தன் சிகிச்சை நிலையத்தை அமைத்துக் கொண்டிருந்தாள்.

ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்து விட்டதாக ஜனவரி இருபத்தேழாம் தேதி ரங்கன் மகிழ்ச்சியுடன் தெரிவித்த போது, ரமணி எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தான்.

அன்று மாலை இரவு எட்டு மணி அளவில் டாக்டர் அம்புஜத்தை அவன் சந்தித்தான். இருவரும் சரளமாகப் பேசிக் கொள்ளும் அளவுக்கு ரமணி தன்னை அறிமுகப் படுத்திக் கொள்ளவே, உண்மை வெளிவந்தது.

தன்னுடைய ஊகம் சரியாகி விட்டது என்று ரமணி தன் முதுகில் தானே தட்டிக் கொள்ளவில்லை.

இந்த நலத்திடமிருந்து ரங்கனை எப்படிப் பிரிப்பது என்ற யோசனையில் மூழ்கிப் போனான்.

(தொடரும்)

* ஆர். சாம்பசிவம், காஞ்சிபுரம்.

? ''ஓட்டடைக்குச்சியெடுத்துக்கொண்டதால் சிலந்திப்பூச்சி சிம்மாசனம் ஏறி விட்டது'' என்று காளிமுத்து வர்ணித்திருக்கிறாரே?

! ஆக, சிலந்திப்பூச்சி சிம்மாசனத்திலிருந்து விரட்டப்படுமானால் ஒட்டடைக்குச்சிதான் அதில் அமரப் போகிறது என்கிறார்! அவர் இன்னும் கொஞ்சம் எச்சரிக்கையாகப் பேசுவது நலம்.

* எஸ். யோகலிங்கம், சென்னை.

? இந்தியக் கிரிக்கெட் அணியின் சமீபத்திய சாதனை என்ன?

! ஷார்ஜாவிலும் தோல்வி!

* ஜே. சரவணன், வேலூர்.

? முதல்வர், விடுதலைப்புலிகளுடன் கொண்டுள்ள நட்பு?

''கூடா நட்பு; ஆபத்தானது. புலிகளுக்கும் கொழும்பு மைய அரசுக்கும் இடையே இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கம் நீடிக்கப் போவதில்லை. மறுபடி புலிகள் போராட்டத்தைத் தொடங்க வேண்டியிருக்கும். அப்போது தமிழகத்தில் அவர்கள் ஒரு ராணுவத் தளம் அமைத்துக் கொள்ள முயற்சி செய்வார்கள். இப்போதே தமிழகத்தின் தெற்குக் கடற்கரையோரப் பகுதிகளில் புலிகளின் ஆதிக்கம் ஆரம்பமாகியிருக்கிறது. கருணாநிதியின் போக்கு கவலை தருகிறது'' என்றெல்லாம் தேசிய நாளிதழான ஹிந்துஸ்தான் டைம்ஸ் தலையங்கம் எழுதியிருப்பதை அலட்சியம் செய்வதற்கில்லை.

* பா. லெட்சுமிநாராயணன், சென்னை.

? சட்டசபையில் சாப்பாடு கேட்டது சரியா?

! கூப்பாட்டை விட சாப்பாடே தேவலாம்.



* கூறியது குற்றமே!



* புலிகளுடன் நட்பு...

* இளங்கவி, கள்ளி மந்தயம்.

? ''மரத்தடிப் படிப்பே மகத்தானது'' என்கிறாரே, அன்பழகன்?


! இப்போது பெரும்பாலான அரசுப் பள்ளிகளில் கட்டடத்துக்குள் நடக்கும் படிப்பே மரத்தடிப் படிப்பாகத்தான் இருக்கிறது. வெயிலில் காய்ந்தும் மழையில் நனைந்தும் புழுதியில் குளித்தும்தான் குழந்தைகள் படிக்கிறார்கள்.

* இரா. ஆதிநாராயணன், தஞ்சை.

? 'காவிரி நீர் பிரச்னை குறித்துக் கர்நாடகத்துடன் இனி பேசிப் பயனில்லை; பேசப் போவதுமில்லை' என்று கூறியுள்ளாரே, கலைஞர்?

! சரியான கணிப்பு. நடுவர் தீர்ப்புக்கு விட்டு முடிவை ஏற்பதுதான் நல்லது.

சட்டசபையில் சாப்பாடு கேட்டது சரியா?



* தமிழ்க் காந்தியின் சீடர்



* மரத்தடி மகாத்மியம்

* சே. வேல்சாமி, மதுரை.

? தான் சார்ந்திருக்கிற கட்சி எந்த அநீதி அக்கிரமங்களைச் செய்தாலும் அதற்கும் ஒரு நியாயம் கற்பிக்கும் அடிமட்டத் தொண்டன் பற்றி...?

! கட்சியில் உள்ள ஈடுபாட்டை விட கட்சித் தலைவரிடம் உள்ள ஈடுபாடுதான் அவனை இவ்வாறு நடந்து கொள்ளச் செய்கிறது. இந்த ''ஹீரோ ஒர்ஷிப்'' என்பது தொன்றுதொட்டு நமது ரத்தத்தில் ஊறிப் போய் இருக்கிற விஷயம். 'தலைவர் தவறே செய்ய மாட்டார்' என்று எண்ணுகிறார்கள். அவரை 'இந்திரன், சந்திரன்' என்று விண்ணளாவப் புகழ்ந்து தள்ளுகிறார்கள். இதெல்லாம் முன்னாளைய மன்னர் ஆட்சியிலி

ருந்து தொடர்ந்து வரும் தவறான மனப்பான்மைகள். ஜனநாயகத்தில் மக்கள், ஒவ்வொரு பிரச்னையையும் தனித்தனியே பார்க்க வேண்டும். ஒவ்வொன்றிலும் நம் தலைவர் எப்படி நடந்து கொண்டிருக்கிறார் என்று தனித்தனியே எடை போட வேண்டும். தீர்ப்பு வழங்க வேண்டும். கட்சிக்குள்ளேயும் இந்தக் கருத்துச் சுதந்திரம் வளர்ந்து, உட்கட்சி ஜனநாயகம் மலர வேண்டும். இல்லையெனில் நம் ஜனநாயகம் நோயுற்று பலவீனப்பட்டுப் போகும்.

* **ஆர். சிவகுருநாதன், மயிலாடுதுறை.**

? ***தி. மு. க. அரசின் தவறுகளைச் சுட்டிக் காட்டும் கல்கியை 'இந்திரஜித்' முத்தாரத்தில் சாடியிருக்கிறாரே, கவனித்தீர்களா?***

! அவர் ஊசி எடுத்துக் குத்தினாலும் நமது உள்ளத்தில் விரோதம் இல்லையாதலால் வலிக்கவில்லை. நம்முடைய விமர்சனங்களுக்கு ஆளாகும் அனைவரும் நமது நண்பர்களே!

* **திலிப், திருச்சி.**

? ***தண்டபாணி தேசிகரிடம் உங்களைக் கவர்ந்தது எது?***

! தமிழ்த் தாத்தாவால் உருவாக்கப்பட்டதும், குன்றக்குடி அடிகளார், தருமை மகா சந்நிதானம், மு. கருணாநிதி, மு. மு. இஸ்மாயில், குமரி அனந்தன், நெடுமாறன், வீரமணி போன்ற பலரை உருவாக்கியதும்.

* **மஞ்சு தேவன், கல்கத்தா.**

? ***கலபமான வேலை எது?***

! கேள்வி கேட்பது! "Any fool can ask questions which the most intelligent man cannot answer" என்று கூறியவர் நேருஜி.

* **ஆர். வெங்கடசுப்பிரமணியன், சோழபுரம்.**

? ***'இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் போர் மூண்டால் பாகிஸ்தானை ஆதரிக்கத் தயங்க மாட்டோம்' என்று மான் கூறியுள்ளாரே, கவனித்தீரா?***

! அப்படி அவர் கூறியது குற்றம்தான். ஆனால் அவர் அந்த அளவுக்குப் போகும் வரை நிலைமையைப் பிரதமர் முற்ற விடாமல், அவரை வளைத்துப் போட்டிருக்கலாம் என்பதே யதார்த்தம். சதா பாகிஸ்தான் மீது பழி சுமத்திக் கொண்டிராமல், பர்சாப் பிரச்னைக்கு மிதவாதத் தலைவர்களை இனம் கண்டு, அவர்களுடன் சமரசமாகப் போய்ப் பல கோரிக்கைகளில்



* கலபமான வேலை...!

விட்டுக் கொடுத்து, சீக்கிய சமுதாயத்தின் நல்லெண்ணத்தையும் நல்லாதரவையும் பெற உள்ள வாய்ப்பைப் பிரதமர் கைநழுவிப் போக அனுமதித்துக் கொண்டிருக்கிறார்.

* **ப. மூர்த்தி, பெங்களூர்.**

? ***'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று சொன்ன வள்ளுவர் இன்று இருந்திருந்தால்?***

! கேரளப் பல்கலைக் கழகத்தின் பத்திரிகைத் துறையைச் சேர்ந்த அன்னா தாமஸ் சென்னைப் பல்கலைக் கழக நூலகத்தில் பட்ட அவதியையும் அவருடைய பொன்னான நேரம் நாட் கணக்கில் வீணானதையும் அறிந்தால் அந்தக் குறளை வாபஸ் பெற்றுக் கொண்டிருப்பார்!

* **மேலை பழ. நாகப்பன், சென்னை — 41.**

? ***இந்தத் தேசம் உருப்பட உருப்படியான வழிகளைச் சொல்லுங்களேன்...?***

! உத்தரப்பிரதேச ஜனதா தள எம். எல். ஏ. ஒருவர் தமது மருமகனை தில்லிக்கருகே உள்ள ஓர் ஆங்கில மீடியம் பள்ளியில் சேர்க்க முயற்சி எடுக்கிறார். முயற்சி பலிக்காத போது, பள்ளியின் தலைமை ஆசிரியரது கைகால்கள் எம். எல். ஏ.யின் சகோதரராலும், பிறராலும் முறிக்கப்படுகின்றன! இந்தச் செய்தி பத்திரிகைகளில் வெளியானதுதான் தாமதம், அந்த எம். எல். ஏ. — மகேந்தர் சிங் பாட்டி — ஆங்கில மீடியம் பள்ளிகளே மோசம் என்றும், ஆங்கில மோகத்தை நீக்கவும் பள்ளிகளைச் சீரமைக்கவும் போராட்டம் தொடங்கப் போவதாகவும் அறிவித்து நாடகமாடுகிறார்! 'ஆங்கில மீடியம் பள்ளியில்தானே நமது மருமகனைச் சேர்க்க முயற்சி செய்தோம்' என்பதை வசதியாக மறைத்து, பிரச்னையைத் திசை திருப்புகிறார். இப்படிப்பட்ட எம். எல். ஏக்களையும், எம். பிக்களையும்தாம் நம் மக்கள் தேர்ந்தெடுத்துச் சட்டமன்றத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் அனுப்பி வைக்கிறார்கள். நீங்கள் நாடு உருப்பட வழி கேட்கிறீர்கள்! என்னத்தைச் சொல்ல!

* **ரூ. 20 பரிசு பெறுபவர்:**

கே. வேல்சாமி,
3, திரவிய லிங்கேஸ்வரர் கோயில் தெரு,
மதுரை — 625 001.

பழி வாங்க ஒரு தருணம்

இராஜா பாலச்சந்தர்

அகல்யாவை வர்ணிப்பது அவசியமில்லை என்றாலும், வர்ணிப்பது தப்பில்லை. எலுமிச்சை நிறத் தோல். ஆப்பிள் கன்னங்கள். கொவ்வை அதரங்கள். நாவல் விழிகள். தக்காளி மூக்கு. ரஸ்தாளிக் கழுத்து.....

உதாரணங்கள் யாவும் சரியா என்பதை, அவள் வெளிச்சத்துக்கு — அதாவது, படம் முடிந்து வெளியே — வரும்போது நீங்களே சரிபார்த்துக் கொள்ளலாம்.

ஆனால், உங்களால் சரிபார்க்க முடியாது. காரணம், குரு.

அகல்யா உயிரோடு வெளியே செல்லப் போவதில்லை என உறுதிகூறும் குருவுக்கு உடம்பெல்லாம் ஆத்திரம் உறவாடியது. காதல் தோல்வியின் அடையாளமாக ஒரு மாத தாடி அவன் கன்னத்தில்.

அடையாளத்தைத் தடவியபடி யோசித்தான் குரு.....

படிக்கின்ற காலத்தில் நானாகவா இவளை விரும்பினேன்? நானா இவளைக் காதலோடு பார்த்தேன்? பார்க்கத் தூண்டினேன்? காதல் கடிதம் எழுதினேன்? காதலிக்கும்படி கெஞ்சினேன்? கொஞ்சினேன்?

செய்வதையெல்லாம் அவளாகவே செய்துவிட்டு, இப்படிக் காரணமின்றிக் கைவிட்டால் எப்படி?

நம்பிக்கைத் துரோகி. என்னைத் துடிக்கத் துடிக்க ஏமாற்றிவிட்டு, இப்போது லட்சாதிபதி காதலனோடா உல்லாசமாக ஊர் சுற்றுகின்றாய்? அடியே சண்டாளி, உன்னை நாட்டில் நடமாட விடுவதே பெரும் குற்றம். இவளை முடிப்பது ஒரு நாட்டு நலப்பணி.

அதைச் செய்வதற்காகவே தகுந்த முன்னேற்பாடுகளுடன் வந்திருந்த குருவின் மனத்தில் அகோரமான தாகம்.

ஒரு கொலைத் தாகம்.

பொழுதுபோக்காகச் சினிமாவுக்கு வந்த குரு, தியேட்டர் வாசலில் நுழையும்போதே அகல்யாவைப் பார்த்துவிட்டான். உடனே, அவன் மனத்தில் ஒரு திட்டம் உருவெடுத்தது.

தெருமுனைக்கு ஓடி, கைக்கு அடக்கமான சைஸில் ஒரு ஆக்ஸா பிளேடை வாங்கிவந்துவிட்டான்.

கூட்ட மறைவில் நின்று, அவளையே கண்காணித்தான். அவள் தன்னைப் பார்த்துவிடாமல் இருப்பதில் கவனமாக இருந்தான். அப்படியே பார்த்திருந்தாலும் கவலையில்லை.

அவளின் புதுக்காதலன் டிக்கெட் வாங்கச் சென்றபோது, அருகே நின்று சீட் நம்பரைக் கவனித்தான் குரு. எனவே, அதற்குப் பின் சீட்டிற்கான டிக்கெட்டை நாசூக்காகப் பேசிப் பெற்றுக் கொண்டு, படம் ஆரம்பிக்கும் வரை நூறுநாள் ஷீல்டுகளைப் பார்வையிட்டு, விளக்குகள் அணைக்கப்பட்டவுடன் உள்ளே நுழைந்தான்.

குரு எதிர்பார்த்தபடியே, அவனுக்கு நேர் எதிரே அமர்ந்திருந்தாள் அகல்யா. மெயின் படம் ஆரம்பமானது.

புதுக் காதலன் ஏதோ சேஷ்டை செய்ய அதனைத் தடுக்காமல் மறுக்கும் அகல்யாவின் சிணுங்கலைக் கேட்டு ரத்தம் கொதித்தான் குரு.

பாக்கெட்டில் விரலை நுழைத்து ஆக்ஸாவை வருடினான். 'என் இனிய நண்பனே. என் இலட்சியத்தைச் செயலாக்கப்போகும் உலோகத் தோழனே'.

குருவின் திட்டம் இப்படிக் கூறுகின்றது: படம் முடிய சுமார் மூன்று நிமிடங்கள் இருக்கும்போது, கொலையைச் செய்துவிட்டுத் தப்பிக்க பல சாதகமான சூழ்நிலைகள் உண்டு.

அப்போது, வெளிக்கதவு திறந்திருக்கும். அவசரமாக எழுந்து வெளியேறுபவர்களை யாரும் கண்டு கொள்ளமாட்டார்கள்.

அப்போது காரியத்தை ஆரம்பித்தால், அவள் குரல்வளையை அறுக்கப் பத்து வினாடிகள் அதிகபட்சம். உடனே, ரத்தம் பீச்சியடிக்க, கத்தவும் இயலாமல் துவண்டு போவாள் இந்த நயவஞ்சகி.

நிகழ்ந்ததை உணரும்பட்சத்தில், அவளின் புதுக்காதலன் என்ன செய்வான்? அப்படியே என் மீது பாய்ந்து, காலரை இறுக்கி தர்ம அடி கொடுப்பானா?

நெவர். அவனைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை. அவளோடு தான் வந்ததே தெரியக் கூடாது என்பதற்காக, முதலில் எழுந்து ஓடுபவன் அவனாகத்தான் இருப்பான் என்பது சர்வநிச்சயம்.

சுற்றியுள்ளவர்கள்?

'நமக்கேண்டா வம்பு' என பின்னால் கால்பட விலகி ஓடும் ரகம்தான் அனை



வரும். அப்படியே எவனாகிலும் இந்த இந்தியப் பொது நியதியை மீறிப் பிடிக்க வந்தால், இருக்கவே இருக்கிறது ஆக்ஸா.

ஆக, ஒரு நிமிடத்திற்குள் சாலையை அடைந்து, ஏதோவொரு ஆட்டோவில் தொற்றி, ஏதோவொரு இடத்தில் இறங்கிக் கொண்டால் எந்தக் கொம்பனாலும் என்னை அடையாளம் சொல்ல முடியாது. பழிக்குப் பழி. பாதுகாப்புக்குப் பாதுகாப்பு.

நினைக்கவே மகிழ்ச்சியாக உணர்ந்தான் குரு.

அதற்குள் இடைவேளை விடப்பட, சட்டென வெளியேறி, காரிடாரின் மையப் பிரதேசத்தில், பெட்டியிலிருந்து ஐஸ்கிரீம் பிதுக்கிக் கொடுப்பவனை வேடிக்கை பார்த்தான் குரு. தானும் ஒன்று வாங்க ஆசைப் பட்டுக் காசை எடுத்தபோது கையோடு வந்த ஆக்ஸாவின் கூர்மையைச் சில விநாடிகள் பார்த்துவிட்டு பழைய நிலையில் வைத்தான்.

டாய்லெட் போய் வந்து, தூரத்தில் தன் புதுக் காதலனுடன் கூல்டிரிங் பருகி, கனங்கமற்றவள் போலச் சிரித்த அகல்யாவை வெறிக்கப் பார்த்தான்.

விளக்குகள் அணைய மீண்டும் இருக்கை வாசம்.

இடைவேளைக்குப் பிறகு படம் சூடேறியது. நேரம் போனதே தெரியாமல் கிளைமாக்ஸ் ஆரம்பித்தது.

விநாடிகள் விறுவிறுப்பாக ஓட, பாக்கெட்டில் கைவிட்டான் குரு. மனம் திக்திக்கிய நிலையில், ஆக்ஸாவின் கூர்மை விரலை நெருடியது.

அதை மெல்ல வெளியே எடுத்தான் குரு.

இருட்டுக்குப் பழகிய அவன் கண்களுக்கு, அகல்யாவின் கழுத்து தெளிவாகத் தெரிந்

தது: சுற்றியிருந்த அனைவருமே நிழலாகத் தெரிந்தனர்.

ஆனால், அனைவரின் பார்வையும் திரையின் மீதே படிந்திருந்தன. ஆக, அவர்களையே அறுத்தாலும் உணர்வின்றி இருப்பார்கள்.

ஆக்ஸாவை வலுவாகப் பிடித்தான் குரு. ஆர்வத்தின் காரணமாகச் செய்வது போல நகர்ந்து, சீட்டின் விளிம்புக்கு வந்தான். கைகளை முன் இருக்கையில் வைத்தான்.

இப்போது, ஆக்ஸாவுக்கும் அகல்யாவின் குரல்வளைக்கும் இடையே சில அங்குலங்களே இடைவெளி இருந்தன. இதை விட அரியவாய்ப்பு இனி கிடைக்காது.

கொலை என்ற இறுதிக் கட்டத்தைச் செயலாக்கும் நோக்கத்தோடு, குரு ஆக்ஸாவை நகர்த்தியபோது, அவன் அமர்ந்திருந்த வரிசைக்கு நேராகச் சில உருவங்கள் அசைவாடின.

நிதானித்தான் குரு.

திட்டிய பார்வையாளர்களைப் புறக்கணித்து, நெருங்கி வந்த அந்த உருவங்கள், ஆக்ஸா பிடித்த நிலையிலேயே குருவை கணநேரத்தில் அமுத்திப் பிடித்தன.

திரையரங்கின் அலுவல் அறை.

ஆளாளுக்குத் தர்ம அடி கொடுக்கப் புழுவாக நெளிந்தான் குரு.

போலீஸ் வந்தது.

''வாங்க இன்ஸ்பெக்டர். நான்தான் தியேட்டர் மானேஜர்,'' எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார் ஒருவர்.

''சொல்லுங்க.''

''இன்ஸ்பெக்டர், நான் போன்ல சொன்ன ஆள் இவன்தான். இன்டர்வெல் சமயத்துலையே இவன் தன் பாக்கெட்ல ஆக்ஸா பிளேடு வச்சிருக்கறதை நம்ம ஆளு கவனிச்சுட்டான். அப்படி கவனிக்கவே ஆறு பேரை ஸ்பெஷலா வேலைக்குவச்சிருக்கோம்.''

''ஏன்?''

''பொறாமை பிடிச்ச எதிர்த் தியேட்டர்காரன், எங்க தியேட்டரை நாசப்படுத்தணும்னே இப்படி நிறையப் பேருக்குக் காசையும், ஒரு ஆக்ஸா பிளேடையும் கொடுத்து அனுப்பறான். அப்படி வரவனுங்க, பிளேடால காஸ்ட்லி சீட்டிலுள்ள குஷன்களை கிழிச்சு நாசப்படுத்திட்டுப்போயிடறானுங்க. இதனால, எங்களுக்கு நிறைய லாஸ். அதனால, இவனை இடைவேளை சமயத்துலையே கவனிச்சாலும், கையும் களவுமாப் பிடிக்கத் திட்டம் போட்டோம். அவனுக்குத் தெரியாம வாட்ச் பண்ணோம். இவன் கையில ஆக்ஸாவை எடுத்ததும் கப்புன்னு பாய்ஞ்சு அமுக்கிட்டோம். இவனை உதைக்கிற உதையில இனி ஒருத்தனும் இந்த நோக்கத்தோட வரக்கூடாது இன்ஸ்பெக்டர்.''

தர்ம அடி தொடர்ந்தது!

பாவேந்தர் பாடியது என்ன?



நூலகங்களுக்காக வீட்டு வரியுடன் சேர்த்து "Library Cess" என்று வசூலிக்கப்படுகிறது. தவிர காப்புத் தொகை வேறு! நான் மத்திய நூலகத்தில் உறுப்பினன். ஒரு புத்தகத்திற்கு ரூ.5/— வீதம் காப்புத் தொகை செலுத்தி உறுப்பினன் ஆனேன். இதுவரை ஆண்டுச் சந்தா கிடையாது.

அண்மையில் புத்தகம் திருப்பிப் புதிய புத்தகம் வாங்கச் சென்ற போது நூலகத்தில் ஒரு அறிவிப்புக் கண்டேன். அதன்படி காப்புத் தொகை ரூ.5/— லிருந்து ரூ.10/— என உயர்த்தப்பட்டுள்ளது! மேலும் ஆண்டுச் சந்தா ரூ.3/—.

''இலவச நூலகங்கள் வேண்டும்'' என்று பாடிய பாவேந்தர் பாரதிதாசனார் நூற்றாண்டில் இந்தச் சந்தா விதிப்பு, கட்டண உயர்வு!

— வெ. கிருஷ்ணமூர்த்தி, சென்னை — 11.

ஸ்பெயின் நாட்டுக் கொடுங்கோல் மன்னன் பிராங்கோ, தனது கட்சிக்கு வெற்றி முழக்கமிடாத பாமர மக்களைப் பீரங்கி கொண்டு சுட்டுத் தள்ளினான்.

''இப்படிச் செய்யலாமா?'' என்று கிறிஸ்தவப் பாதிரிமார்கள் அக்கொடுங்கோலனிடம் கேட்டனர்.

''என் பீரங்கியின் வாயில் சிலுவைக்குறி பொறித்திருக்கிறேன்; என்னைப் பாவம் அணுகாது'' என்றான் பிராங்கோ!

— எஸ். முகம்மது யூசுப்.





புது வசந்தம்

ஊட்டியிலிருந்து ஓர் ஆபத்தைத் தவிர்க்கக் காதலனைத் தேடிச் சென்னை வந்த ஒரு பெண். காதலன் மேல்நாடு போயிருக்க,வேறு போக்கிடம் தெரியாமல் தவிக்க, பிழைப்புக்கே தடுமாறும் உத்தமமான நாலு இளைஞர்களின் துணை கிடைக்கிறது. காதலன் திரும்பும் வரை — ஓராண்டுக்கு மேல் — அவர்களுடன் நட்பு முறையில் தங்கி அவர்களது பூரண வாழ்க்கைக்கு ஆளாகி, காதலன் திரும்பியதும் பூரிப்பு மகிழ்ச்சியுடன் அவனிடம் தன் நண்பர்களை அறிமுகம் செய்து வைக்கப் போய், காதலனின் குரோதமான வெறுப்பை நண்பர்களும் சந்தேகத்தை அவளும் பெற்று... காதலனை செமைவிளாசு விளாசிவிட்டு நண்பர்களை வாழ வைக்க அவர்களிடமே மீண்டும் சேர்கிறாள்.

இளைய சமுதாயத்தைப் புதுப்பார்வையில் சித்திரிக்கும் படம். ஆபாசம் இல்லாமல் இருபாலரையும் பவித்திரமான நட்பால் ஒட்ட வைக்கும் புதிய கண்ணோட்டம். ஒரு காபரே கிடையாது; ஒரு டிஷ்யூம் டிஷ்யூம் கிடையாது; ஒரு காமெடி ட்ராக் கிடையாது. தமிழ் சினிமா ஃபார்முலா கிடையாது.

சிதாராவைக் கதாநாயகியாய்த் தேர்ந்தெடுத்துப் போட்டதில் பாதி வெற்றி. கையில் ஹோல்டாலுடன் கலகலப்பான சாலையில் அவர் மலங்க மலங்க முழித்துக் கொண்டு நிற்க, கைதேர்ந்த ஃப்ராடு குமரிமுத்துவின் வலையில் அவர் விழப் போகும் சமயம், அந்த ஆளின் பிடியிலிருந்து அவரை அந்த நாலு பேரும் காப்பாற்றினாலும் காப்பாற்றினார்கள். ஆலம் பிசினாய் அப்படியா ஒட்டிக்கொள்வார்! ஏறக்குறைய கால்வாசிப் படம் அவரை ஊமையென்றே நம்பிக் கொண்டிருக்கும் போது, காய்கறிக்காரரிடம் அவர் கன்னாபின்னாவென்று பேரம் பேசுவதைக் கேட்டதும் நான்கு நண்பர்களைப் போலவே நாமும் அசந்து போகிறோம்.

சினிமாவில் சேரும் ஆசையில் இக்குக்கொருவராய்ப் புறப்பட்டு வந்த முரளி, ஆனந்த் பாபு, ராஜா, சார்லி நாலு பேரும் அமைத்துக் கொண்ட இசைக் குழு தெருவோர பிளாட்பார முழக்கம் செய்வது புதுமை. ராஜ்குமார் இசை கிண்ணாரம் கொட்ட வைக்கிறது.

வீட்டுக்கார மாமி, மகள் கௌரியின் திருமண நிச்சயதார்த்த சமயத்தில் சம்பந்தி ஸ்வாமி, அந்தப் பெண் யாருக்கோ எழுதிய கட்டுக் காதல் கடிதங்களைக் கொட்டிக் கவிழ்த்து, ''இந்தப் பெண் வேண்டாம்'' என்று வெளியேறும் போது, சிதாரா குறுக்கிட்டு, ''நீங்க தப்பாப் புரிஞ்சிட்டிருக்கறீங்க. என் பேரும் கௌரிதான். நான் மாடியிலே இருக்கேன். நான் எழுதின லெட்டர்களைத்தான் இவள் எழுதினதா தப்பாப் புரிஞ்சிட்டீங்க,'' என்று சொல்லி மாமியின் மானத்தையும் பெண் வாழ்க்கையையும் மீட்டுத் தருகிறாள். அதற்கு மாமி நன்றி சொல்லும் போது, ''பரவால்லே மாமி. நான்தான் ஏற்கெனவே நாலு பேரை வச்சிட்டிருக்கறதா நீங்களே சொன்னீங்க. அத்தோட இன்னொருத்தரையும் வச்சிட்டுப் போறேன்,'' என்று சொல்லி விட்டுப் போகிறாரே அங்கே சட்டி பாய்கிறது.

துவக்கத்தில் ஸ்ரீதர், பாலசந்தர், பாரதிராஜா, மகேந்திரன், மணிரத்னம் போன்ற வெற்றிப்பட டைரக்டர்களின் பட்டியல் (படம்) போட்டுக் காட்டி என் திரையுலக துரோணர்களுக்கு இந்த ஏகலைவனின் காணிக்கை என்பது போல் அடக்கம் காட்டியிருந்தாலும் விக்ரமன் பக்குவமாக முன்னவர்களின் நல்ல அம்சங்களை உறிஞ்சிப் படம் முழுக்க விரவியிருப்பதை மறுப்பதற்கில்லை.

— பி. எஸ். எஸ்

வட்டமேஜை

பீச் மெல்பா ஐஸ்கிரீம்



* வளர்பிறைக் கலைஞர் திருமதி சுதா அட்டைப்படத்தைப் போன்றே பேட்டியிலும் 'பளிச்'சிட்டார்.

செங்குன்றம், கே. ரமேஷ்ராம்.

* யுத்தம் நடக்கும் போது, தீவிரவாதிகளும் சேர்ந்து உள்நாட்டில் சதி செய்யத் தொடங்கி விட்டால் மக்களுக்குச் சிரமங்கள் அதிகரிக்கும். எனவே, ராணுவம் மட்டும் மனவுறுதியுடன் இருந்து பயனில்லை. எதையும் சமாளிக்க, துயர்களில் பங்கு கொள்ள மக்களும் அதே உறுதியுடன் இருக்க வேண்டும் என்பதை அனைவரும் புரிந்து கொள்ளும் படி மிகத் தெளிவாகக் கூறியிருந்தார் லெப்டினன்ட் கர்னல் கங்காதரன்.

சீர்காழி, சிவ. சண்முகம்.

* பயங்கரவாதத்தை விடக் கொடியது அசட்டை என்று சொல்லி, அசட்டையால் ஏற்பட்ட மோசமான விளைவுகளை விளக்கிய தலையங்கம் அருமை.

சங்கராபுரம், கே. மகேஷ்.

* இவ்வார தலையங்கம் மிக அருமை. 'பற்றியது நெருப்பு; எரிகிறது நெஞ்சு' தலைப்பே வித்தியாசமாக இருந்தது. நமது அசிரத்தைப் போக்கைச் சரியாகப் படம் பிடித்துக் காட்டியது.

மொரப்பூர், ச. உமர்கான்.

* தீண்டப்படாதவர்களுக்குக் குடிக்கத் தண்ணீர் கூடத் தராத மக்கள் இருந்த அந்தக் காலத்திலேயே, தினந்தோறும் சாப்பாடு போட்டு, டாக்டர் அம்பேத்காரை சொந்த மகன் போல் நடத்திய பிராமணரும் இருந்திருக்கிறார் என்பது உள்ளத்தை நெகிழச் செய்கிறது.

வடுகவிருட்சியூர், ஆர். அமுதா.

* 'ஒருவரைப் பற்றி விமர்சிக்கும் போது, நயமாக எடுத்துரைப்பது நல்லது தான்' — என்று மேலே உள்ள கேள்விக்குப் பதில் சொல்லி விட்டு, '..... ரஜினி கண்டக்டர் வேலையாவது பார்க்கச் செல்ல வேண்டும்' — என்று அடுத்த கேள்விக்குக் கடும் சொற்களால் விமர்சித்துப் பதில் சொல்லியிருக்கிறாரே தராசு.... இது எப்படி இருக்கு...?

திருவனந்தபுரம், நதமா மணாளன்.

* மூர் மார்க்கெட் தீப்பற்றிய சம்பவத்தையே மக்கள் மறந்து விட்ட நிலையில், இன்றைக்கு அம் மூர் மார்க்கெட் வியாபாரிகள் படும் அவல நிலைகளை எடுத்துச் சொல்லிய கல்கிக்குப் பாராட்டு.

திருநெல்வேலி — 2, பாளை உதயம்.

* நறுக்காகப் பத்தே வரிகளில் 'தங்கத்தின் தங்கம்' படத்தைப் பற்றித் தாங்கள் விமர்சனம் செய்து விட்டீர்களே!

சீர்காழி, ஜெயப்ரியா.

* விஜய நிலாவின் 'சந்தர்ப்பம் மறந்த சதுரங்கம்', சுப்ரபாரதி மணியனின் 'வெவ் வேறு சிறு வைகள்', அபிமானியின் 'வலிமை' நா. நாகராஜனின் 'மற்றவை நேரில்'...., என்று ஒவ்வொரு சிறுகதையும் முத்துக்களாய் இருந்தது! சிறுகதைத் தேர்வு அருமையிலும் அருமை!

சென்னை — 82, எஸ். யோக லிங்கம்.

* 'ராஜாஜியின் வாழ்க்கை வரலாறு' அவரது நிறைவான — ஒப்பற்ற — வாழ்க்கையைப் போலவே மிக உயர்வாக இருந்தது. இந்தக் கட்டுரைத் தொடர் அப்படியே ராஜாஜி அவர்களைக் கண்முன் நடமாட வைத்து, அவர் நேற்று வரை உயிரோடு வாழ்ந்து... இதோ, இப்போதுதான் மறைந்ததைப் போன்ற ஓர் உணர்வை ஏற்படுத்தியது.

மங்கைநல்லூர், ஆர். செல்வ ராணி.

* ராஜ்மோகன் காந்தி ஆங்கிலத்தில் எழுதியதைப் பல்வேறு வாசகர்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் எளிய முறையில் தமிழாக்கம் செய்த கல்கி ஆசிரியருக்கு எனது பாராட்டுக்கள்.

இராயபுரம், தக்கோலம் புகாரி.

* லேசர் சிகிச்சை முறையில் கத்திக் காயமில்லை; இரத்தக் கசிவு இல்லை. லேசில் போகாத வலி போகிறது. ஆறாத புண்கள் ஆறுகின்றன. மாயமா? மந்திரமா? எந்த விதச் சிரமமும் இல்லாமல் சிகிச்சை செய்வதென்றால் யாருக்குத்தான் சந்தோஷமும், உற்சாகமும் இருக்காது? மருத்துவ உலகில் ஒரு புரட்சியை ஏற்படுத்தும் இச் சிகிச்சை முறை ஏழைகளுக்கும் பயன் தரும் விதத்தில் குறைந்த கட்டணத்தில் அமைந்தால் எண்ணற்ற நோயாளிகள் நலம் பெற உதவும்.

தஞ்சாவூர், எஸ். விமலா.

* சொன்னை இலாபம் பெறும் இடைத் தரகர்கள் ஏழைக் கலைஞர்களின் தாழ்வு மனப்பான்மையையும் பயத்தையுமே தங்கள் தொழிலுக்கு 'முதலாக' வைத்துப் பிழைக்கிறார்கள். அந்த ஏழைக் கலைஞர்களுக்கு இரண்டு பக்கம் ஒதுக்கிய கல்கிக்கு நன்றி.

தஞ்சாவூர் — 1, இரா. ஆதி நாராயணன்.

* இலவச இணைப்புகளை மிகவும் உபயோகமுள்ளதாகத் தரும் ஒரே இதழ் கல்கிதான்!

வேப்பங்காடு, பி. சீதாலக்ஷ்மி.

* தமிழ்ப் புத்தாண்டு டி.வி. கவியரங்கில் கவிஞர்கள் கலைஞருக்கு அளித்த ஐஸ் கிரீம் வகைகளில் 'பீச் மெல்பா' இது:

''உனக்குக்
கவிதையின் இலக்கணங்கள்
தெரியாது என்றாய்.
நாங்கள் வாய்க்கால்கள்;
கரைகளை அமைத்துக் கொண்டு,
அவற்றிடையே ஓடுகிறோம்.
நீயோ கடல்.
உனக்கேன் கரை?''

சிட்லபாக்கம், அ. சண்முக சுந்தரம்.

மொட்டை மாடியில் தோட்டம் போட...

மொட்டை மாடியில் தோட்டம் போடுவது பற்றி ராவ் என்பவர் 'வேலும் வாழ்வும்' நிகழ்ச்சியில் அளித்த பேட்டி சுவாரசியமாக இருந்தது. "கத்தரிக்காய் — புடலையிலிருந்து, ரோஜா — மல்லிகை போன்ற மலர்ச் செடிகள் வரை எல்லாவற்றையும் வளர்க்க முடியும்" என்று சொல்லி வழிமுறைகளையும் விளக்கினார்.

பேச்சில், முகத்தில், டீவி பார்ப்பவரையும் தொற்றிக் கொள்ளும் உற்சாகம். கபடமில்லாத சிரிப்பு. சின்னத் திரையில் பார்த்த அவருடைய சிங்காரத் தோட்டம் ஒரு சோலைக்குள் இருக்கும் மாயாஜாலத் தோற்றத்தை உண்டு பண்ணியது.


'ஆகா! நாமும் நமது வீட்டு மொட்டை மாடியில் இப்படியொரு தோட்டம் அமைத்தால் என்ன?' என்கிற ஆர்வம் கலந்த யோசனை எழும்போதே, அவரிடமிருந்து ஒரு எச்சரிக்கையும் வந்தது.

எல்லா மொட்டை மாடிகளிலும் இப்படியொரு தோட்டம் போடுவது உசிதமல்லவாம். வீடு கட்டும்போதே திட்டமிட்டு, அதற்கேற்ற வகையிலான அஸ்திவாரம் போட்டு, எடையைத் தாங்கும் வண்ணம் பக்க 'பீம்'களை அமைத்துக் கட்ட வேண்டுமாம். அப்போதுதான் மாடித் தோட்டத்தின் கனத்தைக் கட்டடம் தாங்குமாம்!

பொதுவாக, பெரும்பாலான டீ.வி. பேட்டிகளில் ஒரு சகஜ பாவமே இருப்பதில்லை. காண்பவர், அளிப்பவர் இருவரிடமுமே ஓர் இறுக்கம் நிறைந்திருக்கும். அது மட்டுமல்ல. பேட்டியென்று வந்து விட்டாலே மிகத் தூய்மையான — இலக்கணத் தமிழைப் பயன்படுத்தித்தான் ஆக வேண்டும் என்று வேறு நினைத்துக் கொண்டு விடுகிறார்கள். அதன் காரணமாகவே வார்த்தைகளைத் தேடித் தவித்துத் திண்டாடி ஒரு செயற்கைத்தனம் தோன்றி விடுகிறது. இதற்கு முற்றிலும் மாறாக அமைந்திருந்தது மொட்டை மாடித் தோட்டம் பேட்டி.

சர்வ சாதாரணமாக, எளிய பேச்சுத் தமிழில், ராவுடைய உரையாடல் அமைந்திருந்ததுதான் இந்தப் பேட்டி உள்ளத்தைக் கவர்ந்ததற்கு முக்கிய காரணம்.

இந்துமதியின் 'சக்தி—90' முடிவடைந்து விட்டது. முதல் பன்னிரண்டு வாரங்கள் ஒரே சீராகச் சென்ற தொடர், கடைசி வாரத்தில் நிகழ்ச்சிகள் மிதமாகிப் போய், அவற்றை ஒரேயடியாகத் திணிக்க



• மொ. மா. தோ.

முயன்று சட்சட்டென்று ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குத் தாவியதைப் போலிருந்தது. சரியாகத் திட்டமிடவில்லையோ? எனினும் கதையோட்டத்தைக் குழப்பமில்லாமல் கொண்டு சென்றது பாராட்டுக்குரிய விஷயம்.

ஆசியாவைச் சேர்ந்த புகழ்பெற்ற மூன்று பேரை 'தி வேர்ல்ட் திஸ் வீக்' நிகழ்ச்சியில் பேட்டி கண்டார்கள். அவர்களில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியவர் ஃபிர்தாஸ் கங்கா. 'Trying to grow' என்கிற அவருடைய முதல் நாவலே அவருக்கு வெற்றிப் படிக்கட்டாக அமைந்து விட்டது. கிட்டத்தட்ட ஒரு சுயசரிதம் போன்ற நாவல்.

சுமார் நாலடி உயரமே உள்ள கங்கா சக்கர நாற்காலியில் வாழ்க்கை நடத்துகிற



• ஃபிர்தாஸ் கங்கா



• இந்துமதி

வர். காரணம், பிறவியிலேயே அவருக்கு 'பிரிட்டில்போன்ஸ்' என்கிற நோய். எழுந்து நின்றால், நடக்க முயற்சி செய்தால் உடலின் கனத்தைத் தாங்க முடியாமல் அவருடைய எலும்புகள் முறிந்து விடும்.

விதியின் இந்த மகத்தான சோதனையைத் துணிச்சலுடன் எதிர்நோக்கி, கல்வியறிவை வளர்த்துக் கொண்டு, எழுத்தார்வத்தைப் பெருக்கிக் கொண்டு, ஏறக்குறைய தன்னையே கதாபாத்திரமாக்கி ஒரு நாவலைப் படைத்து அதில் வெற்றியும் பெற்று விட்டார்.

அவருடைய இந்தத் தன்னம்பிக்கை பேட்டியின் போது பளிச்சென்று வெளிப்பட்டது. பாராட்ட வேண்டிய தனிமனிதச் சாதனை இது.



ஒரு கல்லூரியின் பேராசிரியர், (குறைந்தபட்சம் மாதம் ஐயாயிரம் ரூபாய் ஊதியமாகப் பெறுபவர்) தமது மாத வருமானம் ரூ.1000/—க்கும் குறைவு எனக் கூறி, அரசாங்கம் வழங்கும் இலவச அரிசியைப் பெற்று வந்துள்ளாராம்! இந்தத் தகவலை திருச்சி மாவட்ட கலெக்டர் தீனதயாளன் பத்திரிகையாளர்களிடம் கூறியுள்ளார். இந்த நாடு உருப்படுமா?

— வெள்ளகால். இரா. கந்தையா.



ஜோக் எழுத்தாளர்: எதையோ படிச்சுட்டுச் சிரிக்க ஆரம்பிச்சே... பாதியிலேயே சீரியஸாயிட்டியே... ஏன், கமலா...?

மனைவி: ஒரு ஜோக்கைப் படிச்சேன். இலேசாச் சிரிப்பு வந்தது. அடியில் உங்க பெயரைப் பார்த்ததும் கடுப்பாயிடுச்சு...!?

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா.

"ராஜினாமா செஞ்ச வேகத்திலேயே 'வாபஸ்' வாங்கிட்டீங்களே! ஏன்...?"

"'ராஜினாமா'வை ஏத்துக்குவாங்களோன்னு பயம் வந்திருச்சுங்க...!"

— ஆர். அப்துல் சலாம்.





கணவன்: "கண்ணே! நாம் முதல் முதல் எங்கே சந்திச்சோம், நினைவிருக்கா?"

மனைவி: "நானும் அதை மறக்கத்தான் எவ்வளவோ முயற்சி பண்றேன். ஆனால் முடியலையே!"

— சம்பத் குமாரி.

"சார்! நான் உங்க சொந்த தொகுதியிலிருந்து வந்திருக்கேன்!"

"எதுக்கு சுற்றி வளைக்கப் பேசறே எந்தத் தொகுதின்னு சொல்லேன்...!"

— மணியன் தர்மலிங்கம்.





இருவருக்கும் திருமணம் நடந்து முப்பத்தெட்டு ஆண்டுகள் ஆகின்றன. இன்றும் அந்தப் பெண் தம் கணவரை அன்போடு ''DT'' என்றுதான் அழைக்கிறார். கணவரோ அந்தப் பெண்ணை, ''Lovely'' என்று அழைக்கிறார்!

அந்தப் பெண், இங்கிலாந்தின் பிரதம மந்திரி மார்கரெட் தாட்சர். அவரது கணவர், டென்னிஸ் தாட்சர்.

டென்னிஸ் தாட்சர் முன்னாள் கடற்படைத் தளபதி. இன்னும் அதே நினைப்பு. ராணுவ வீரர் போல உடை அணிகிறார். எப்பொழுது பார்த்தாலும் புகைபிடிக்கிறார். ஏதாவது ஒரு 'பாரில்' உட்கார்ந்து கொண்டு — அதுவும் கோல்ஃப் விளையாட்டுச் சங்க 'பாராக' இருந்தால் இன்னும் மகிழ்ச்சி — ஜாலியாக மதுவருந்துவதில் அவருக்குக் கொள்ளை ஆசை. எல்லோரிடமும் தாராளமாகப் பழகுவார். கொஞ்சம் சாப்பாட்டுப் பிரியரும்கூட!

இதற்கு நேர்மாறானவர், மார்கரெட். கணவர் புகைபிடிப்பது அறவே இவருக்குப் பிடிக்காது. டென்னிஸ் சமையலறையில் எப்போதாவது புகைத்தால் போதும். மார்கரெட்டால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. ஒரு செய்தித்தாளை எடுத்துப் புகையை விசிறி ஓட்டிக் கொண்டே இருப்பார். ''நீங்கள் சுருட்டுக்கும் கண்டதற்கும் செலவழிக்கும் தொகையைக் கணக்கே போட முடியாது. அவ்வளவு இருக்கும்'' — என்பார் மார்கரெட்.

''நீ வாங்குகிற துப்பறியும் கதைப் புத்தகங்களுக்குச் செலவாகிறதைவிட நான் குறைவாகத்தான் செலவு செய்கிறேன்!'' என்பார் டென்னிஸ்.

கடந்த நாற்பது ஆண்டுகளாகக் கணவன் — மனைவியாக வீட்டில் ஒற்றுமையாக வாழ்ந்து வரும் தாட்சர் தம்பதி வெளியில் போனால் ஒன்றாகப் போவது கிடையாது. இருவரும் விலகி இருக்க இருக்கத்தான் அன்பு அதிகமாகிறது.

டென்னிஸ் தாட்சர் ஏற்கெனவே ஒரு பெண்ணை மணந்து கொண்டு, நான்கு ஆண்டு காலத்திலேயே விவாகரத்து செய்து கொண்டவர். மார்கரெட் அவருக்கு இரண்டாவது மனைவி. பெரிய நாடுகளில் கிளைகள் உள்ள பல நிறுவனங்களின் ஆலோசகராக டென்னிஸ் இருக்கிறார்.

தம்மை மணந்து கொண்டதால் டென்னிஸ் எதைத் தியாகம் செய்ய நேர்ந்தது என்பது மார்கரெட்டுக்குத் தெரியும். அவர் விலை மதிப்பற்றவர் என்பது நன்றாகவே அந்த அம்மையாருக்குத் தெரியும்.

தாட்சர் தம்பதிகளுக்கு இடையில் விசுவாசம்தான் முதலிடம் வகிக்கிறது. ஒருவரிடம் ஒருவர் அன்பு காட்டிக் கொள்வது மட்டுமின்றி, சிறந்த நண்பர்களாகவும் அவர்கள் இருந்து வருகிறார்கள். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்வதால், தாட்சர் தம்பதியின் உறவு தேம்ஸ் நதிபோல் வற்றாமலிருந்து வருகிறது.

— சண்டே மெயிலிலிருந்து

தகவல்: **சேலம் சக்திக்கொடி**

டெலிபோன் டைரக்டரியில் வந்த தவறு!



மார்ச் மாதம் 26 ஆம் தேதி சென்னை மாநகரில் புதிய டெலிபோன் டைரக்டரி வெளிவந்தது. அத்தியாவசியமான நம்பர்கள் என்ற வரிசையில் புதிய டைரக்டரியின் ஆறாம் பக்கத்தில் உள்ள எழும்பூர் ரெயில்வே நிலையத் தொலைபேசி எண்கள் பழைய எண்களாகவே உள்ளன. புதிய டைரக்டரியில் பழைய எண்கள் ஏன் இடம் பெற்றன? என்ற கேள்விக்கு, சென்னைத் தொலைபேசியின் பொது மேலாளர் விஸ்வநாதன் கூறுகிறார்:

''சில சமயங்களில் எங்களையும் மீறி இம்மாதிரி தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. எழும்பூரின் தொலைபேசி எண்கள் மாறிய தேதி 23.12.1989. சென்னைத் தொலைபேசியில் புதிய டைரக்டரியில் இடம்பெறும் எண்கள் டிசம்பர் மாதம் 15 ஆம் தேதிக்குள் மாற்றப்பட்டிருந்தால் மட்டுமே சேர்த்துக் கொள்ள முடியும் என்பதைத் தெளிவாக டைரக்டரியின் முகப்பிலேயே கொடுத்துள்ளோம். இந்த நிலையில் எப்படி புதிய டைரக்டரியில் எழும்பூரின் புதிய எண்கள் இடம் பெறும்?

''இருந்தாலும் கூட இப்படி ஒரு பதிலை நான் கூற விரும்பவில்லை. ஏனென்றால் அப்படிக் கூறி பொறுப்புகளைத் தட்டிக் கழிக்கும் எண்ணம் தொலைபேசி இலாகாவிற்கே கிடையாது. 'எழும்பூர் எண்களில் மாற்றம் ஏற்படப் போகிறது என்பது பத்து நாளைக்கு முன்பு கூடவா உங்களுக்குத் தெரியாது?' என்ற கேள்வியை நீங்கள் கேட்கலாம். தெரியும். அதனால் தான் எங்களால் முடிந்த அளவுக்கு எண்களையும், பெயர்களையும் சரியாகப் போட முயற்சி செய்து வருகிறோம். நீங்கள் குறிப்பிடும் எழும்பூர் ஸ்டேஷன் தொலைபேசி எண் இதே புதுத் தொலைபேசி டைரக்டரியில் சரியாக ஓரிடத்தில் வந்துள்ளது. மத்திய அரசின் ரயில்வேஸ் என்ற பிரிவின் கீழ் 640 ஆம் பக்கத்தில் இது இடம்பெற்றுள்ளது. 'அதைச் சரிசெய்த உங்களுக்கு ஆறாம் பக்கத்தில் உள்ள எண்களை மட்டும் எப்படிச் சரிசெய்ய முடியாமல் போய் விட்டது?' என்று நீங்கள் மீண்டும் கேட்கலாம்.

''எங்கு தவறு ஏற்பட்டது என்பதையும் கவனித்தோம். மிக முக்கியமான எண்கள் என்ற வரிசையில் உள்ளவை எல்லாம் கையால் அச்சுக் கோக்கப்படுகின்றன ஆனால், பின்னால் உள்ள எண்கள் எல்லாமே கம்ப்யூட்டர் முறையில் அச்சுக் கோக்கப்படுகின்றன. இதனால், கம்ப்யூட்டரில் ஒரு முறை சரிசெய்து, மாற்று நம்பர்களைச் சரியாகக் கொடுக்கும்படி உத்தரவிட்டு விட்டால் கம்ப்யூட்டர் சரியாகச் செய்து விடும். கையால் அச்சுக் கோப்பதில் மட்டும்தான் கோட்டை விட்டு விட்டார்கள். இதில் கூட 'தொலைபேசி எண்கள் மாறியிருந்தால் தெரிவிக்கவும்' என்று கேட்டுக் கொண்ட பொழுது ரயில்வே நிலையத்தார் மாறிய புது நம்பரைக் கொடுக்கவில்லை. ஆக, எல்லோரும் சேர்ந்து இந்தத் தவறுக்குப் பொறுப்பேற்க வேண்டிய நிலையில்தான் இருக்கிறோம். எழும்பூர் ரயில் நிலையத்தின் தொலைபேசி எண் 8251565. தவறைசுட்டிக் காட்டிய உங்களுக்கு எங்களது நன்றி.''

— **நிகிலா ராஜா**

பரதன் அச்சகத்தில அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ 350/-.





சர்வம் சக்திமயம்

ஒரு நாள் விநாயகப் பெருமான் ஒரு பூனையோடு விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது அவருடைய கை நகம் பூனையின் முகத்தில் பட்டு ஒரு சிறிய கீறலை உண்டாக்கியது.

சிறிது நேரத்திற்குப் பிறகு விநாயகர் வீட்டுக்கு வந்தார். அப்போது தமது தாயாகிய பார்வதி தேவியின் கன்னத்தில் விரலால் கீறிய அடையாளம் ஒன்று இருப்பதைப் பார்த்தார். அதைப் பார்த்ததும் 'உலகின் தாயாகிய அம்பிகைக்கு முகத்தில் கீறல் உண்டாக்கி ஊறு விளைவிக்கக் கூடியவர் யாராக இருக்கக்கூடும்? என்ற வியப்பு அவருக்கு ஏற்பட்டது. ஆகவே அவர், ''தாயே! உன் கன்னத்தில் இந்த வடு எப்படி ஏற்பட்டது?'' என்று கேட்டார்.

ஜகன்மாதா பதில் சொன்னாள்: ''குழந்தாய்! இது நீ செய்த காரியம்தான். உன் கை நகத்தின் கீறலால் ஏற்பட்ட வடுதான் இது.''

தேவியின் பதிலைக் கேட்ட விநாயகப் பெருமான் திடுக்கிட்டுப் போனார். வியப்பு மேலிட அவர், ''எப்படியம்மா! உன்னை நான் ஒரு போதும் கீறியதாக எனக்கு நினைவு இல்லையே?'' என்று கேட்டார்.

''குழந்தாய்! இன்று காலையில் நீ ஒரு பூனையைக் கீறியதை மறந்து விட்டாயா?''

''குழந்தாய்! இந்த உலகில் என்னைத் தவிர ஒன்றுமே கிடையாது. உலகில் உள்ள எல்லா உயிர்களிலும் நான் இருக்கிறேன். நானே உலகமாக ஆகியிருக்கிறேன். எல்லா உயிர்களாகவு பொருள்களாகவும் சகல சிருஷ்டியாகவும் நாமே விளங்குகிறேன். ஆகவே நீ யாரைத் துன்புறுத்தினலும் உண்மையில் அது என்னைத் துன்புறுத்துவதாகவே அமையும்.''

பார்வதி தேவியின் பதிலைக் கேட்டதும் விநாயகப் பெருமானுக்குச் சொல்ல முடியாத ஆச்சரியம் ஏற்பட்டது. அதோடு தாம் ஒருவரையும் திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை என்று உறுதியாக முடிவு செய்தார். ஏனென்றால் அவர் யாரைத் திருமணம் செய்து கொள்ள முடியும்? ஒவ்வொரு பெண்ணும் அவருடைய தாயே அல்லவா? இந்தப் பெரிய உண்மையை மனத்தில் கொண்ட விநாயகப் பெருமான் யாரையுமே திருமணம் செய்து கொள்ளவில்லை.

இந்தக் கதையைச் சொல்லி விட்டு ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்னார்:— ''நானும் விநாயகரைப் போலவே இருக்கிறேன்; ஒவ்வொரு பெண்ணும் சாட்சாத் ஜகன்மாதாவாகிய தேவியாக இருப்பதை நான் பார்க்கிறேன்.

இறைவன் வழங்கிய தீர்ப்பு

இரண்டு நபர்கள் ஒரு தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது ஓர் இடத்தில் பாகவதப் படனம் நடந்து கொண்டிருந்தது. ஒருவர் பாகவதம் படித்து விரிவுரை சொல்லிக் கொண்டிருந்தார். அவரைச் சுற்றிலும் மக்கள்

ஒரு கிராமவாசி. பாவம், அப்போதுதான் சென்னைக்கு வருகிறார். ரோடுக்கு 'அந்தாண்டை' இருக்கும் கடைக்குப் போக வேண்டும். ரொம்ப அவசரம் அவசரமாகச் சாலையைக் கடக்கிறார். நடுவில் ஒரு கோடு மஞ்சளாக இழுக்கப்பட்டிருக்கே, அது என்னத்துக்காக, அதைத் தாண்டும் போது என்னென்ன விபரீதம் ஏற்படும் என்பதைப் பற்றியெல்லாம் தெரியாது! டபாரென்று தாண்டுகிறார். அங்கே ஓரமாகக் கழுகு போல் பார்த்துக் கொண்டு நிற்கும் போக்குவரத்துத் துறை அதிகாரி 'கபக்'கென்று பிடித்து விடுகிறார்.

''ஐயையோ என்னத்துக்கு என்னைப் பிடிச்சீங்க...?''

''ஏன், யெல்லோ லைனைக் கிராஸ் பண்ணே? இங்கே ஃபெடஸ்ட்ரியன் க்ராஸிங்'கே கிடையாதே. பிஸி ஏரியாவிலே இவ்வளவு வண்டிங்க போய்க்கிட்டே இருக்கே. கண்ணுத் தெரியலே உனக்கு? சட்டப்படி நீ செஞ்சது தப்பு...''

''ஐயா, ஐயா... எனக்குச் சட்டத்தைப் பற்றியெல்லாம் ஒண்ணும் தெரியாதுய்யா! என்னை வுட்ருங்கய்யா....!''

''சரிதான். ஒவ்வொர்த்தனையும் இப்படியே விட்டுக்கிட்டே இருந்தா அவ்வளவுதான்... ம்...'' என்று நோட்டை விரித்து ''உன் பேரு...'' என்று கேஸ் புக் செய்ய ஆரம்பிக்கிறார்.

இங்கே ஒரு நிமிஷம்... எனக்குச் சட்டத்தைப் பற்றித் தெரியாதய்யா... என்று சொல்வதால் நாம் தப்பித்துக் கொண்டு விட முடியாது. சட்டத்தைப் பற்றிய அறியாமையின் காரணமாக, அதன் தண்டனையில் இருந்து நாம் தப்பி விட முடியாது.

எனவே, ஒவ்வொருவரும் வாழ்க்கைக்குத் தேவையான சில சட்டங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகிறது. அப்படி அறிந்து கொள்ளும் போதுதான் சட்டம் உருவாகியிருப்பது நம்மைக் கஷ்டப்படுத்த அல்ல; நமக்கு உதவத்தான் என்பதும் புரியும்.

சிவில், கிரிமினல்

இந்த இரண்டு வார்த்தைகளை நீங்கள் அடிக்கடி படித்திருப்பீர்கள். சட்டங்களை இப்படி இரண்டு பெரும் பிரிவாகப் பிரித்திருக்கிறார்கள்.

சொத்துத் தகராறு. அண்ணன், தம்பிகளுக்குள் பாகப்பிரிவினை பற்றிய தகராறு...

வீடு, மனை வாங்கும் போது ஏற்படும் பிரச்னைகள், கடன் வாங்கியவன் ஏமாற்றி விடும் போது..., குடும்பப் பிரச்னைகள், போக்குவரத்தில் செய்யும் தவறுகள்... இதுபோன்ற வழக்குகள் வரும் போது அவற்றை விசாரிக்கும் சட்டம் சிவில் சட்டம்.

இதற்கென்று கோர்ட் தனியாக இயங்குகிறது.

கொலை வழக்குகள், ஏமாற்றுதல், பணம்

அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

தெருவில் நடந்து கொண்டிருந்த இரண்டு நண்பர்களும் பாகவதம் நடப்பதைக் கவனித்தனர். அப்போது ஒருவன் மற்றொருவனைப் பார்த்து, ''நண்பா! வா, நாம் இருவரும் சேர்ந்து அங்கே நடக்கும் பாகவதத்தைக் கேட்கலாம்'' என்று சொன்னான். ஆனால், அப்படிச் சொன்னதை அவனுடைய நண்பன் கேட்கவில்லை. ''பாகவதத்தைக் கேட்பதால் என்னப்பா லாபம் வரப் போகிறது? நேராக என்னுடன் வா. நாம் இருவரும் சேர்ந்து தாசி வீட்டுக்குப் போகலாம். அங்கே அவள் வீட்டில் நமது பொழுது மிக இன்பமாகக் கழியும்'' என்று சொல்லி, நண்பனையும் தன்னுடன் வரும்படி அழைத்தான்!



ஆனால், முதலாமவனுக்குப் பாகவதம் கேட்பதை விட்டுத் தாசி வீடு செல்ல மனம் இல்லை. ஆகையால், தன் நண்பனிடம் வர முடியாது என்று சொல்லி விட்டான். பிறகு பாகவதம் கேட்டுக் கொண்டிருந்த கூட்டத்தில் தானும் ஒருவனாகச் சென்று உட்கார்ந்து கொண்டான். இரண்டாமவன் பாகவதம் நடப்பதை எட்டிப் பார்த்து விட்டுத் தாசி வீடு போய்ச் சேர்ந்தான்.

தாசி வீட்டுக்குப் போனாலும், விரைவில் அவனுக்கு அந்த இடத்தின் மீதே அருவருப்பு ஏற்பட்டது. அவனுக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை. அடடா! எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டேன். என் நண்பன் அங்கே பகவானின் புகழைக் கேட்டு மகிழ்ந்து கொண்டிருக்கிறான். பகவான் நினைவில் தோய்ந்து போய் இருக்கிறான். நானோ போயும் போயும் இங்கு வந்து சேர்ந்தேனே! என்ன வெட்கக்கேடு! என்று நினைத்து உளமாற வருந்தி வெளியேறினான். அவனது உடல் தாசி வீட்டில் இருந்தாலும் உள்ளம் பகவானையே வலம் வந்து கொண்டிருந்தது. பாகவதப் படலமே அவனது முழு உள்ளத்தையும் ஆக்கிரமித்திருந்தது.

ஆனால், அங்கே பாகவதம் கேட்க உட்கார்ந்தவனுக்கும் சிறிது நேரத்திற்குப் பிறகு இருப்புக்



கொள்ளவில்லை. பாகவதச் சொற்பொழிவு சிறிது நேரத்திற்குள்ளாக அவனுக்குக் கசந்து அலுத்துப் போய் விட்டது! அவனும் தனக்குள்ளாக, நான் செய்தது முட்டாள்தனம். இங்கே யாரோ ஒருவன் எதையோ கதையளந்து கொண்டிருக்கிறான்; இவன் ஏதோ சொல்கிறான் என்று நான் இங்கே வந்து உட்கார்ந்தேனே! ஆகா! என் நண்பன் இப்போது எவ்வளவு மகிழ்ச்சியாகத் தாசி வீட்டில் இருப்பான்! அவன் புத்திசாலி. நானும் அவனோடு தாசி வீட்டுக்குப் போயிருந்தால் இந் நேரம் இன்பமாக இருந்திருப்பேன்' என்று சொல்லிக் கொண்டான். அவன் உடல் பாகவதம் நடைபெற்ற இடத்தில் இருந்தது: ஆனால் உள்ளமோ தாசி வீட்டையே சுற்றிச் சுற்றி வட்டமடித்தது.

காலகதியில் அவர்கள் இருவரும் மரணம் அடைந்தார்கள்.

பாகவதம் நடந்த இடத்தில் உட்கார்ந்து இருந்தவனின் உயிரைக் கொண்டு போவதற்கு யமதூதர் வந்தனர். அதை நரகத்திற்கு இழுத்துச் சென்றார்கள்.

தாசி வீடு சென்றவனின் உயிரைக் கொண்டு போவதற்குப் பகவானுடைய தூதுவர் வந்தனர். அதை உபசாரங்களுடன் விஷ்ணு லோகத்திற்கு அழைத்துப் போனார்கள்.

நல்ல சூழ்நிலையில் இருப்பவர்கள் நல்லவர்களாக விளங்குவது எளிது. அதைக் கூடச் சிலர் நிறைவேற்ற மாட்டார்கள். மோசமான சூழலில் தூய்மையாக இருப்பது கஷ்டம். அதில் மன வைராக்கியம் உள்ளவர்கள் வெற்றி பெறுவார்கள். இறையுணர்வு இதற்கு உதவும்.

உலகில் வாழும் முறை

இடைப் பையன்கள் சிலர் புல்வெளிக் மாடுகளை ஓட்டிச் சென்று மேய்ப்பது வழக்கம்

அந்தப் புல்வெளிப் பகுதியிலே ஒரு பாம் வசித்தது. அந்த வழியாக யார் போனாலும் அது அவர்களைக் கடித்து வந்தது. அதனால் பயந்து போன மக்கள் அந்த வழியாகப் போகாமல் எச்சரிக்கையாக இருந்தார்கள்

ஒரு நாள் ஒரு பிரம்மசாரி அதே புல்வெளி வழியாகப் போய்க் கொண்டிருந்தார். இதை பார்த்த இடைப் பையன்கள் அவரை நோக்கி ஓடிச் சென்று "சுவாமி, அந்தப் பக்கம் போக வேண்டாம். ஒரு கொடிய விஷப் பாம்பு அங்கே வசிக்கிறது" என்று சொன்னார்கள்.

பையன்கள் சொன்னதைக் கேட்டுப் பிரம்மசாரிக்குப் பயம் ஏற்படவில்லை. அந்தப் பையன்களிடம், "குழந்தைகளே, பாம்பு இருந்தால் என்ன? எனக்கு ஒன்றும் பாம்பு பயம் கிடையாது எனக்குச் சில மந்திரங்கள் தெரியும்" என்று சொல்லி விட்டுப் பாம்பு இருந்த வழியாகவே அவர் நடந்து போனார்.

பையன்கள் பயந்தார்கள். 'ஆபத்தை இவராக விலைகொடுத்து வாங்கிக் கொள்கிறாரே' என்று நினைத்து, அவருடன் போகாமல் தூரத்திலேயே நின்று விட்டார்கள்.

கையாடல், கற்பழிப்பு, தேசத் துரோகக் குற்றங்கள்...

இவையெல்லாம் கிரிமினல் வகையைச் சேர்ந்தவை. இவற்றை ஆரம்ப நிலையில் மாஜிஸ்திரேட் கோர்ட்டுகளிலும் பிறகு செஷன்ஸ் கோர்ட்டுகளிலும் விசாரிப்பார்கள். பிறகு உயர் நீதிமன்றம், மேலே உச்சநீதி மன்றம்.

சிவில், கிரிமினல் இரண்டு வழக்குகளிலும் ரொம்ப முக்கியமான வித்தியாசம் ஒன்று இருக்கிறது:

சிவில் வழக்கை நானும், நீங்களும் கூடத் தொடரலாம். "எனக்கு இவரோட நிலத்தை விக்கிறேன்னு அட்வான்ஸ் கூட வாங்கிட்டார். ஆனா அதுக்குன்னு போட்ட ஒப்பந்தக் கெடு ஆறு மாதமும் முடிந்து போயாச்சு. இன்னமும் போட்ட கான்ட்ராக்ட் படி நிலத்தை விற்கவில்லை..." என்று ஏமாற்றமடைந்த யாரும் ஏமாற்றியவர் மீது சிவில் வழக்குப் போடலாம்.

ஆனால் கிரிமினல் வழக்குகளில் தனிப்பட்ட ஒருவர், மற்றொருவரின் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க முடியாது.

கிரிமினல் சம்பந்தப்பட்ட எந்தக் குற்றமானாலும் நாம் காவல் துறையில் போய்த்தான் புகார் கொடுக்க வேண்டும். அந்தந்த வட்டாரத்தைச் சேர்ந்த காவல் துறையினர் **F.I.R.** (முதல் தகவல் அறிக்கை), பதிவு செய்து கொண்டு வழக்கைத் தொடுப்பார்கள்.

ஆகவே அரசாங்கத்தின் சார்பாக, தவறு செய்த அல்லது தவறு செய்ததாகக் கூறப்பட்ட ஒருவரின் மேல் காவல்துறை வழக்குத் தொடுப்பதுதான் கிரிமினல் வழக்கு.

கிரிமினல் வழக்குப் போட்ட பிறகு புகார் கொடுத்த ஆளே கூட வாபஸ் வாங்க முடியாது. 'ஐயோ பாவம், அவனை விட்டுடு'ங்க என்று சொல்ல முடியாது. ஒன்று, அந்தக் குற்றத்தைக் காவல்துறை வாபஸ் வாங்க வேண்டும் அல்லது நிரூபிக்க வேண்டும்.

கிரிமினல் குற்றச்சாட்டின் அடிப்படையே, 'குற்றம் செய்தவன் குற்றம் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டுச் செய்திருக்கிறான்' என்பதை நிரூபிப்பது. ஒரு கொலை திட்டமிட்டே **(pre-medit ated murder)** செய்யப்பட்டது என காவல் துறை நிரூபித்தால்தான் குற்றம் சாட்டப்பட்டவனுக்குத் தண்டனை கிடைக்கும். 'இது தற்காப்புக்காக நடந்துவிட்ட தவறு' எனக் குற்றவாளி நிரூபித்து விட்டால் அவனை ஒன்றும் செய்ய முடியாது.

கையெழுத்துப் போடுன்னா, போடு!

சினிமாவில் வில்லன் மனைவியை அடித்துத் துன்புறுத்துவான். "நான் இரண்டாம் கல்யாணம் பண்ணிக்கப் போறேன். அதனால நீ எனக்கு விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடு — 'என்னோட முழு மனச் சம்மதத்தோடதான் என்



பிரம்மசாரி மேலே மேலே தமது வழியே பாய்க் கொண்டிருந்தார்.

பாம்பு அவரைப் பார்த்ததும் சீறிக் கொண்டு டி வந்தது. படத்தை உயர்த்திக் கொண்டு வேக வகமாக ஓடி வரும் பாம்பைப் பிரம்மசாரியும் பார்த்தார். பாம்பைப் பார்த்துக் கொண்டே அவர் ஒரு மந்திரத்தைச் சொன்னார். உடனே அந்த மந்திரத்தின் மகிமை காரணமாகப் பாம் க்கு இருந்த கொடிய குணம் முழுவதும் போய் பிட்டது. பாம்பு ஒரு மண் புழுவைப் போல அவரது காலடியில் படுத்துக் கொண்டது.

அப்போது பிரம்மசாரி அன்பும் கருணையும் பொங்கப் பாம்பைப் பார்த்துச் சொன்னார். இதோ நான் சொல்வதைக் கேள். நீ ஏன் அனை வருக்கும் தீமை செய்கிறாய்?'. நான் உனக்கு ஒரு மந்திரத்தை உபதேசம் செய்கிறேன். அதை நீ ஜபித்து வந்தால் கடவுள் மீது உனக்குப் பக்தி ஏற்படும். அதன் மூலம் உன்னிடம் உள்ள தீய குணங்களும் உன்னை விட்டு விலகிப் போய் விடும். முடிவில் பகவானுடைய தரிசனம் உனக் குக் கிடைக்கும்.''

பிரம்மசாரி இப்படிச் சொல்லி விட்டு, ஞான வாழ்க்கைக்கு உரிய ஒரு மந்திரத்தைப் பாம்புக்கு உபதேசம் செய்தார்.

பாம்பும் குருவைப் பக்தியுடன் பணிந்து, ''சுவாமி நான் எப்படி ஞானசாதனம் பழக வேண் டும்?'' என்று கேட்டது.

அதற்குக் குரு, ''நான் கொடுத்த மந்திரத்தை எப்போதும் ஜபித்துக் கொண்டிரு. இனிமேல் யார் ஒருவருக்கும் நீ தீங்கு செய்யாதே'' என்று சொன்னார்.

அவர் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாகப் பாம்பு தலையை அசைத்தது.

பிரியும் சமயத்தில் பாம்பிடம், ''நான் உன்னை மீண்டும் சந்திக்கிறேன்'' என்று சொல்லி விட்டுச் சென்றார் பிரம்மசாரி.

அவர் போன பிறகு பாம்பு தன் புற்றில் நுழைந் தது. அந்த நிமிடம் முதல் யாருக்கும் தீங்கு செய்யாமலும், செய்ய நினைக்காமலும் அந்தப் பாம்பு வாழ்ந்து வந்தது.

இவ்விதம் சில தினங்கள் கழிந்தன. பாம்பு இப்போதெல்லாம் ஒருவரையும் கடிப்பதில்லை என்பதை இடைப்பையன்கள் கவனித்து விட்டார் கள். பாம்புக்கு இருந்த விஷம் எல்லாம் போய் விட்டது என்று முடிவு செய்தார்கள்.



பாம்பின் உள்ளத்தில் குருவின் உபதேசம் மிகப் பெரிய மாற்றத்தை உண்டுபண்ணி இருந்தது. ஆனால் அதை இடைப்பையன்கள் உணரவில்லை. பாம்பிடம் அவர்களுக்கு இருந்து வந்த அச்சம் போய் விட்டது. ஆகையால் பையன்கள் பாம்பைப் பலவிதமான துன்பங்களுக்கு உட்படுத்தினர். அதன் மீது அவர்கள் கற்களை வீசினார்கள். ஆனால் சாதுவாகி விட்ட அந்தப் பாம்போ அவர்கள் மீது கோபம் கொள்ளவில்லை; அவர்களைக் கடித்துத் துன்புறுத்தவும் இல்லை. பையன்கள் விளைத்த எல்லாத் துன்பங்களையும் பொறுமையாகப் பாம்பு ஏற்றுக் கொண்டது.

ஒரு நாள் இடைப் பையன்களில் ஒருவன் பாம்பின் அருகில் சென்று, அதன் வாலைப் பிடித்து மேலே தூக்கினான்! பிறகு அதைப் பிடித்துக் கொண்டு 'கிடுகிடு' வென்று பலமுறை சுழற்றித் தரை மீது திரும்பத் திரும்ப அறைந்து விட்டு ஒரு பக்கமாக வீசினான். பாம்பு இரத்தம் கக்கியது; மூர்ச்சை அடைந்து விட்டது. இதைப் பார்த்த பையன்கள் பாம்பு இறந்து விட்டது என்று நினைத்துக் கொண்டு தங்கள் வழியே போய் விட்டார்கள்.

இரவு நெடுநேரம் கழிந்த பிறகு, பாம்புக்கு மெல்ல மெல்ல உணர்ச்சி வந்தது.

பலமான அடி காரணமாகப் பாம்புக்கு உடம்பெல்லாம் வலித்தது. உடல் முழுவதும் அதற்குப் புண். எப்படியோ ஒருவிதமாக மெதுவாகவும் மிக மிகச் சிரமப்பட்டும் ஊர்ந்து ஊர்ந்து அது தன் வளைக்குள் சென்றது. அதன் எலும்புகள் நொறுங்கிப் போயிருந்தன. நகரவும் அதற்கு சக்தி இல்லை. இப்படியே பல காலம் சென்றது. எலும்பும் தோலுமாகப் பாம்பின் உருவமே மாறி விட்டது! எப்போதாவது இரை தேடுவதற்காக மட்டும் இரவு நேரங்களில் அது பொந்தை விட்டு வெளியே வரும். பையன்களுக்குப் பயந்து கொண்டு பகல் நேரத்தில் பொந்தை விட்டு வெளியே வருவதையே பாம்பு அடியோடு நிறுத்தி விட்டது. குருவின் கிருபையால் மந்திரதீட்சை கிடைத்த நாள் முதல் மற்றவர்களுக்குத் தீங்கு செய்வதை அது விட்டொழித்தது. கிழங்கு, இலை, சருகுகள் மரத்திலிருந்து தானாக விழுந்த பழம் ஆகியவற்றை மட்டும் தின்று எப்படியோ ஒருவிதமாக உயிர் வாழ்ந்து வந்தது.

இவ்விதம் சுமார் ஓராண்டுக் காலம் கடந்தது. பிரம்மசாரி மறுபடியும் அதே வழியாக வந்தார். அப்போது அவர் பையன்களிடம் பாம்பைப் பற்றி விசாரித்தார். பையன்கள், ''பாம்பு எப்போதோ இறந்து போய் விட்டதே!'' என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் அப்படிச் சொன்னதைப் பிரம்மசாரியால் நம்ப முடியவில்லை. தாம் உபதேசித்த மந்திரத்தின் முழுப் பலனையும் அடைவதற்கு முன்பாகப் பாம்பு இறந்து போகாது என்பது அவருக்குத் தெரியும். ஆகவே அவர் பையன்களிடம், ''சரி, நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று சொல்லி விட்டார். பிறகு முதன் முதலாகப் பாம்பைத் தாம் சந்தித்த அதே இடத்திற்குச் சென்றார். அங்கும் இங்கும்

கணவர் இரண்டாம் கல்யாணம் பண்ணிக்கிறார்'னு எழுதிக் கொடு... ம்...'' என்று கையில் ஒரு பேப்பரை வைத்துக் கொண்டு மிரட்டுவான்.

இது இன்றைக்கும் வாழ்க்கையில் நடந்து கொண்டு இருக்கிறது. மனைவி கணவனின் இரண்டாவது திருமணத்துக்குச் சம்மதித்து எழுதிக் கொடுத்து விட்டாலோ, அல்லது விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்து விட்டாலோ



அது செல்லுபடியாகுமா?

நிச்சயமாகச் செல்லாது!

''ஒருவனுடைய மனைவி உயிருடன் இருக்கும்வரை அவளைச் சட்டப்படி விவாகரத்துச் செய்தாலொழிய இரண்டாம் திருமணம் சட்டப்படி தவறு என்று இந்து திருமணச் சட்டம் கூறுகிறது. இதற்குச் சிறைத் தண்டனை உண்டு! எனவே பாதிக்கப்பட்டவர் கண்டிப்பாக வழக்குத் தொடரலாம். இதற்காகக் 'குடும்பநல நீதிமன்றம்' தனியாகவே அமைக்கப்பட்டுள்ளது.

கவனத்தில் கொள்ள வேண்டிய இன்னொரு விஷயமும் உண்டு.

ஒருவனுக்கு ஒருத்தி என்ற ரீதியில் கணவன், மனைவி என்ற குடும்ப அமைப்பில் பிறக்கும் குழந்தைகளுக்குத் தாய் தந்தையரின் சொத்து பத்துக்களில் உரிமையுண்டு. ஆனால் தெரிந்தோ, தெரியாமலோ இரண்டாவது மனைவியாகக் 'கழுத்தை நீட்டும் அபலைக்குச் 'சட்டப்படி மனைவி' என்ற அந்தஸ்தே கிடையாது. அவளால் சொத்துபத்திற்குச் சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியாது.

ஆனால் இப்படிப்பட்ட திருமணங்களின் மூலமாகப் பிறக்கும் குழந்தைகளுக்குத் தந்தையின் சொத்தில் பங்கு உண்டு! தாய் தந்தையர் செய்த தவறுக்கு அந்தக் குழந்தைகள் தண்டனை அனுபவிக்கக் கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தின் விளைவே இந்த விதி.

தேடிப் பார்த்தார். ஆனால் பாம்பு பிரம்மசாரியின் கண்ணுக்குத் தென்படவே இல்லை.

மந்திர தீட்சை கொடுத்த போது பாம்புக்கு அவர் புதிய ஒரு பெயரை வைத்திருந்தார். அந்தப் பெயரைச் சொல்லி பாம்பு எங்கேயாவது இருந்தால் வெளியே வரட்டும் என்று அழைத்தார்.

குருவின் குரலைக் கேட்ட பாம்பு, பொந்தை விட்டு வெளியே வந்தது. மிக மிகப் பயபக்தியோடு குருநாதரின் திருவடிகளில் விழுந்து வணங்கியது. பாம்பு ஒரு குச்சியைப் போல மெலிந்து போயிருப்பதைப் பிரம்மசாரி கவனித்தார். பிரம்மசாரி அதனிடம், ''என்ன சௌக்கியமாக இருக்கிறாயா?'' என்று அருள் ததும்பும் குரலில் கேட்டார். அதற்குப் பாம்பு, ''த ங்கள் கிருபையால் நிரம்பச் சௌக்கியமாக இருக்கிறேன்'' என்று பதில் சொன்னது.

பிறகு பிரம்மசாரி கேட்டார், ''ஆனால் நீ ஏன் இப்படி ஒரேயடியாக மெலிந்து போயிருக்கிறாய்? உனக்கு என்ன நடந்தது?''

பாம்பு: சுவாமி, ஒருவரையும் இம்சிக்கக் கூடாது என்று தாங்கள் கட்டளையிட்டிருந்தீர்கள். நான் அதன்படியே இலை, பழம் போன்றவற்றை மட்டும் தின்று உயிர் வாழ்ந்து வருகிறேன். அதனால் ஒருவேளை நான் முன்னை விட மெலிந்து போயிருக்கலாம்.

பாம்பு நற்குணங்களையே கொண்டதாக மாறியிருந்தது. யாரிடமும் கோபம் கொள்ள முடியாத உயர்ந்த மகானின் நிலையைப் பெற்று விட்டது. இடைப்பையன்கள் சேர்ந்து ஏறக்குறையத் தன்னை ஒரு நாள் கொன்றார்கள் என்பதை முழுமையாக மறந்து விட்டது.

பிரம்மசாரி அதைப் பார்த்து, ''வெறும் பட்டினி காரணமாக மட்டும் இவ்வளவு மோசமான நிலையை நீ அடைந்திருக்க வழியில்லை. உனது இந்த நிலைக்கு வேறு ஏதாவது ஒரு காரணம் இருந்தாக வேண்டும். சற்று யோசனை செய்து பார்'' என்று கேட்டார்.

பாம்பு சிறிது நேரம் யோசித்தது. அப்போது தான் அதற்குப் பையன்கள் தன்னை ஒரு நாள் பலமாகத் தரையின் மீது அறைந்தார்கள் என்பது நினைவுக்கு வந்தது.

பாம்பு: சுவாமி! இப்போது எனக்கு ஞாபகம் வருகிறது. பையன்கள் என்னைப் பிடித்து முரட்டுத்தனமாகத் தரை மீது அடித்தார்கள். அவர்கள் அறியாத பிள்ளைகள்தாமே; எனது உள்ளம் எவ்வளவோ மாறி விட்டது என்பதை அவர்கள் உணரவில்லை. நான் ஒருவரையும் கடிக்கவோ, தீங்கு செய்யவோ விரும்ப மாட்டேன். அதை அந்தக் குழந்தைகள் எப்படி அறிய முடியும்?

பையன்கள் இழைத்த துன்பங்களைப் பாம்பு மறந்திருந்தது. நினைவு வந்த போது அவர்களை மனப்பூர்வமாக மன்னித்ததுடன் அவர்களுக்காகப் பரிந்தும் பேசியது.

பிரம்மச்சாரி, ''என்ன வெட்கக்கேடு! நீ இப்படிப்பட்ட முட்டாளாக இருக்கிறாயே! உன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் உனக்குத் தெரியவில்லை. நான் உன்னிடம் யாரையும் கடிக்க வேண்டாம் என்று மட்டும்தான் சொன்னேன்.

விவாகரத்து:

'கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருஷன்; அவன் என்ன செய்தாலும் அவன் காலில் விழுவதுதான் பத்தினி தர்மம்' என்பது இன்றைக்கு ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயமல்ல.

பெண்களின் மனவுணர்வுகள் சட்டத்தால் மதிக்கப்படுகின்றன. ஒரு பெண் தனக்கென்று சுய அபிப்பிராயம் கொள்ளச் சட்டம் பூரண உரிமை வழங்குகிறது. திருமண பந்தங்களில் முறிவு ஏற்படும் போது அதற்குக் காரணங்கள் பலவாக இருக்கலாம் என ஏற்றுக் கொள்கிறது.

'பிஸிகல் டார்ச்சர்' என்று சொல்லப்படும் உடல்ரீதியாகச் செய்யப்படும் கொடுமைதான் கொடுமை என்பதில்லை; மனத்தளவில் காயப்படுத்தினால் அதையும் 'மென்ட்டல் டார்ச்சர்' என எடுத்துக் கொண்டு அதையும் கொடுமைப் படுத்துதலில் ஒரு வகையாகவே எடுத்துக் கொண்டு தீர்ப்பு வழங்கத் தயாராகிறது சட்டம்.

முன்பெல்லாம் பாதிக்கப்பட்ட பெண் (அல்லது ஆண்) தானே நீதிமன்றத்தை அணுகி வழக்குத் தொடுத்து நிவாரணம் பெறவேண்டும் என்று இருந்தது. இப்போது, உங்கள் பக்கத்து வீடுகளில் நடைபெறுகின்ற கொடுமைகளைப் பார்த்து நீங்களும் நீதிமன்றத்துக்கு மனு செய்யலாம். சக மனிதனுக்கு (அல்லது பெண்ணுக்கு)



உதவி செய்ய வேண்டும் என்ற கருணை மனம் கொண்ட யாரும் நீதிமன்றத்தை அணுகி, துன்பம் நீக்கக் கோரலாம்.

வாரிசு உரிமைச் சட்டம்!

நம்முடைய சொத்துக்களுக்கு யார் வாரி

ஒருவரையும் சீறிப் பயமுறுத்தக் கூடாது என்று நான் உனக்குச் சொல்லவில்லையே. அவர்களைப் பயமுறுத்துவதற்காக நீ ஏன் சீறாமல் இருந்தாய்? நீ ஒருவரையும் கடிக்கக் கூடாதுதான். ஆனால் மற்றவர் உனக்குத் தொந்தரவு செய்யாத வகையில், அவர்களைச் சீறி உன்னை நீ பாது காத்துக் கொள்ள வேண்டும்.

ஸ்ரீராமகிருஷ்ணர் இந்தக் கதையைப் பக்தர்களுக்குக் கூறி, "ஆதலால் கெட்டவர்கள் மீது நீ சீறத்தான் வேண்டும். உனக்கு அவர்கள் தீமை செய்யாமல் இருக்கும் பொருட்டு அவர்களை நீ அவசியம் பயமுறுத்த வேண்டும். ஆனால் ஒரு நாளும் உனது விஷத்தை அவர்கள் மீது செலுத்தி விடாதே. மற்றவர்களுக்குத் தீங்கு செய்யக் கூடாது. நீ உலகில் வாழும் போது மற்றவர்களுக்கு அச்சமும் மரியாதையும் ஏற்படும் வகையில் நடந்து வா. ஆனால் உன்னத்தாலும் பிறருக்குத் தீமை வராதபடி உன்னை நீ பாதுகாத்துக் கொள்" என்று சொல்வதன் மூலம் சாதகர்கள் உலகில் வாழ வேண்டிய முறையை எடுத்துக் காட்டுகிறார்.

கடவுள் வர மாட்டார்

சரணாகதி என்பது உதட்டளவில் இருக்கக் கூடாது. கடவுளிடம் முழுமையான அளவில் ஒருவன் உண்மையிலேயே சரணாகதி செய்ய வேண்டும். அப்போதுதான் கடவுளுடைய உதவி அவனுக்குக் கிட்டும். அப்படி இல்லாவிட்டால், பகவானின் கிருபையைப் பெற முடியாது. இந்தக் கருத்தைப் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் பின்வரும் கதை மூலம் விளக்குகிறார்:—

ஒருமுறை சலவைத் தொழிலாளி ஒருவன் ஒரு பக்தனைக் கடுமையாக அடித்தான். அப்போது பக்தன், "நாராயணா! நாராயணா!" என்று மட்டும் சொல்லி அலறினான்.

அப்போது ஸ்ரீமந்நாராயணன் வைகுண்டத்தில் லட்சுமி ஸமேதராய் வீற்றிருந்தார். அவருடைய காதில் பக்தனின் அறைகூவல் விழுந்தது. உடனே அவர் எழுந்து புறப்பட ஆயத்தமானார். தேவி அவரிடம், "நாதா, தாங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"தேவி என் பக்தன் ஒருவன் பெரிய ஆபத்தில் இருக்கிறான். நான் அவனைக் காப்பாற்றியாக வேண்டும்" என்று சொல்லி விட்டு அவசர அவசரமாக ஸ்ரீமந்நாராயணன் புறப்பட்டார்.

ஆனால், இரண்டு மூன்று அடி தூரம் சென்றதும் மீண்டும் திரும்பி வந்து அவர் தமது ஆசனத்தில் அமர்ந்து விட்டார்.

இதைப் பார்த்த லட்சுமி திகைத்தாள்; "பிரபோ, இவ்வளவு விரைவில் திரும்பி விட்டீர்களே, ஏன்?" என்று கேட்டாள்.

நாராயணர் புன்முறுவல் பூத்தபடியே பதில் சொன்னார். "நான் போக வேண்டிய அவசியமே இல்லாமல் போனதைப் பார்த்தேன். அந்தப் பக்தனும் சலவைத் தொழிலாளியாகி விட்டான்; தன்னைத் தானே அவன் காப்பாற்றிக் கொள்ள நினைத்தான். இப்போது தன்னை அடித்தவனை



"துணி தைக்கத் தெரியாத நீ, எந்த தைரியத்தில் டெய்லரிங் கடை ஆரம்பிச்சே?"

"கொஞ்சம் துணி சேர்ந்ததும் வேறஊருக்குப் போய் 'பிட்' துணி வியாபாரம் பண்ணிப் பிழைக்கலாமேன்னுதான்!"

— ஞா. ஞானமுத்து.

கள்?

மகனும், மகளும் தந்தையின் சொத்தில் சம பங்கு பெறுகிறார்கள்.

முற்காலத்தில் பெண்களுக்குச் சொத்தில் பங்கு கிடையாது. 1956 — இல் இயற்றப்பட்ட பெண்களுக்கான சொத்துரிமைச் சட்டம் மூலமாகப் பெண் குலத்திற்கு நீதி வழங்கப்பட்டது. அந்தச் சமயத்தில்தான் விதவைகளுக்கும் விடிவு காலம் பிறந்தது. அதற்கு முன்பு கணவனை இழந்த பெண்களுக்குச் சொத்து இருந்தால்கூட அதைத் தன் தேவைகளுக்கு ஏற்ப விற்க முடியாமல் இருந்தது.

ஒருவர் உயில் எழுதாமல் இறந்து போய்விடுகிறார் என்றால் அவருடைய விதவை மனைவி, மகன்கள், மகள்கள் அனைவருக்கும் சொத்தில் சமபங்கு உண்டு.

உயில், செட்டில்மெண்ட்:

சொத்துக்களைப் பொறுத்தவரை இரண்டு விதமாக எழுதலாம். 'செட்டில்மெண்ட்' செய்து விடுவது; உயில் எழுதி வைப்பது.

செட்டில்மெண்ட் என்பது ஒருவர் உயிரோடு இருக்கும்போதே தம் சொத்துக்களைப் பிரித்துக் கொடுத்து விடுவது. பிறகு அவருக்கு அதில் எந்தப் பாத்தியதையும் இருக்காது. இந்த செட்



அவன் திருப்பி அடிக்கத் தொடங்கியிருக்கிறான். ஆகவே நான் அங்கே போய்ச் செய்ய வேண்டியது ஒன்றும் இல்லை. எனவே அவசியம் இல்லாததால் நான் திரும்பி வந்து விட்டேன்'' என்று பதில் சொன்னார்.

முற்றிலும் உன்னை நீ கடவுளிடம் ஒப்படைத்துச் சரணாகதி செய்ய வேண்டும். அப்படி நீ செய்தாலன்றிக் கடவுள் உன்னைக் காப்பாற்ற மாட்டார். உண்மையாகவே உன்னை நீ பகவானுடைய பீடத்தில் சமர்ப்பித்து விட வேண்டும்.

நாம் நமது ஆணவத்தைத் துறந்தாக வேண்டும். அப்படிச் செய்தாலன்றிப் பகவான் நமது பொறுப்புக்களைத் தாமாக ஏற்றுக் கொள்வதில்லை.

எவன் ஒருவன் கடவுளிடம் முற்றிலும் தன்னை அர்ப்பணித்துச் சரணமாகப் பற்றுகிறானோ, அவனை மட்டுமே பகவான் காப்பாற்ற முன்வருகிறார்.

நாரதர் கர்வபங்கம்

ஒரு சமயம் தேவரிஷியான நாரதர் தம்மை விடவும் பக்தியில் மிஞ்சியவர் யாருமே கிடையாது என்று நினைத்துக் கர்வம் கொண்டார். எல்லாம் அறிந்தவராகிய பகவான், நாரதருடைய மனப்போக்கை அறிந்து அவரைத் திருத்தி நல்வழிப்படுத்தத் திருவுள்ளம் கொண்டார். ஆகவே நாரதரிடம் அவர், ''நாரதரே! இன்ன இடத்தில் என் பரம பக்தனாகிய ஒருவன் வாழ்ந்து வருகிறான். அவனிடம் சென்று உறவாடி நட்புக் கொள்ளுங்கள். அவனுடைய தொடர்பை வளர்த்துக் கொள்ளுங்கள்'' என்று சொன்னார்.

பகவான் சொன்னபடியே நாரதர் அந்த இடத்திற்குச் சென்றார். அங்கே ஒரு குடியானவன் இருப்பதைப் பார்த்தார்.

குடியானவன் அதிகாலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போது 'ஸ்ரீஹரி' என்று பகவானுடைய பெயரை ஒரு முறை சொன்னான். பிறகு கலப்பையை எடுத்துக் கொண்டு வயலுக்குப் போய் நாள் முழுவதும் உழுதான். மாலை சாய்ந்த போது வீடு திரும்பினான். இரவு அவன் படுக்கைக்குப் போகும்போது மீண்டும் ஒருமுறை 'ஸ்ரீஹரி' என்று பகவானின் பெயரைச் சொன்னான்.

நாரதர் அவனுடைய வாழ்க்கையை ஒரு நாள் முழுவதும் இருந்து கவனித்தார். பிறகு அவர், ''இந்தப் பட்டிக்காட்டான் எப்படிப் பக்திமானாக இருக்க முடியும்? நான் முழுவதும் அவன் தன்

டில்மெண்ட்டைத் தயாரித்து ஸ்டாம்ப் பேப்பரில் எழுதிப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும்.

ஒருவர் தாம் இறந்த பிறகு தம்முடைய சொத்துக்கள் யார் யாருக்குப் போய்ச் சேர வேண்டும் என எழுதுவது உயில். இதைப் பதிவு செய்ய வேண்டியதில்லை. ஒரு சாதாரண பேப்பரில் கூட எழுதி, இரண்டு பேரைச் சாட்சிகளாகக் கையெழுத்துப் போடச் சொன்னால் போதும்.

இந்த 'உயில்' விஷயத்தில் நீதிமன்றம் மிகுந்த மனிதாபிமானத்தைக் காட்டுகிறது. இறக்கப் போகும் மனிதன், அவனுடைய கடைசி ஆசையாக இந்த உயிலை எழுதுகிறான். எனவே, அதை ஸ்டாம்ப் பேப்பரில் எழுத வேண்டும்; பதிவு செய்ய வேண்டும் என்றெல்லாம் சட்டம் நிர்ப்பந்திக்கவில்லை. அவன் தேக ஆரோக்கியம் இதற்கெல்லாம் அந்நேரத்தில் இடம் தராமல் போகலாம் என்பதால் சட்டம் இவ்வாறு செயல்படுகிறது.

மகன் தந்தைக்காற்றும் கடன்:

தந்தையின் சொத்தை மகன் அனுபவிப்பது போல, மகனுக்கும் பெற்றோர்களைப் பற்றிய சில கடமைகள் உண்டு என வலியுறுத்துகிறது சட்டம்.





உலகக் காரியங்களையே கவனித்துக் கொண்டிருக்கிறான். பெரிய பக்திமான் என்பதற்கு உரிய எந்த அடையாளமும் இவனிடம் காணப்படவில்லையே! இவனை எப்படிப் பக்தன் என்று சொல்ல முடியும்?'' என்று தமக்குத் தாமே நினைத்துக் கொண்டார்.

பிறகு நாரதர் பரந்தாமனிடம் திரும்பிச் சென்று, குடியானவனைப் பற்றிய தமது அபிப்பிராயத்தைச் சொன்னார்.

நாரதர் தமது கருத்தைச் சொன்னதும் பகவான் அவரிடம், ''நாரதரே! எண்ணெய் நிரம்பியுள்ள இந்தக் கிண்ணத்தை எடுத்துக் கொண்டு இந்தப் பட்டணத்தை ஒரு முறை சுற்றிவிட்டு வாருங்கள். ஆனால் ஒரே ஒரு துளி எண்ணெய் கூடக் கீழே சிந்திவிடாமல் ஜாக்கிரதையாக இருங்கள்'' என்று சொல்லி நாரதரை அனுப்பி வைத்தார்

நாரதர் பகவான் சொன்னபடியே செய்து முடித்தார். ''நாரதரே! ஊரைச் சுற்றி வரும் போது தாங்கள் எத்தனை முறை என்னை நினைத்துக் கொண்டீர்கள்?'' என்று பகவான் வினவினார்.

''பிரபோ, ஒரே ஒரு முறை கூட நினைக்கவில்லை. கிண்ணத்தில் இருந்த எண்ணெய் சிந்திவிடக் கூடாதே என்பதற்காக நான் கவனமாக இருக்கும் போது, எப்படி உங்களை நினைக்க முடியும்? அப்போது எனக்கு வேறு எந்த ஞாபகமும் வரவில்லை'' என்று நாரதர் பதில் சொன்னார்.

அதற்குப் பகவான், ''நல்லது நாரதரே, இந்த ஒரு கிண்ணத்தில் உங்கள் கவனம் பதிந்ததனால், என்னை அடியோடு முற்றிலும் மறந்து போய்விட்டீர்கள். ஆனால் அந்தக் குடியானவனைப் பாரும், பாரமான குடும்பச் சுமையைத் தாங்கிக் கொண்டிருந்தாலும், தினந்தோறும் தவறாமல் இரண்டு முறை என்னை அவன் நினைக்கிறான்'' என்று கூறியருளினார்.

பரல்மனம் கொண்ட பால்காரி!

ஒரு பால்காரி ஆற்றுக்கு அக்கரையிலே வசித்து வந்த பிராமண குரு ஒருவருக்குத் தினந்தோறும் பால் கொண்டு போய்க் கொடுப்பது வழக்கம்.

ஒரு சமயம் படகுப் போக்குவரத்து சரியாக நடைபெறவில்லை. ஆதலால், நாள்தோறும் சரி

சட்டப்படி ஓர் ஆண்மகன், தன்னுடைய மனைவி, மேஜராகாத குழந்தைகள், உடல் ஊனமுற்ற வாரிசுகள், தாய்தந்தையர் இவர்களைக்



காப்பாற்றக் கடமைப்பட்டவன். அப்படிக் காப்பாற்றாத பட்சத்தில் அவன்மேல் வழக்குத் தொடர்ந்து ஜீவனாம்சம் கேட்கப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிமையுண்டு.

பல இடங்களில் மகன் ஆதரிக்காத காரணத்தால் பிச்சை எடுக்க வேண்டிய சூழ்நிலை கூட தாய் தந்தையருக்கு ஏற்படுகிறது. இந்த மாதிரி சமயங்களில் நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்ந்து தங்களுடைய உரிமையைத் தாய் தந்தையர் நிலைநாட்டிக் கொள்ளலாம்.

அதே போலத் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளச் சக்தியில்லாத மனைவியும், கணவன் மேல் வழக்குத் தொடர்ந்து ஜீவனாம்சம் பெறலாம். இதற்கு மறுபக்கமும் உண்டு. மனைவி வசதியாக இருக்கிறாள். கணவன் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள இயலாதவனாக இருக்கிறான் என்றால் அந்த நிலையில் அவனும் அவன்மேல் வழக்குத் தொடர்ந்து ஜீவனாம்சம் பெறலாம்.

தானப்பத்திரம்:

உயில், செட்டில்மெண்ட் என்பது போலவே வாரிசுகள் அல்லாதவர்க்குத் தானப்பத்திரமாக ஒருவர் தம்முடைய சொத்துக்களை எழுதிக் கொடுத்துவிடலாம்.

யான நேரத்திற்குப் பால் கொண்டு போய்க் கொடுப்பதில் தடை ஏற்பட்டது. ஒரு நாள் அந்தப் பிராமண குரு, ''வேளைக்கு ஒழுங்காக ஏன் பால் கொண்டு வந்து தருவதில்லை?'' என்று பால்காரியைக் கடுமையாகக் கோபித்துக் கொண்டார்.

எளிய பால்காரி அவருக்கு, ''சுவாமி நான் என்ன செய்வேன்? தினமும் அதிகாலையில்தான் நான் வீட்டை விட்டுக் கிளம்புகிறேன். ஆனால் நதிக் கரைக்கு வந்ததும் நீண்ட நேரம் ஓடக்காரனுக்காகக் காத்திருக்க வேண்டியிருக்கிறது'' என்று பதில் சொன்னாள்.

அதைக் கேட்டதும் பிராமண குரு, ''ஏ பெண்ணே! பகவானுடைய நாமத்தை உச்சரிப்பதால் மக்கள் பிறவியாகிய பெரிய கடலையே தாண்டிக் கடந்துவிடுகிறார்கள்! உன்னால் இந்தச் சிறிய ஆற்றைக் கடக்க முடியவில்லையா?'' என்று வினவினார்.

கள்ளங்கபடமில்லாத அந்தப் பால்காரி, பிராமணர் சொன்னதை அப்படியே நம்பினாள். ஆற்றைக் கடப்பதற்குச் சுலபமான வழி தெரிந்துவிட்டது என்று பெரிதும் மகிழ்ந்தாள். வஞ்சம் இல்லாத நெஞ்சம் அவளுடையது.

அடுத்த நாற் முதற்கொண்டு குருவுக்கு அதிகாலையிலேயே உரிய நேரத்தில் பால் கிடைத்து வந்தது. ஒரு நாள் அவர் பால்காரியிடம், ''நீ முன்பு போல இப்போதெல்லாம் தாமதமாக வருவதில்லையே! எப்படி உன்னால் உரிய காலத்தில் பால் கொண்டுவர முடிகிறது?'' என்று கேட்டார்.



''சுவாமி, தேவரீர் சொன்னபடியே பகவானின் நாமத்தைச் சொல்லிக் கொண்டே ஆற்றைக் கடந்து வருகிறேன். இப்போதெல்லாம் நான் ஓடக்காரனுக்காகக் காத்திருப்பதில்லை'' என்று பால்காரி பதில் சொன்னாள். பிராமணர் இதை எப்படி நம்புவார்? பால்காரியின் வார்த்தையில் நம்பிக்கையில்லாத அவர், ''நீ எப்படி ஆற்றைத் தாண்டி வருகிறாய் என்பதை எனக்குக் காட்டுவாயா?'' என்று கேட்டார்.

பர்ல்காரி சூதுவாது தெரியாதவள். அவள் சம்மதித்துப் பிராமணரை அழைத்துக் கொண்டு நதிக்கரைக்குப் போனாள். பகவானின் நாமத்தைச் சொல்லிக் கொண்டே ஆற்றுநீரின் மேல் சர்வ சாதாரணமாக நடந்து போக ஆரம்பித்தாள். அப்படிச் சிறிது தூரம் சென்றதும் பின்னால் திரும்பிப் பார்த்தபோது குரு நடக்க முடியா

தானப் பத்திரத்திற்கும், செட்டில்மெண்ட்டாக ஒருவர் தம் மனைவி, மகள், மகன் ஆகியோருக்கும் சொத்துக்களை எழுதிக் கொடுக்கும் போதும் சொத்து மதிப்பில் 3% ஸ்டாம்ப் பேப்பர் வாங்க வேண்டும். யாருக்கேனும் சொத்துக்களை விற்கும்போது 13% ஸ்டாம்ப் பேப்பர் வாங்கி ரிஜிஸ்தர் செய்ய வேண்டும்.

வீடுகள் வாங்க, விற்க...

நிலம் அல்லது வீடு வாங்கும் போது என்னென்ன சரி பார்த்துக் கொள்ள வேண்டும்?

- முதலில் விற்பவருக்கு அந்தச் சொத்தை விற்க முழு உரிமை இருக்கிறதா எனப் பார்க்க வேண்டும்.
- அந்தச் சொத்திற்கு மைனர் வாரிசோ, கடனோ இருக்கிறதா எனவும் பார்க்க வேண்டும்.
- காண்பிக்கப்படும் பத்திரங்கள் ஒரிஜினலா என்று தெரிந்து கொள்ள வேண்டும்.
- பிரிக்கப்படாத குடும்பத்தின் சொத்தை யாரோ ஒருவர் மட்டுமே நம் தலையில் கட்டப் பார்க்கிறாரா என்பதை ஆராய வேண்டும்.
- இதற்கு முந்தைய முப்பது வருடங்களில் எந்தவொரு வில்லங்கமும் இல்லாமல் விற்பவருக்கே முழுமையாக அந்தச் சொத்து பாத்தியதைப்பட்டதாக இருந்திருக்கிறதா என்று சோதிக்க வேண்டும்.
- வருமான வரி ஒழுங்காகக் கட்டப்பட்டுள்ளதா, இன்கம் டாக்ஸ் க்ளியரன்ஸ் உள்ளதா எனவும் கவனிக்க வேண்டும்.

இதையெல்லாம் எப்படித் தெரிந்து கொள்வது? அந்த நிலம் அல்லது மனை அல்லது வீடு எந்தப் பதிவாளர் அலுவலகத்தின் கீழ் வருகிறதோ, அங்கே சென்று சோதிக்க வேண்டும். வில்லங்க சர்ட்டிபிகேட்டிற்கு மனுப் போட வேண்டும்.

அதேபோல இன்கம் டாக்ஸ் க்ளியரன்ஸ் சர்ட்டிபிகேட்டிற்கும் மனுச் செய்ய வேண்டும். இப்போதைய சட்டப்படி ரூபாய் இரண்டு லட்சம் அல்லது அதற்குக் குறைவான மதிப்புள்ள சொத்துக்களுக்கு இன்கம்டாக்ஸ் க்ளியரன்ஸ் தேவையில்லை. அதற்குமேல் என்றால் தேவை. பத்து லட்சத்திற்கு மேற்பட்ட சொத்துக்களை விற்பதற்கு இன்கம்டாக்ஸ் க்ளியரன்ஸ் மட்டும் போதாது. வருமானவரி அலுவலகத்தில் சொத்தை விற்க அனுமதி பெற்றாக வேண்டும்!

இதுபோலச் சொத்துக்களை வாங்கும் போது வழக்கறிஞர்களைக் கலந்தாலோசிப்பது நல்லது.

மல் சிரமப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டாள். அவரது நிலையைக் கண்டதும் அவள், "சுவாமி! இது என்ன? பகவானின் நாமத்தை வாயால் சொல்கிறீர்கள். ஆனால் அதே சமயம், துணி எங்கே நனைந்துவிடப் போகிறதோ என்று கைகளினால் தூக்கிப் பிடித்துக் கொள்கிறீர்கள்! தங்களுக்குப் பகவானிடத்தில் பரிபூரண நம்பிக்கை இல்லையே!" என்று கேட்டாள்.

பகவானிடத்தில் வைக்கும் தீவிரமான நம்பிக்கையும் பரிபூரண சரணாகதியுமே எல்லா அற்புதச் செயல்களுக்கும் காரணமாக இருக்கின்றன.

உயர்ந்த உள்ளங்கள்

ஒரு முறை கணவனும் மனைவியுமான இருவர் உலகவாழ்க்கையைத் துறந்து சன்னியாசம் ஏற்றுக் கொண்டார்கள். இருவரும் சேர்ந்து புண்ணிய ஸ்தலங்களைத் தரிசிக்கத் தீர்த்த யாத்திரை செய்தனர்.

ஒரு நாள் யாத்திரையின் போது, அவர்கள் இருவரும் ஒரு பாதை வழியாகச் சென்று கொண்டிருந்தனர். அப்போது கணவன் சற்று முன்னால் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுடைய கண்களுக்குப் பாதையில் ஒரு வைரக்கல் விழுந்து கிடப்பது தென்பட்டது. அதைக் கண்டதும், தன் மனைவி இந்த வைரக்கல்லைப் பார்த்தால், ஒரு வேளை எங்கே அதன்மீது ஆசை கொண்டு தன் ஆன்மிக பலத்தை இழந்து விடுவாளோ என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியது.

உடனே அவன், அந்த வைரத்தைத் தன் மனைவி அங்கு வருவதற்கு முன்பாகப் புதைத்துவிட நினைத்து அவசர அவசரமாகத் தரையைத் தோண்டினான்!

மண்ணை அவன் அப்படித் தோண்டிக் கொண்டிருந்த வேளையில், அவனது மனைவியே அங்கு வந்து விட்டாள். நெருங்கி வந்ததும் அவள், "என்ன விசேஷம்? என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று விசாரித்தாள். கணவன் அவளுக்கு நேரடியாகப் பதில் சொல்லவில்லை. ஏதோ சாக்குப்போக்காக மறைமுகமாகப் பதில்சொல்லி மழுப்பினான்.

என்றாலும் அவளுடைய கண்ணில் அந்த வைரம் தட்டுப்பட்டு விட்டது! அதோடு கணவன் எத்தகைய எண்ணத்துடன் வைரத்தை மறைக்க முயற்சி செய்கிறான் என்பதையும் புரிந்து கொண்டு, "சுவாமி! வைரத்திற்கும் மண்ணாங்கட்டிக்கும் இன்னமும் உங்களுக்கு வித்தியாசம் தெரிவதாக இருந்தால், பிறகு நீங்கள் ஏன் உலகத்தைத் துறந்து வந்தீர்கள்?" என்று அவன் மனத்தில் படும்படியாகக் கேட்டாள்.

பெரிய சக்தி வாய்ந்த கடவுள் சாட்சிக்கு முன் இந்த அற்ப உலகப் பொருள்களின் கவர்ச்சி எம்மாத்திரம்?

இறைவனை அடைந்தவர்களுக்கு இழிவான பயனற்ற உலக போகங்கள் யாவும் சத்தில்லாத சக்கையைப் போலிருக்கும்.

உலகப் பற்றுள்ளவர்கள் உபயோகமற்ற

அடுக்கு மாடிக் கட்டடங்கள்:

இன்றைக்கு நகரங்களில் ஃப்ளாட் சிஸ்டம் அதிகமாகிக் கொண்டு வருகிறது. பொதுவாக வீட்டுமனை, நிலம் தொடர்பாகத்தான் சட்டங்கள் உள்ளனவே தவிர, பெருகிவரும் அடுக்கு மாடிக் குடியிருப்புக்களுக்கான சட்டங்கள் உருவாக்கப்படவில்லை. ப்ளாட்டில் வசிப்பவர்களுக்கே உரிய பல பிரச்னைகளைத் தீர்த்து வைக்க வேண்டிய அவசியம் உள்ளது. எனவே சட்ட வல்லுநர்கள் இதைப் பற்றி ஆலோசித்து வருகிறார்கள்.

வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம்:

வீடு வாங்குவது கூடப் பெரிதில்லை. அதை வாடகைக்கு விட்டுவிட்டுச் சிலர் படும்பாடு இருக்கிறதே, அது ரொம்பப் பரிதாபம். அதே போல வீட்டுக்காரர் படுத்தும் பாட்டிற்கு மாமியாரே தேவலை என நினைப்பவர்களும் உண்டு.

ஒரு வாடகைதாரரை எப்போது காலி செய்யச் சொல்லலாம்? தம் சொந்த உபயோகத்திற்கு வீடு வேண்டுமென்றோ, வீடு இடித்துக் கட்டப்பட வேண்டும் என்றோ, வேண்டும் என்றே வாடகை கொடுக்காமல் இருக்கிறார் என்றோ நிரூபித்து அவரைக் காலி செய்யச் சொல்லலாம். வீட்டுக்காரர், வாடகைக்கு ரசீது கொடுத்து விடுவது நல்லது.

இதன் மறுபுறமாக...

வாடகைக்குக் குடியிருப்போருக்குத் தண்ணீர் போன்ற அடிப்படைத் தேவைகளைச் செய்து கொடுக்க வேண்டியது வீட்டுக்காரரின் கடமை. குடியிருப்பவர் ஒழுங்காக வாடகை கொடுத்து ரசீது பெற்றுக் கொண்டுவிட வேண்டும். சொத்துத் தகராறில் சகோதரர்களுக்குள் யார் வாடகை வாங்குவது என பிரச்னை வரலாம். சரி, அவர்கள் முடிவு செய்து கொண்டு வரட்டும் எனக் குடியிருப்பவர் வாடகை கொடுக்காமல் இருந்து விட முடியாது. பிறகு, அண்ணன், தம்பிகளுக்குள் ஒற்றுமை ஏற்பட்டு, குடியிருப்பவரை வாடகை கொடுக்கவில்லை எனத் துரத்தி விடுவார்கள். எனவே, கோர்ட்டில் வாடகையைச் செலுத்தி விடுவது நல்லது.

நுகர்வோர் சட்டம்:

மேலை நாடுகளில் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி வியாபாரிகளின் கண்களில் விரல் விட்டு ஆட்டிவிடுகிறார்கள் பொதுமக்கள். 'கன்னா

பொருள்களைத் தேடுபவர்களாவார்கள். உலகப் பற்றற்ற தூய ஆத்மாக்கள் ஈசுவரனை நம்பி அவனையே சதா சர்வ காலமும் சிந்தித்திருப்பார்கள்.

இரண்டு குடியானவர்கள்

ஒரு காலத்திலே ஒரு தேசத்தின் ஒரு பகுதியில் மழை இல்லாமற் போய்விட்டது. அதன் விளைவாக மக்கள் பஞ்சத்தில் வாடினார்கள். குடியானவர்கள் நீண்ட வாய்க்கால்களை வெட்டினர். அவற்றின் மூலமாக வெகு தூரத்திலிருந்து தங்கள் விளைநிலங்களுக்குத் தண்ணீர் கொண்டு வரும் பணியில் ஈடுபட்டனர்.

குடியானவர்களில் ஒருவன் திடமான மன உறுதி கொண்டவனாக இருந்தான். அவன், 'என் வாய்க்காலை ஆற்றுடன் சேர்க்கும் வரையிலும் தொடர்ந்து வெட்டிக் கொண்டே போவேன்' என்று தனக்குத்தானே ஒரு சபதம் எடுத்துக் கொண்டான். வரிந்து கட்டிக் கொண்டு கால்வாயை வெட்டும் பணியில் முழு மூச்சுடன் இறங்கினான்.

வழக்கமாக அவன் குளிக்கும் நேரம் வந்தது. அப்பொழுதும் வேலை மும்முரத்தில் அவன் ஆழ்ந்து போயிருந்தான். நேரம் கடந்து கொண்டிருந்தது. ஆதலால் குடியானவனின் மனைவி தன் மகனிடம் எண்ணெயைக் கொடுத்து, குடியானவன் வேலை செய்து கொண்டிருந்த இடத்திற்கு அனுப்பி வைத்தாள். மகன் தந்தையிடம் சென்று, ''அப்பா, உச்சிப் பொழுது கடந்து ஏற்கெனவே நேரம் ஆகிவிட்டது. இந்த எண்ணெயைத் தேய்த்துக் கொண்டு குளிக்க வா'' என்று சொன்னான். மகன் சொன்னதைக் குடியானவன் காதில் போட்டுக் கொள்ளவில்லை. ''போ, போ. இன்னும் செய்ய வேண்டிய வேலை எவ்வளவோ பாக்கி இருக்கிறது'' என்று இடித்தாற்போல் பதில் சொல்லி மகனைத் திருப்பி அனுப்பிவிட்டான்.

உச்சிவேளை கழிந்து, மணி இரண்டு ஆயிற்று. அப்பொழுதும்குடியானவன் எலும்புஒடியவேலை செய்து கொண்டிருந்தான். குளிப்பதைப் பற்றிய நினைவு அவனுக்கு இல்லை. சாப்பாட்டைப் பற்றிய நினைவும் அவனுக்கு இல்லை.

கடைசியில் அவனது மனைவியே நேராக அங்கு வந்தாள். ''ஏன் நீங்கள் இன்னும் குளிக்காமல் இருக்கிறீர்கள்? சாதங்கூட ஆறிப் போய்விட்டது. எப்போதும் நீங்கள் இப்படித்தான் பிடிவாதம் செய்கிறீர்கள். எதையுமே அளவுக்கு மீறிச் செய்வது உங்கள் பழக்கமாகிவிட்டது. வேலையை இப்படிப் போய்ப் பிரமாதப்படுத்துகிறீர்களே! செய்த வேலை போதும். இப்போதாவது வாருங்கள். மீதி வேலையை நாளைக்குச் செய்யலாம். அல்லது வேண்டுமானால் சாப்பிட்டுவிட்டு வந்து பிறகு செய்து கொள்ளுங்கள்'' என்று சொன்னாள்.


அவ்வளவுதான்! குடியானவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. உடனே அவன் அவளை, வெட்டப் போவதைப் போல மண்வெட்

பின்னா' என்று யாரும் விளம்பரம் செய்து மக்களை அங்கு ஏமாற்ற முடியாது. 'இந்தச் சோப்பைப் பூசிக் கொள்ளுங்கள் நாளெல்லாம் செண்ட் மணத்தில் மிதப்பீர்கள்' என ஒரு சோப் கம்பெனி விளம்பரம் செய்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். எட்டு மணிக்குக் குளிக்கும் போது மணத்தை நுகர்ந்த ஆசாமி ஒன்பது மணிக்கு வாசனை அடிக்கவில்லையென்றால், அந்தச் சோப்புக் கம்பெனி மேல் வழக்குப் போட்டு விடுவார். 'மோசடி விளம்பரம் செய்து என்னை ஏமாற்றிவிட்டார்' என்று வாதாடுவார். அவருக்குச் சோப்பு நிறுவனம் நஷ்டஈடு கொடுத்தாக வேண்டும்.

ஆனால் நம் நாட்டில் நிலைமை தலைகீழாக உள்ளது! எங்கேயாவது சோப்பு மணம் உடலில் நாள் முழுக்க நிலைத்திருக்குமா? சொல்றவன் சொன்னா வாங்கிய இவனுக்கு புத்தி எங்கே போச்சு?' என்று நாம் கேட்போம்!

வாங்குபவர் ஏமாறாமல் இருக்க வேண்டும் தான். அதற்காக விற்பவர் ஏமாற்றலாமா? கூடாதல்லவா? எனவே, அவர்களைக் கட்டுப்படுத்தப் பல சட்டங்கள் இருக்கின்றன. உணவுப் பொருட்கள், மருந்துகள் போன்றவற்றின் உறை மீது அவற்றைத் தயாரித்த தேதி, அதிலுள்ள பொருட்கள், அனுமதிக்கப்பட்ட வ ண் ண ங் க ள் ஆகிய விவரங்கள் அச்சிடப்பட்டிருக்கவேண்டும்; விலை குறிப்பிடப்பட வேண்டும் என்பன போன்று பல சட்டங்கள்.

வக்கீல், டாக்டர், இன்ஜினீயர் என்றெல்லாம் தொழில் புரிவோர் முழு மனத்துடன் பொது மக்களின் வாழ்க்கைக்குப் பாதகமில்லாமல் பொறுப்புணர்வுடன் தொழில் செய்ய வேண்



டியைத் தூக்கிக் கொண்டு அவள் நின்ற இடத்திற்கு ஓடினான்: ''புத்தி கெட்டவளே! உனக்கு ஏதாவது மூளை கீளை இருக்கிறதா? பயிர்கள் வாடிப் போவதை நீ பார்க்கவில்லையா? மழை இல்லாமல் பயிர்கள் செத்துவிடும் போல் இருக்கிறது! இப்படி இருந்தால் குழந்தைகள் எதைச் சாப்பிடும்? நாளைக்கு நீங்கள் அனைவருமே பட்டினி கிடந்து சாக வேண்டிய நிலை வந்து விடாதா? இன்றைக்கு வயலுக்குத் தண்ணீர் கொண்டு வரும் வரையிலும் குளிப்பதையோ சாப்பிடுவதையோ நினைத்தும் பார்ப்பதில்லை என்று நான் சபதம் எடுத்திருக்கிறேன். இங்கிருந்து ஓடிப்போ! இன்றைக்கு நம் வயலுக்கு எந்நேரமானாலும் எப்படியாவது தண்ணீர் வந்தாக வேண்டும். பிறகுதான் மற்ற விஷயங்களைப் பார்ப்பேன்'' என்று சபதம் போட்டுக் கண்டபடி திட்டி அவளை அங்கிருந்தே விரட்டியோட்டி விட்டான். குடியானவன் இப்படிப் பொரிந்து தள்ளி எரிமலையாகவே வெடிப்பான் என்று அவளே எதிர்பார்க்கவில்லை. கணவனின் மன நிலையைக் கண்ட அவள் பயந்து ஓடியே போய்விட்டாள்.

குடியானவன் ஒரு நாள் முழுவதும் முதுகு வலிக்கப் பாடுபட்டான். உடலெல்லாம் வியர்வை ஆறாகப் பெருக, பகீரதப் பிரயத்தனம் செய்தான். அன்றைய தினம் பொழுது சாய்ந்து இருள் சூழ இருந்த சமயத்தில், தான் வெட்டிய கால்வாயை அவன் நதியோடு இணைத்து விட்டான். பிறகு ஆனந்தமாகக் கீழே உட்கார்ந்து கொண்டு, தன் வயலுக்குள் நீர் சளசளவென்ற சப்தத்துடன் பாய்வதைக் கவனித்தான். அவன் உள்ளம் அமைதி பெற்றது. மனம் மகிழ்ச்சியால் துள்ளியது.

பிறகு நிறைந்த உள்ளத்துடன் அவன் வீடு திரும்பினான். மனைவியை அழைத்து, ''ஏலே! இந்தா, இப்போது எனக்குக் குளிக்கக் கொஞ்சம் எண்ணெய் எடுத்து வா. புகை குடிப்பதற்கு ஹூக்காவையும் தயாரித்து வை'' என்று சொன்னான். பிறகு கவலை இல்லாமல் குளித்தான். திருப்தியாகச் சாப்பிட்டுவிட்டுப் படுக்கப் போனான். நெடுநேரம் அயர்ந்து நன்றாகக் குறட்டைவிட்டுச் சுகமாகத் தூங்கினான்.

இந்தக் குடியானவன் காட்டிய மன உறுதிதான் தீவிர வைராக்கியத்திற்கு நல்ல உதாரணம். உலகிலே நாம் சேர்க்கக் கூடிய ஒரே செல்வம், சேர்க்க வேண்டிய மிகப் பெரிய செல்வம் இப்படிப்பட்ட முதல் தரமான தீவிர வைராக்கியம்தான். ஏனென்றால் அது இருந்தால்தானே நாம் கடவுளை அடைய முடியும்?

இனி, வேறு ஒரு குடியானவனும் இருந்தான். அவனும் தன் வாய்க்காலுக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்காக வாய்க்கால் வெட்டிக் கொண்டிருந்தான். அப்போது அவனுடைய மனைவியும் வயலுக்கு வந்தாள். ''நேரமாகிவிட்டது. வேலை செய்தது போதும். இப்போது வீட்டுக்கு வந்துவிடுங்கள். அதிகமாக அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை'' என்றுசொன்னாள்.

இந்தக்குடியானவன் அவளை எதிர்த்துவாயாடவில்லை. தடை ஒன்றும் சொல்லவில்லை. அவள்



''தூங்கி ஐந்து மணிக்கெல்லாம் எழுந்திருச்சா மயக்கம் வருது டாக்டர்!''

''அப்ப ஆறு, ஏழு மணிக்கு எழுந்திருக்க வேண்டியதுதானே!''

''அதுக்குள்ள ஆபீஸைப் பூட்டிடுவாங்களே டாக்டர்!''

— நீடாமங்கலம் ஜே. பி.

டும். இல்லையென்றால் மேலைநாடுகளில் அவர்கள் மேல் மக்கள் வழக்குப் போட்டு விடுவார்கள். தவறாகச் செய்யப்பட்ட அறுவை சிகிச்சைக்காக நஷ்டஈடு பெற்றவர்கள் நிறையப்பேர் மேல்நாடுகளில் உண்டு.

நாம் யாரிடமும் எதையும் இனாமாகப் பெறவில்லை. உழைத்துச் சம்பாதித்து அந்தக் காசைக் கொண்டுதான் பொருள் வாங்குகிறோம். காசுக்குரிய மதிப்பை அந்தப் பொருள் பெற்றிருக்க வேண்டாமா? அப்படி இல்லாமல் விற்பவர் நம்மை ஏமாற்றும் போது நமக்குக் கோபம், எரிச்சல், ஆத்திரம் வர வேண்டாமா? நம் நாட்டில் இந்த மனப்பான்மை சமீப காலமாக வளர்ந்து வருகிறது. அங்கொன்றும் இங்கொன்றுமாக நுகர்வோர் சட்டத்தின்கீழ் வழக்குகள் தொடரப்பட்டு வருகின்றன. இது நல்ல அறிகுறி. இது மேலும் வளர வேண்டும்.

ஒரு கடைக்குப் போனால் அவர் வைத்திருக்கும் தராசும் படிக்கற்களும் சரியானவையா எனச் சோதிக்க நமக்குப் பூரண உரிமையுண்டு. ஆனால் இது எத்தனை பேருக்குத் தெரியும்?

கலப்படத்தடுப்புச் சட்டத்தின்கீழ், ஒரு கடையிலுள்ள பொருட்களில் கலப்படம் உள்ளதா என்று நாம் சோதிக்கலாம்.

இந்த உணர்வெல்லாம் நம்மிடையே தீவிரமாகச் செயல்படும் போதுதான் ஏமாற்றுக்காரர்களும் இருக்க மாட்டார்கள்; ஏமாறுபவர்களும் இருக்க மாட்டார்கள்.

வந்து கூப்பிட வேண்டும் என்பதற்காகவே காத்திருந்தவனைப் போல, மண்வெட்டியைத் தூக்கித் தோளிலே போட்டுக் கொண்டான். அவளிடம், "அன்பே, சரி! நீயே வந்து கூப்பிடும் போது நான் என்ன சொல்ல இருக்கிறது? நான் வரத்தான் வேண்டும். இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லிக் கொண்டே அவளைத் தொடர்ந்து போய் விட்டான்.

அவனால் தன் வயலுக்கு உரிய காலத்தில் தண்ணீர் கொண்டு வரவே முடியவில்லை. இது தான் தாமதமும் சோம்பலும் கலந்த மந்த வைராக்கியத்திற்கு உதாரணம்.

எப்படி, எடுத்த காரியத்தை முடிக்கும் திடமான மனஉறுதி இல்லாவிட்டால் குடியானவனால் விளைநிலத்திற்கு நீர் பாய்ச்ச முடியாதோ, அப்படியே தீவிரமான வைராக்கியம் ஒருவனுக்கு இல்லாமற் போனால் இறைவனின் தரிசனமாகிய மகோன்னத நிலையை அவனால் அடையவே முடியாது.

திருடன் சன்னியாசி ஆனான்!

ஒரு நாள் ஒரு திருடன் அரசனுடைய அரண்மனையில் திருடுவதற்காக நுழைந்தான். அப்பொழுது இரவில் நடுஜாமப் பகுதி கழிந்து கொண்டிருந்தது. அரசன் தன் மனைவியிடம், "நம் மகளை ஆற்றங்கரையில் வசித்துக் கொண்டிருக்கும் சாதுக்களில் ஒருவருக்குத் திருமணம் செய்து கொடுக்கப் போகிறேன்" என்று சொல்



லிக் கொண்டிருந்தான்.

அரசன் சொன்ன வார்த்தைகள் மறைந்திருந்த திருடனின் காதில் விழுந்தன. உடனே அவன், 'ஆகா, பேஷ்! இப்போது ஒரு நல்ல அதிர்ஷ்டம் எனக்காகக் காத்திருக்கிறது. நாளைக்கே நான் சாது வேஷம் போட்டுக் கொண்டு ஆற்றங்கரையிலுள்ள சாதுக்களில் ஒருவனாகப் போய் உட்கார்ந்து கொள்கிறேன். ஒரு வேளை எனக்கே யோகம் அடித்து இளவரசியே எனக்கு மனைவியானாலும் ஆகலாம்' என்று நினைத்து அரண்மனையை விட்டு வெளியேறினான்.

மறுநாள் காலையில் திருடன் தான் திட்டமிட்டபடியே சன்னியாசிக் கோலத்தில் சாதுக்களில் ஒருவனாகப் போய் உட்கார்ந்து கொண்டான்.

சிறிதுநேரம் கடந்தது. அரண்மனையைச் சேர்ந்த அதிகாரிகள் ஆற்றங்கரைக்கு வந்தார்கள். அங்கே இருந்த சன்னியாசி ஒவ்வொருவரிடமும் மன்னரின் மகளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று பணிவன்புடன் வேண்டிக் கேட்

நடைமுறைச் சட்டங்கள்:

"அவன் எல்லை மீறி காம்பவுண்ட் சுவரைக் கட்டி விட்டாண்டா. இன்னிக்கே கோர்ட்ல ஸ்டே வாங்கறேன் பாரு!" என்று முழங்குவார் ஒருவர்.

கோர்ட்டுக்குச் சென்று வழக்குப் பதிவு செய்வதை 'ஸூட் போடுவது' என்பார்கள். அதே போல ஸ்டேட் வாங்குவது, 'இன்ஜெங்ஷன்' வாங்குவது என இரண்டு உண்டு.

இரண்டிற்கும் என்ன வித்தியாசம்?

ஒருவர் அத்துமீறி உங்கள் வீட்டிற்குப் பக்கத்தில் பத்து மாடிக் கட்டடம் கட்டுகிறார். அதனால் நீங்கள் பாதிக்கப்படலாம். லவுட் ஸ்பீக்கர் அலற விடுகிறார். உங்கள் உடல்நலம் பாதிக்கப்படுகிறது. சட்டத்தை மீறி ஒரு சொத்தை விற்க முயற்சி செய்கிறார்.

இதுபோன்ற சமயங்களில் கோர்ட்டை அணுகி அவர்கள் அச்செயலைத் தொடராமல் தடுப்பது 'இன்ஜெங்ஷன்' எனப்படும்.

ஒருவருக்கு, மற்ற சீனியர்களையெல்லாம் புறக்கணித்துப் பிரமோஷன் கொடுக்கப்படுகிறது. கீழ்க் கோர்ட் ஒரு வழக்கு சம்பந்தமாக ஓர் உத்தரவு போடுகிறது.

இவற்றையெல்லாம் செயல்படுத்தாமல் தடுப்பது 'ஸ்டே.' இந்த இரண்டு வார்த்தைகளையும்



"காதுல எறும்பு நுழைஞ்சுடுச்சு டாக்டர்!"

"தேனைக் காது மடலில் தடவிட்டுப் படுங்க. தேன் வாசனைக்கு, எறும்பு வெளியே வரும் போது புடிச்சிடலாம்!

— ஞா. ஞானமுத்து.

டுக் கொண்டார்கள்; பிரார்த்தித்தார்கள். என்றாலும் சாதுக்களில் ஒருவருமே சம்மதிக்கவில்லை. அனைவருமே மறுத்துவிட்டார்கள்.

தங்களுடைய கோரிக்கையைச் சாதுக்கள் ஏகமனதாக முற்றிலும் நிராகரித்தவுடன், கடைசியில் அதிகாரிகள் சாது வேஷம் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த திருடனிடம் வந்தார்கள். அவனிடமும் தங்களுடைய கோரிக்கையை எடுத்துச் சொல்லிப் பிரார்த்தித்தார்கள். திருடன் பதில் பேசவில்லை; மௌனமாக உட்கார்ந்திருந்தான்.

அதிகாரிகள் அரண்மனைக்குத் திரும்பி, "ஒரு வாலிப சன்னியாசி அங்கே இருக்கிறார். ஒரு வேளை அவர் நமது கருத்துக்கு இணங்குவார் போலிருக்கிறது. அங்குள்ள மற்ற சாதுக்கள் அனைவருமே நம் கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டார்கள்" என்று அரசனிடம் செய்தியைத் தெரிவித்தார்கள்.


பிறகு அரசனே கபட சன்னியாசியிடம் நேரில் சென்றான். தன் மகளை ஏற்று அங்கீகரிக்க வேண்டும்; திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று மனப்பூர்வமாகவும் பணிவாகவும் அந்தக் கபட சன்னியாசியிடம் வேண்டினான்; பிரார்த்தித்தான்.

அரசனே நேரில் வந்ததையும், தன் முன்னால் பணிந்து நின்று உள்ளம் தோய்ந்து வேண்டியதையும் கண்டதும் திருடனின் மனம் மாறி விட்டது. 'ஆகா! நான் சாது அல்ல! சாதுவின் உடையை மட்டுமே அணிந்து கொண்டிருக்கிறேன்! அது காரணமாக அரசனே என்னைத் தேடி நேரில் வந்திருக்கிறான். என் முன்னால் பணிந்து நி... வேண்டுகோள் விடுக்கிறான். நயந்து பிரார்த்தி... கிறான். நான் உண்மையிலேயே சாதுவாகி விட்டால் இதைவிடவும் உயர்ந்தவை எனக்கு எவ்வளவோ காத்திருக்கும் அல்லவா?" என்ற சிந்தனைகள் திருடனின் உள்ளத்தில் உதயமாயின.

அந்தச் சிந்தனைகள் அவனது உள்ளத்தில் பதிந்து அவனுடைய மனப்போக்கையே முற்றிலும் மாற்றி அமைத்துவிட்டன. போலி வேடம் பூண்டு மன்னன் மகளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அந்த நிமிடமே அவனது உள்ளத்தை விட்டு அகன்றது. அந்த நாள் முதற்கொண்டு தன் பழைய வாழ்க்கை முறைகளை அடியோடு நீக்கவும் உண்மையான சாதுவின் உயர்ந்த வாழ்க்கை வாழவும் அவன் கடுமையாக முயற்சி செய்தான். பிறகு அவன் திருமணமே செய்து கொள்ளவில்லை அவனுடைய உண்மையான முயற்சி நல்ல பலனை விளைவித்தது. பிற்கால வாழ்க்கையில் அவன் அக்காலத்தில் விளங்கிய உயர்ந்த தபஸ்விகளில் ஒருவன் ஆனான். மகானின் நிலையை அடைந்த அவனை உலகமே பாராட்டித் தலைவணங்கியது.

போலி வேடம் சில சமயங்களில் எதிர்பாராத நன்மையைத் தருகிறது.

நன்றி: ஸ்ரீ ராம்கிருஷ்ணர் சொன்ன கதைகள்.
வெளியீடு: ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை — 4.



"அடிக்கடி 'விளைவுகளைச் சந்திக்கத் தயார்' னு அறிக்கை விடறாரே யார் அது?"

"விவசாயத்துறை மந்திரிதான்!"

— கீழை. அ. கதிர்வேல்.


சாதாரணமாகப் பலர் குழப்பிக் கொள்வார்கள்.

கோர்ட்டில் ஒரு வழக்குத் தொடருகிறோம். அதை ஃபைல் செய்யவோ, நெம்பராக்கவோ ஆகும் செலவுகள் மிகக் குறைவானதுதான். ஆனால் நடைமுறைப்படுத்த வேறு பல செலவுகள் இருக்கலாம். எனவே, எது எதற்கு எவ்வளவு செலவாகும் எனப் பொதுவாகத் தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது.

கோர்ட்டில் கேஸ் போடுவது அவமானமா ?

"என்னை கோர்ட் படி ஏற வச்சுட்டானே?" என முட்டிக் கொண்டு அழும் பலர் இருக்கிறார்கள். அவமானப்பட்டுக் குமைந்து போகிறவர்கள் பலர் உண்டு. நீதிமன்றத்திற்கு வருவது அவ்வளவு அவமானமானதா என்ன?

உடல்நிலை சரியில்லையென்றால் மருத்துவரிடம் செல்வது எப்படி ஒரு சாதாரணமான விஷயமோ, அதேபோல வாழ்க்கைப் பிரச்னைகள் வரும்போது நீதிமன்றத்துக்குப் போவது ஒரு நடைமுறை விஷயமே. இதில் சங்கோஜப்பட எதுவுமேயில்லை.



தபாலில் ஆங்கிலம் பயில அனைவரும் "ஆசியன் இன்ஸ்டிட்யூட்டையே" அணுகுவது ஏன்?

தபாலில் 'ஆங்கிலம்' பயில அனைவரும் ஆசியின் இன்ஸ்டிட்யூட்டையே அணுகுவதற்கு பல அனுகூலமான காரணங்கள் உள்ளன. என்ன அவை?...

நடைமுறையில் சிலர் M.A., படித்த ஆசிரியராக இருப்பர். அவரிடம் உயர்ந்த புலமையும் இருக்கும். ஆனால் அவர் கற்றுத் தரும் பாடங்கள் கடினமாக இருக்கும். எவருக்கும் புரியாது. புரியும் விதத்தில் M.A., படித்தவருக்கு கற்றுத்தரத் தெரியாது. உதாரணமாக, கர்நாடக இசை உயர்ந்த இசைதான். ஆனால் புரியும் வண்ணம் கற்றுக் கொடுத்தால்தானே அதனை எளிதில் கற்க இயலும்.

மெல்லிசை அனைவருக்கும் புரியும். எங்கள் பாடங்கள் மெல்லிசை போல் அமைந்தவை. பாமரனுக்கும் புரியும். அது மட்டுமல்ல; படிக்கப் படிக்க ஆவலைத் தூண்டும். நீங்கள் எமது பாடத்தின் பக்கங்களை பரபரப்போடு புரட்டுவீர்கள். தொடர் கதை படிப்பதைப் போன்ற மனநிலையில் தாங்கள் மாதா மாதம் பாடங்களை தபால்காரரிடம் பெறுவீர்கள்.

ஆரம்பக் கல்வியிலேயே ஆங்கிலத்தை சரிவர படிக்காதவரா நீங்கள்? மேல்நிலைப் பள்ளியில் மேலோட்டமாக கவனமின்றி ஆங்கிலத்தை கற்றவரா நீங்கள்?

பள்ளி அல்லது கல்லூரியில் மனப்பாடம் செய்து படித்துவிட்டு இப்போது ஆங்கிலத்தில் பேச முடியவில்லையே என வருந்துபவரா நீங்கள்?

எந்த நிலையினராக நீங்கள் இருந்தாலும், போற்றத்தக்க விதத்தில் ஆங்கிலத்தில் பேசவும், எழுதவும் எளிய தமிழில் தபாலில் மிகச்சிறந்த பயிற்சி பெறலாம். இது தொடர்பான இலவச விபரங்கள் பெற ஒரு போஸ்ட் கார்டில் உங்கள் முகவரியை எழுதி அனுப்புங்கள். உங்கள் வீடு தேடி இலவச விபரங்களை அனுப்பி வைக்கிறோம்.

ஆசியன் இன்ஸ்டிட்யூட்
பொன்மேனி (P.O) மதுரை-625010

REGISTERED NO. M. 4392

Registered as Newspaper in Srilanka